# அந்திமழை பொழிகிறது



முத்துலட்சுமி ராகவன்

GOODWILL'S

முதற் பதிப்பு: ஏப்ரல், 2011
உரிமை: ஆசிரியருக்கு ©

ANTHI MAZHAI POLIKIRATHU

By: muthuLakshmi raghavan

First Edition: April, 2011

No. of Pages: 176

Paper used: 11.6 N.S. Book Print

விலை ரூ. 75/-

THIRUMAGAL NILAYAM
Old No.28, New No.13,
Sucons Appartments,
Sivapragasam Street,
T.Nagar, Chennai-600 017
Phone: 044-24342899, 24327696
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

Laser Typeset at: Sivaa Graphics, Chennai-94. Ph: 8939475707

Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166, 28446891

# 1

'திருமகள் தேடி வந்தாள் - இந்தப்
புதுமனை குடி புகுந்தாள்...
குலமகள் கோலத்திலே - தேவி
கோவில் கொண்டாட வந்தாள்...'

தொலைக்காட்சிப் பெட்டியில் தேன்கிண்ணம் நிகழ்ச்சியில் பழைய பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. பாடலை ரசித்தபடி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தாள் கோமளவள்ளி.

''கோமளா... கோமளா...''

ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சுப்ரமணி சத்தம் கொடுத்தார்.

''அடடா... இதோ இருக்கிற ஹாலில் இருந்த சமையலறை என்ன ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திலா இருக்கிறது... ஏன் இப்படிக் கத்துகிறீங்க?''

''ஏண்டி... கட்டின புருஷன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் உனக்குக் கத்துகிறது போல இருக்கா?''

''எட்டு ஊருக்குக் கேட்கிறது போல கூப்பாடு போட்டுவிட்டு நியாயமா பேசுகிறீங்க? இப்ப எதுக்கு என்னைக் கூப்பிட்டீங்க? எனக்கு அடுப்படியில் ஆயிரம் வேலைகள் இருக்கு. நான் அதைக் கவனிப்பேனா... இல்லை சேடிப் பெண்போல உங்க பக்கத்தில் நின்று சாமரம் வீசிக் கொண்டிருப்பேனா?''

"நீ சாமரம் வீசினாலும் அப்படியே சில்லுன்னுதான் இருக்கும். அடிப் போடி..."

"ஏன் சில்லுன்னு இல்லாமல் வேறு எப்படி இருக்குமாம்? நெருப்புக் கங்கை வாரிக் கொட்டியது போல இருக்குமா?

"யாருடி இவ... அடுப்படியில் வேலை செய்தால் அனல் பறக்கத்தான் பேசணுமா. ஏண்டி மனுஷனுக்கு ஒரு வாய் காபி வேணும்னு கூப்பிட்டால் இப்படித்தான் காளி அவதாரம் எடுப்பியா?"

"ஒரு வாய் காபியா... அதுசரி. காலையிலிருந்து இப்படிக் கேட்டே எட்டு தம்ளர் காபி குடிச்சாச்சு. இன்னும் காபி வேண்டுமா? அது என்ன ஒரு வாய் காபின்னு கேட்கறீங்க. ஒரு ஸ்பூன் காபியைக் குடுத்தால் குடித்துடுவீங்களா...?"

"போடி... நீயும் உன் காபியும். உன் காபி எனக்கு வேண்டாம். போய் வேலையைப் பாரு..."

கோபத்துடன் சுப்ரமணி பேப்பரைப் போட்டுவிட்டு எழுந்து அறைக்குள் சென்றுவிட்டார். சற்று நேரத்தில் அறைக்குள் காபியின் மணம் கமழ்ந்தது. திரும்பிப் பார்த்தார். கோமளவள்ளி காபிக் கோப்பையை வைத்துவிட்டுப் போனாள்.

"ஏய்... நில்லுடி..."

"என்ன?"

"இவ்வளவு சடைச்சுக்கிட்டு நீ காபி கொடுக்க வேணாம். நான் குடிக்கவும் வேணாம். எடுத்துக்கிட்டுப் போ..."

"அடடா... கல்யாண வயசில் வீட்டில் பொண்ணு இருக்கிறாள். காலேஜ் படிக்கும் பையன் இருக்கிறான். என்னவோ நேற்று இந்த நேரம் கல்யாணம் முடிஞ்ச புதுமாப்பிள்ளை போல சிலுப்பிக்கிட்டு நிற்கறீங்களே. நல்லாதான் இருக்கு உங்க நாடகம்."



கோமளவள்ளி நொடித்த நொடிப்பில் அடங்கிப் போன சுப்ரமணி காபியை எடுத்து ஒரே மூச்சில் குடித்தார்.

"துர்கா என்ன செய்கிறாள்?"

"வேறு என்ன செய்வாள். ஆபீஸுக்கு கிளம்பிக் கொண்டு இருக்கிறாள்..."

"நான் கேட்கச் சொன்னதை அவளிடம் கேட்டாயா.?"

"ம்ம். கேட்டேன்."

"என்ன சொல்கிறாள்? நாளைக்கு அவங்களை பெண் பார்க்க வரச் சொல்லி விடவா?"

"வேண்டாம் என்கிறாள்."

"ஏன் வேண்டாமாம்?"

"என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்? போய் உங்க செல்லப் பெண்ணையே கேளுங்க. என் வாயைப் பிடுங்காதீங்க..."

"ஏண்டி... பெத்த தாய்... நீ பேசாமல் நான் போய் பெண்ணிடம் எப்படிடி பேசுவேன்..."

"ஏன்? வாயால்தான் பேசணும். எனக்கு நல்லா வந்திருக்கும் வாயில... ஆமாம். சொல்லிவிட்டேன். அவள் என்னடாவென்றால் அவளுக்கு கல்யாணமே வேண்டா முன்னு சொல்கிறாள். நீங்க என்னடான்னா தினமும் ஒரு மாப்பிள்ளை வீட்டை பெண்பார்க்க வரச் சொல்கிறீங்க. உங்க இரண்டு பேருக்கும் இடையில் நான் வந்து மாட்டிக் கொண்டு விழிக்கிறேன். உரலுக்கு ஒருபக்கம் இடியின்னா மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி. என் கொடுமையை நான் எங்கே போய் சொல்லி அழுவது..."

"என்னடி கோமளா. நீயும் என்னைப் புரிந்துகொள்ள மாட்டேன்கிற. அவளுக்கு வயது இருபத்துநாலாகி விட்டதுடி. எனக்கு ரிட்டயர்மெண்ட் வருவதற்குள் இவள் கல்யாணத்தை முடித்து செய்ய வேண்டிய கடமைகளை

செய்து முடித்து விட்டேன்னா எனக்கு நிம்மதியாக இருக்கும். ரமணன் இப்போதுதான் இன்ஜினீயரிங் இரண்டாவது வருஷம் படிக்கிறான். அவனுடைய படிப்பை முடித்துவிட்டு வந்து அவன் கை கொடுக்கும் வரை நான் காத்திருக்க முடியுமா?''

''அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்கிறீங்க?''

''பருவத்தில் பயிர் செய்னு பெரியவங்க தெரியாமலா சொல்லியிருக்கிறாங்க?''

''அவள் சொல் பேச்சு கேட்கணுமில்ல. 'நான் வேலைசெய்து சம்பாதிக்கிறேன். உங்களுக்கு பாரமாகவா இருக்கிறேன்'னு கேள்வி கேட்கிறாள். ரொம்பவும் நாம் கல்யாணத்துக்கு வற்புறுத்தினால் லேடீஸ் ஹாஸ்டலுக்கு போய்விடுவேன்னு மிரட்டுகிறாளே...''

''அப்படியா சொல்கிறாள்?''

''அப்படித்தான் சொல்கிறாள்.''

கோமளவள்ளி அலுப்புடன் பதில் சொல்லிவிட்டு காலி காபிக்கோப்பையை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்று விட்டாள்.

மகளைப் பற்றிய கவலை மனதை அழுத்த... குளித்து முடித்து அலுவலகம் போகத் தயாராகி சாப்பாட்டு மேஜைக்குப் போன சுப்ரமணி அங்கே குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்த மகளைப் பார்த்தார்.

அன்றுதான் பூத்த புது மலர் போன்ற ஒரு வனப்பு அவளிடம் குடி கொண்டிருந்தது. என்ன ஒன்று, அவளுடைய மலர்முகம் வாடிப் போயிருந்தது.

'ஏன் இப்படி எதையோ பறிகொடுத்தது போலவே இருக்கிறாள்.'

மகளுக்கு எதிரே அமர்ந்தார் சுப்ரமணி. கோமளவள்ளி அவர் முன் தட்டை வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள்.



''சாப்பிடுங்க...''

அவர், மனைவியின் பேச்சு காதில் விழாதது போல மகளை அழைத்தார்.

''துர்கா...''

அவள் தூக்கிவாரிப் போட்டது போல் நிமிர்ந்தாள். அவள் கண்களில் மெலிதான சோகம் குடிகொண்டிருந்தது.

''என்னப்பா?''

''உடம்பு சரியில்லையா?''

''அப்படியெல்லாம் இல்லைப்பா. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்.''

''அப்படி உன் வாய்தான் சொல்லுது. ஆனால், ஆள் வாடிப் போய் தெரிகிறாயே. என்னம்மா விஷயம்?''

''ஒன்றும் இல்லையே.''

அவள் சட்டென்று எழுந்து போய் விட்டாள். சுப்ரமணி பெருமூச்சுடன் மனைவியைப் பார்த்தார்.

''இப்படித்தாண்டி எதைக் கேட்டாலும் மழுப்பலாகவே பதில் சொல்கிறாள். ஒரு நாளா... இரண்டு நாளா... இரண்டு வருஷமாய் இப்படிப் பித்துப் பிடித்தது போல் இருக்கிறாளே...''

''நானும் எப்படியெப்படியோ கேட்டுப் பார்த்துவிட்டேன். பதில் சொன்னால்தானே. சொல்லாமல் இப்படிப் பேசி மழுப்புகிறவளிடம் எப்படி பதிலை வாங்குவது?''

''இப்படியே இவளை விட முடியாது கோமளா...''

''எனக்கும் அது தெரிந்துதான் இருக்கிறது. ஆனால், என்ன செய்து இவளை நம் வழிக்கு கொண்டு வருவதுன்னுதான் தெரியலை. அதைத்தான் நான் ராவும் பகலுமாய் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

அப்போது அலட்டலாய் அங்கே வந்து சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த ரமணன், மேஜையின் மேல் விரல்களால் தாளம் போட்டபடி உற்சாகமாய் வினவினான்.

''ஏன்ம்மா... எனக்குத்தான் தலையெழுத்து. படிக்க வேண்டும், பரீட்சை எழுத வேண்டும், கேம்பஸ் இன்டர் வியூவில் செலக்ட் ஆக வேண்டும்னு. நான் ராப்பகலாய் யோசிக்கிறதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால், நீங்கள் ஏன் ராப்பகலாய் யோசிக்கணும்? உங்களுக்கென்ன தலை யெழுத்தா?''

''ஆமாம்டா கண்ணா... உன்னையும் உன் அக்காவையும் பெற்றுவிட்டேனில்லையா... அந்தத் தலையெழுத்துதான்.''

''ஏம்மா... எனக்கும் என் அக்காவிற்கும் என்ன குறை? என் அக்கா எம்ஸிஏ படித்திருக்கு. ஜம்முன்னு ஒரு பெரிய கம்பெனியில் வேலை பார்த்து கைநிறைய சம்பாதிக்குது. நான் இன்ஜினீயரிங் படிக்கிறேன். நாளைக்கு நானும் கைநிறைய சம்பாதிப்பேன். இப்படிப்பட்ட பிள்ளைகளைப் பெற்றதற்கு பெருமைப்படுவீங்களா, அதை விட்டுவிட்டு அலுத்துக் கொள்கிறீங்களே...''

''உன் அக்கா இப்படி காலம் பூராவும் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் வேலை பார்த்து கைநிறைய சம்பாதித்து என்னடா பிரயோஜனம்?''

''ஓ! நீங்க அந்த லைனில் வருகிறீங்களா?''

''ஆமாம்டா... ஆமாம்.''

''இப்ப அக்காவின் கல்யாணத்துக்கு என்னம்மா அவசரம்?''

''டேய். நானும் உன் அப்பாவும் ஏற்கெனவே நொந்து போய் இருக்கிறோம். நீ வேற வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதே. கரண்டியாலேயே மண்டையில் போட்டு விடுவேன். வாயை மூடிக் கொண்டு சாப்பிடு...''



''இது என்னம்மா அராஜகமாக இருக்கிறது. வாயை மூடிக் கொண்டு எப்படிச் சாப்பிட முடியும்?''

''இது வேறா... சரிடா. பேச்சை நிறுத்திவிட்டு சாப்பிடு...''

''அம்மா! எனக்கு நீங்க டிபன்கூட தர வேண்டாம். ஆனால், என்னைப் பேசாதேன்னு மாத்திரம் சொல்லாதீங்க. பேச முடியாமல் எப்படிம்மா சாப்பிட முடியும்?''

''அதுதானே. நீ உண்ணாவிரதம்கூட இருப்பாய். மௌனவிரதம் இருக்க மாட்டாயே...''

''தெரிந்து கொண்டால் சரி. டிபனைப் போடுங்க...''

தாயிடம் வம்பிழுத்துக் கொண்டிருந்த ரமணன், கார்கோ ஃபுல் சர்ட்டும் ஜீன்ஸுமாக இருந்தான். துர்காவின் ஜாடை மெலிதாக அவனிடம் தெரிந்தது. கவர்ச்சியாக இருந்தான்.

''அம்மா... கல்யாணம் என்பதே சிறை. அதில் அக்காவை உடனடியாக அடைக்காவிட்டால்தான் என்ன? கொஞ்ச நாள் அக்கா சுதந்திரப் பறவையாய் அலையட்டுமே...''

கோமளவள்ளி மகனை முறைத்தாள். அவள் பார்வையில் அனல் பறந்தது. போதாதகுறைக்கு சுப்ரமணி மகனை ஒரு தினுசாகப் பார்த்தார்.

சாப்பிட்டுக் கொண்டே லேசாக விழியுயர்த்தி தாயையும் தந்தையையும் பார்த்த ரமணன், நிலவரம் புரிந்தவனாக வாயை மூடிக் கொண்டான்.

''உனக்குக் கல்யாணம் பண்ணும் நேரம் வரும்போது மறக்காமல் இந்த டயலாக்கைச் சொல்லு. உன்னை எத்தனை காலம் வேண்டுமானாலும் சுந்திரப் பறவையாய் அலைய விடுகிறேன். என் மகளின் கல்யாண விஷயத்தில் தலையைக் கொடுத்தால் தெரியும் சேதி...''

''அம்மா... பிள்ளையின் மேல் கோபம் இருந்தால் அதை வார்த்தையில் மட்டும்தான் காட்ட வேண்டும். மனதில்

வைத்துக் கொள்ளக் கூடாது... பூரி நன்றாக இருக்கிறது. இன்னும் இரண்டைப் போடுங்க...''

''நீயும் இதை நினைவில் வைத்துக் கொள். நாக்கை வளர்த்து வைத்திருந்தால் அதைச் சாப்பாட்டில் மட்டும்தான் காட்ட வேண்டும். பேச்சில் காட்டக் கூடாது. புரிகிறதா?''

புரியவில்லை என்று சொல்ல ரமணன் என்ன முட்டாளா? அவன் தலையை ஆட்டிவிட்டு பூரியை காலி செய்தான்.

## 2

**சா**ப்பாட்டு அறையில் நடந்து கொண்டிருந்த வாக்கு வாதம் துர்காவின் காதுகளிலும் விழத்தான் செய்தது. அவள் சுடிதாரின் துப்பட்டாவை சரிசெய்த வண்ணம் தன் அறையிலிருந்து தாயைப் பார்த்தாள். கோமளவள்ளியின் கவலையை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், அவளை அவளின் மனதிலிருக்கும் அனலை கோமள வள்ளிக்கு எப்படிப் புரியவைப்பது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

'கல்யாணமா... இன்னொருவனுடனா... அது முடியுமா?'

துர்காவின் கண்கள் கலங்கின. அவள் இமைகளைச் சிமிட்டி கண்ணீரை அடக்கியபடி தன் கைப்பையை எடுத்து சரிபார்த்தாள். அறைவாசலில் நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தாள்.

''மதியம் டிபன் வைத்திருக்கிறேன். மீதம் வைக்காமல் சாப்பிட்டு விடு...''

யாரோ ஒருவரிடம் கூறுவது போல சுவரைப் பார்த்துக் கொண்டே கூறிவிட்டுச் சென்ற அன்னையைப் பார்க்கும் போது துர்காவின் மனம் வலித்தது.



இப்போதெல்லாம் கோமளவள்ளி... துர்காவுடன் சரியாகப் பேசுவதில்லை. மகளின் திருமண மறுப்பு... அவளின் மனதில் சந்தேக விதைகளைத் தூவியிருந்தது. அவள் ஜாடைமாடையாக துர்காவிடம் விசாரித்துப் பார்த்து விட்டாள்.

''பக்கத்து வீட்டு ஜானகி காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டாளாம் துர்கா...''

''அப்படியா...''

''இந்தக் காலத்தில் காதல் கல்யாணம்கிறதெல்லாம் சகஜமான விஷயம்.''

''நிஜம்தான்...''

''காதல் என்ன கொலைக் குற்றமா?''

''இல்லைதான்...''

''நாளைக்கு நம்ம ரமணன் யாரையாவது காதலிக் கிறேன்னு சொல்லிக்கிட்டு வந்து நிற்கிறான்னு வை... நம்மால் என்ன செய்ய முடியும்? நல்ல குடும்பமான்னு விசாரித்துவிட்டு கட்டித்தான் வைக்க வேண்டும்.''

இதைச் சொல்லும்போது மட்டும் ஜாக்கிரதையாக மகன் இல்லாத நேரம் பார்த்துச் சொல்வாள் கோமளவள்ளி. மகனின் மேல் அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை.

'சும்மாவே இவன் எதிர்வீட்டுப் பெண், பக்கத்து வீட்டுப் பெண்ணுன்னு பார்வையை அலைபாய விட்டுக்கிட்டு இருக் கிறான். இதில் நான் வேறு கிரீன் சிக்னல் கொடுத்து விட்டால் அவ்வளவுதான்... நாளைக்கே யாராவது ஒருத்தியை காதல் பண்ணுகிறேன்ம்மா என்று வந்து நின்றுவிடுவான்...'

இப்படி யோசித்து யோசித்து மகளின் வாயைப் பிடுங்க கோமளவள்ளி பேசிப் பார்த்தாலும் துர்கா வாயைத் திறக்கவே மாட்டாள்.

''ம்ம்ம்...'' என்ற முணுமுணுப்போடு எழுந்து போய் விடுவாள்.

இதற்குமேல் மகளிடம் எப்படித் தேங்காயை உடைத்தது போல 'நீ யாரையாவது காதலிக்கிறாயா?' என்று கேட்பது. கோமளவள்ளி தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுவாள்.

தாயின் கேள்விகள் புரியாமலிருக்க துர்கா ஒன்றும் முட்டாள் இல்லையே. ஆனால், கோமளவள்ளியின் கேள்விக்கு அவள் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

'ஆமாம்' என்று சொன்னால்...

'யார் அவன்?' என்ற கேள்வி எழும்பும்.

'இல்லை...' என்று சொல்ல துர்காவினால் முடியவில்லை. அது உண்மையல்லவே... துர்காவின் மனதில் காதல் இருப்பது நிஜம். அது அவளை அணுஅணுவாய் கொன்று கொண்டிருப்பதும் நிஜம். அந்தக் காதலை மறக்கவும் முடியாமல், நினைக்கவும் வழியில்லாமல் அவள் தினம் தினம் செத்துக் கொண்டிருப்பதும் நிஜம்.

இதை எப்படி அவளால் பெற்றவர்களிடம் சொல்ல முடியும்? மனதில் இதைப் புதைத்துக்கொண்டு வெளியில் சொல்ல முடியாமல் நடமாடும் வேதனை எப்படிப்பட்டது என்று அவர்களுக்குத் தெரியுமா?

துர்கா தனக்குள் செத்துக் கொண்டிருந்தாள். அவனை மறக்கவும் முடியாமல் நினைக்கவும் மனமில்லாமல் தனக்குள் துடிதுடித்துக் கொண்டிருந்தாள். துரத்தும் அவனின் நினைவுகளில் இருந்து தப்பிக்க வழிதெரியாமல் அந்த நினைவுகளில் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள்.

கண்களை மூடினால் அதில் விஷமச் சிரிப்புடன் அழைக்கும் பார்வையுடன் அவனது முகம் தோன்றிவிடும். இமை மூடாமல் விழித்திருந்தால் எதிரே அவன் அமர்ந்து புருவங்களை உயர்த்துவது போன்ற பிரமை ஏற்படும்.



உறங்கவும் முடியாமல், விழித்திருக்கவும் வழிதெரியாமல் துர்கா வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள். தன்னுடைய வேலைகளை மட்டுமின்றி கூட வேலை செய்பவர்களின் வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து கொடுத்தாள்.

''ஏண்டி... உனக்கென்ன பொதுச் சேவை செய்யும் சமூக சேவகின்னு நினைப்பா? உன் வேலையைச் செய்... வாங்குகிற சம்பளம் செரிக்கும். ஊரார் வேலைகளை யெல்லாம் ஏன் செய்கிறாய்? நீ என்ன கேணையா?''

அவளது அலுவலகத் தோழி ரேவதி சீறுவாள். துர்கா கண்டுகொள்ள மாட்டாள். மெல்லிய புன்முறுவலுடன் தன் வேலையைத் தொடருவாள்.

''ஏண்டி... இப்படி நீ உயிரைக் குறைத்துக் கொள்ளும் அளவிற்கு உன் ஆள் என்ன மன்மதனா?''

''அவன் இப்போது என் ஆள் இல்லை...''

''ஒரு காலத்தில் உன் ஆளாக இருந்தவன்தானே...''

''அப்படி நான் நம்பிக் கொண்டிருந்தேன். அவன் என் நம்பிக்கையை குலைத்து நாசமாக்கி விட்டான்.''

''அதற்கு ஏன் கம்ப்யூட்டரின் மவுசைப் பிடித்து நொறுக்கு கிறாய்? கையை எடு. உன்னோடு பெரிய ரோதனைடி இவளே... இப்படி உயிரை அவன்மேல் வைத்துவிட்டு... இப்போது தவித்து என்ன பிரயோஜனம்? காதலிக்கும்போதே பார்த்துக் காதலித்திருக்க வேண்டாமா?''

''பார்க்காமலா காதலித்தேன்?''

இதைச் சொல்லும்போது துர்காவின் மனதில் மென்மை பரவியது. மனதிற்குள் அவனது சிரிக்கும் பார்வை உதித்தது. என்ன மாதிரியான பார்வை அது?

ஆளை அடித்துப் போடும் பார்வை... வசீகரிக்கும் பார்வை. சிநேகிக்க வைக்கும் பார்வை. அலட்சியமாய் பார்ப்பது போல்

ஆகர்ஷிக்கும் பார்வை. துளைக்கும் பார்வை. துணைக்கு வருகிறேன் என்று சொல்லும் பார்வை.

அவனது பார்வையை நினைத்துப் பார்க்கும்போதே துர்காவின் நெஞ்சம் இனித்தது. அவளது முகத்தில் செம்மை பரவியது. மனதில் மழை பொழிந்தது. மனம் கிறங்கியது. அவளது கை வேலை செய்வதை நிறுத்திவிட... அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரேவதி... மெதுவான குரலில் கூறினாள்.

''நான் ஒன்று சொன்னால் நீ கோபித்துக் கொள்ளக் கூடாது துர்கா...''

''சொல்லு...''

''உன்னால் அவனை மறக்க முடியாது துர்கா. அவனை நினைக்கும்போதே இப்படி உருகி விடுகிறாயே. மறந்து உன்னால் எப்படி வாழ முடியும்?''

''ஏன் இப்போது வாழவில்லையா.?''

''இப்போது அவனை மறந்துவிட்டா வாழ்கிறாய்.?''

ரேவதியின் கேள்வி துர்காவின் மனதைத் தாக்கியது. அவள் மனம் அதிர்ந்தது.

*'உனக்குப் புரியாத என்பிரியம்.*
*என் பிரிவின்போது*
*உனக்குப் புரியும்...'*

அவன் விலகிச் செல்லும்போது கொடுத்த கடிதத்தில் இருந்த கவிதை வரிகள் அவள் மனதை அலைக்கழித்தன. அவள் அமைதியின்றி தவித்தாள்.

அவனை மறந்துவிட்டா அவள் வாழ்கிறாள்? இல்லையே... காலையில் கண் விழித்ததிலிருந்து இரவு நடுநிசிக்கு மேல் தன்னையறியாமல் உறங்கும் வரை அவனது நினைவுகள் தானே அவளது நெஞ்சை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. தினமும் தூங்கும் அந்த இரண்டு மூன்று மணி



நேரத் தூக்கத்திலும் கனவில் வந்து அவன் அவளை அலைக்கழிக்கிறானே.

கண்ணதாசன் அழகாகத்தான் இந்தத் தவிப்பை கவிதை வரிகளில் வடித்திருக்கிறான்...

*'நினைக்கத் தெரிந்த மனமே - உனக்கு*
*மறக்கத் தெரியாதா...*
*பழகத் தெரிந்த உயிரே - உனக்கு,*
*விலகத் தெரியாதா...'*

அவளால் அவனை மறக்க முடியவில்லை. அதுதான் உண்மை. மறக்கத்தான் முயன்றாள். அது நடக்கவில்லை.

''வேண்டாம் ரேவதி... என்னைப் புண்படுத்தாதே...''

''இத்தனை வேதனையும் எதற்காக துர்கா... அவன் நல்லவனில்லை என்று அறிந்த பின்னுமா அவனை நீ இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?''

''காதல்... நல்லவரா, கெட்டவரா என்று பார்த்து வருவதில்லை ரேவதி. அப்படி யோசித்து தேர்வு செய்தால் அதற்குப் பெயர் காதல் இல்லை. அவன் கெட்டவன் என்று தெரிந்த பின்னால் அவன் செய்த துரோகத்தை என்னால் மன்னிக்க முடியவில்லை. அதை மறக்கவும் முடிய வில்லை. அதனால்தான் அவனை விட்டுப் பிரிந்தேன்...''

''இப்போது அவனை மறக்க முடியாமல் கிடந்து தவிக்கிறாய்.''

துர்கா பதில் சொல்லாமல் மீண்டும் கீபோர்டில் விரல்களை படரவிட்டாள். மனம் வேலையில் இறங்க மறுத்தது.

''எந்த நேரத்தில்டி... அவனை நீ பார்த்துத் தொலைத்தாய். இந்த பாடு படுகிறாயே. என்னால் உன் துயரை கண் கொண்டு பார்க்க முடியவில்லைடி...''

எந்த நேரத்தில் துர்கா அவனை முதன்முதலில் பார்த்துத் தொலைத்தாள். அந்த நேரம் அவள் மனக் கண்ணில் வந்து நின்றது.

அது ஒரு அந்தி நேரம்... மழை பொழிந்து கொண்டிருந்த சாரல் காலம். குடை கொண்டு வராததால் மழைக்கு சாலையோர மரம் ஒன்றின்கீழ் ஒதுங்கியவள்... தன்னையறியாமல் அருகில் நின்றுகொண்டிருந்தவனின் மேல் மோதி விட்டாள்.

"ஓ! ஐ ஆம் ஸாரி..." அவள் வெட்கத்துடன் கூறினாள்.

"இட்ஸ் ஆல்ரைட்." அவன் அவள் முகம் பார்க்காமல் கண்ணியமாக திரும்பிக் கொண்டான்.

காற்று பலமாக அடிக்க... சாரல் அவர்கள் பக்கம் திரும்பி பெய்தது. மழையில் நனைந்திருந்த முகத்தைத் துடைத்தபடி திரும்பியவனின் பார்வையில் முகமெல்லாம் மழைத் துளிகள் இருக்க... பனியில் குளித்த மலர் போல் நின்று கொண்டிருந்த அவளின் நடுங்கிய தோற்றம் பட்டது.

அந்த நேரம் பார்த்து இடி இடிக்க... அவள் பயந்து போய் கண்களை இறுக மூடி காதுகளைப் பொத்திக் கொண்டு "அம்மா..." என்று வாய்விட்டு சொன்னாள்.

## 3

மிரள்கின்ற பெண்ணைப் பார்த்தால் ஆண்கள் ஏன் மயங்கி விடுகிறார்கள் என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. மருண்ட விழிகளுடன் அவள் மிரண்டு நின்ற தோற்றத்தைக் கண்டு அவனுக்கு அவள் மேல் ஈர்ப்பு ஏற்பட்டது.



"பயப்படாதீங்க... நான் உங்கள் பக்கத்தில் நிற்கிறேனில்ல..." என்று ஆதரவாக அவன் கூறினான்.

துர்காவிற்கு இன்னும் வெட்கமாகிவிட்டது. அறிமுகமற்றவனின் அருகே நின்றுகொண்டு பயப்படுகிறோமே என்று நினைத்தாள். எதையாவது சொல்ல வேண்டுமே என்ற நினைவில்...

"ஐ ஆம் ஸாரி..." என்றாள்.

"எதற்கு இப்போது ஸாரி சொல்கிறீங்க..." அவன் சிரித்தான்.

'ஆமாம்தானே. எதற்கு இப்போது இவனிடம் ஸாரி சொன்னேன்.' அவள் நகம் கடித்தாள்.

அவளது சங்கடத்தை புரிந்துகொண்டவனாக, அவன் வேறு பேச்சிற்கு தாவினான்.

"இப்படி ஈவினிங் டயத்தில் மழை வந்து விட்டதே..."

"ஆமாமாம். காலையில் நான் கிளம்பும்போது வெயில் சுள்ளென்று அடித்தது. அதனால்தான் குடை எடுத்துக் கொள்ளவில்லை..."

"படிக்கிறீங்களா?"

"ம்ம்ம்..."

"என்ன படிக்கறீங்க?"

"எம்ஸிஏ ஃபைனல் இயர்."

"பெரிய படிப்புதான்..."

'நீயென்ன செய்கிறாய்?' என்று மனதில் நினைத்துக் கொண்ட கேள்வியை கேட்க முடியாமல்... அவள் மழை நின்றுவிட்டதா என்று சாலையைப் பார்க்க... அவளது மனதைப் படித்தவன் போல் அவனே பதில் சொன்னான்.

"நான் சாஃப்ட்வேர் இன்ஜினியர். ஐடி ஃபீல்டில் வொர்க் பண்ணுகிறேன்..."

"அப்படியா... என்ன இந்த மழை விடவே மாட்டேன் என்கிறது. இப்படி வந்து மழையில் மாட்டிக் கொண்டேனே..."

"உங்களிடம் டூவீலர் இல்லையா?"

"இருக்கிறது. இன்றைக்கு பார்த்து வண்டி ரிப்பேர்... உங்களிடம் வண்டி இல்லையா?"

"என்னிடம் ஃபோர் வீலர்தான் இருக்கிறது..."

"ஃபோர் வீலரா?"

"காரைச் சொன்னேன்ங்க..."

"அப்படியா..."

"அப்படித்தான்..."

"உங்க காருக்கு என்ன ஆச்சு?"

"ஒன்றும் ஆகவில்லை... என் ஃப்ரெண்ட் ஒருவன் காரை இரவல் கேட்டான். கொடுத்தேன். ஆட்டோ பிடிக்க வெளியில் வந்தால் மழை பிடித்துக் கொண்டது. மாட்டிக் கொண்டேன்."

மாலை நேர மழைக் காற்று, குளிர் தந்து அவர்களின் உடலைத் தழுவிச் சென்றது. அவர்கள் நின்றுகொண்டிருந்த மரத்தின் கிளைகளில் இருந்து மழைத்துளிகள் சொட்டுச் சொட்டாய் அவர்களின் தோள் தொட்டு நனைக்க... அவன் மனம் சிலிர்த்துக் கொண்டான். அவளுக்குள்ளும் அந்த சிலிர்ப்பு பரவுவதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"காரைக்கூட இரவல் வாங்குவாங்களா என்ன..." அவள் தன் உணர்வுகளை மறைத்துக் கொள்ள வேண்டிப் பேசினாள்.

"என்னங்க இது... நீங்க 'பையா' படம் பார்க்கவில்லையா?"

"பார்த்தேனே..."



"பார்த்துமா இப்படி ஒரு கேள்வியைக் கேட்கறீங்க?"

"ஏங்க... நான் தப்பாக கேட்டுவிட்டேனா?"

"அந்தப் படத்தில் ஹீரோ இரவல் காரில்தான்ங்க ஹீரோயினை மும்பைக்கு கூப்பிட்டுக் கொண்டு போவான்..."

அவன் சொன்ன விதத்தை ரசித்துச் சிரித்தாள் துர்கா. அந்த மழை நேரத்தில் அவள் சிரித்தது இன்னும் குளிரை அதிகப்படுத்தியது போல இருக்க, அவன் தன் வாய்க்குள் மெலிதாக ஒரு பாடலை ஹம் செய்தான். அதன் ராகம் துர்காவை கவர... அவள்,

"இது என்ன பாட்டு?" என்று வினவினாள்.

"பழைய பாடல். ரொம்பப் பழைய பாடல் இல்லை. இந்தப் பாடலைப் படத்தில் பாடிய ஹீரோ இன்றும் இளமையானவர்."

"கமல் சாரைச் சொல்கிறீங்களா?"

அவள் சட்டென்று கேட்கவும், அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"எப்படிக் கண்டுபிடித்தீங்க..."

"இது என்ன பெரிய விஷயமா? செம ஈஸி..."

"ஓ! அப்படின்னா... நான் பாடிய பாடலையும் கண்டு பிடியுங்க, பார்க்கலாம்."

"ஒரு க்ளூ கொடுங்க. கண்டுபிடிக்கிறேன்..."

"இந்த அந்தி நேரத்து மழையைப் பற்றிய பாடல்... உங்கள் பாஷையில் சொல்வதாக இருந்தால் செம ஈஸியான க்ளூ இது."

"ம்ம்... இந்தப் பாடலா?"

"எந்தப் பாடல்... பாடிக் காட்டினால்தானே தெரியும்?"

"எனக்குப் பாட வராதுங்க..."

"அதை கேட்கிற நான்தான் சொல்ல வேண்டும்."

"இல்லீங்க. வேண்டாம்..."

அவள் நாணத்துடன் கொட்டிக் கொண்டிருந்த மழையைப் பார்த்தாள். அவன் வற்புறுத்தும் குரலில் கூறினான்.

"என்னங்க நீங்க... பாட்டுப் பாட பயப்படுகிறீங்க..."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை."

"பயமில்லைன்னா பாடிக் காட்டுங்க..."

*"அந்தி மழை பொழிகிறது...*
*ஒவ்வொரு துளியிலும்...*
*உன் முகம் தெரிகின்றது..."*

அவன் மெல்லிய குரலில் பாடியபோது அவளது முகத்திலும் குரலிலும் தொனித்த நளினத்தை அவன் ரசித்தான். அவள் பாடி முடிக்கவும். மழைவிடவும் சரியாக இருக்க...

"மழை விட்டுவிட்டது... வருகிறேன்" என்று அவள் சாலையில் இறங்கப் போனாள்.

"எப்படிப் போவீங்க..."

"பஸ்ஸில்தான்."

"பஸ் ஸ்டாப் இங்கே இல்லையே..."

"அடுத்த தெருவில் இருக்கிறதே..."

"கொஞ்சம் பொறுங்க. ஒரு ஆட்டோவைப் பிடித்து உங்கள் வீட்டில் விட்டுவிட்டு நான் போகிறேன்..."

அவள் வியப்புடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள். இவன் யார்? அவள் யார்? அவள் எப்படிப் போனால் இவனுக் கென்ன?

"அறிமுகமில்லாதவங்ககூட ஆட்டோவில் சேர்ந்து போய் வீட்டில் இறங்க முடியுமா? என் வீட்டில் என்ன நினைத்துக் கொள்வாங்க?"



"எதுவும் நினைத்துக் கொள்ள மாட்டாங்க... இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது?"

"நிறைய இருக்கிறது... உங்களுக்கு அது புரியாது."

அவனுக்குப் புரியத்தான் இல்லை. அவ்வளவு நேரமும் அறிமுகமில்லாத ஒருத்தியுடன் பேசிக்கொண்டிருக்கிற எண்ணமே அவனுக்குள் தோன்றவில்லை. ஆனால், அவன் அறிமுகம் இல்லாதவனாமே.

"ஏங்க... உங்க பெயரைக்கூடச் சொல்லாமல் போகிறீங்களே."

"என் பெயர் உங்களுக்கு எதற்கு?"

"பெயர் சொல்லி அழைக்கத்தான்."

"என் பெயர் சொல்லி அழைத்துப் பேசுமளவிற்கு நமக்குள் எந்த சொந்தமும் இல்லையே..."

"என்னங்க இப்படிச் சொல்லிவிட்டீங்க. இனி ஒவ்வொரு அந்தி மழை நேரத்திலும் என் மனம் உங்களை நினைத்துக் கொள்ளுமே. நீங்கள் என்னை நினைத்துக் கொள்ள மாட்டீங்களா?"

நினைத்தாள். அதன்பின் வந்த ஒவ்வொரு அந்திமழை நேரத்திலும் அந்த மழையுடன் கூடிய அவனது நினைவு அவளது மனத்தை நனைத்தது.

'ஏன் அன்றைக்கு அவனைத் தவிர்த்தேன்?' அவள் நகம் கடித்து யோசித்தாள்.

'ஒரு வார்த்தை நின்று பேசியிருக்கலாமே... பெயரைத்தானே கேட்டான். சொன்னால் நான் என்ன குறைந்தா போயிருப் பேன். அந்த மழை நேரம் முழுவதும் அவன் எனக்கு துணையாய் நின்றானே. மழை நின்றதும் நான்பாட்டுக்கு என் வழியில் போய்விட்டேனே. என்னைச் சுயநலம் பிடித்தவள்னு அவன் நினைத்துக் கொள்ள மாட்டானா?'

அவன் அவளை அப்படி நினைக்கவில்லையென்பது பின்னால் தெரிந்தது. கல்லூரி விட்டு அவள் வெளியில் வந்து தன் கைனடிக் ஹோண்டாவை எடுத்தபோது,

''ஹலோ...'' என்று அருகில் வந்து ஒரு நாள் அவன் நின்றான்.

''நீங்களா... நீங்கள் எப்படி இங்கே...'' அவள் வார்த்தைகள் வராமல் தவித்தாள்.

''ஏன்... நான் இங்கே வரக்கூடாதா? இது என்ன உங்களுக்கு மட்டும் சொந்தமான காலேஜா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை.''

''வேறு எப்படிச் சொன்னீங்க?''

''இங்கே வேலை ஏதும் இருந்ததா?''

''இல்லை... உங்களைப் பார்க்கத்தான் நான் வந்தேனென்றால் நீங்கள் என்ன செய்துவிடப் போகிறீங்க?''

''என்னைப் பார்க்க வந்தீங்களா?''

''ஆமாம்.''

''நான் இந்த காலேஜில் படிக்கிறதாய் உங்களிடம் சொல்லவே இல்லையே...''

''நீங்கள் சொல்லி வந்ததாக நானும் சொல்லவே யில்லையே...''

''பின்னே... எப்படி வந்தீங்க?''

''என் காரில் வந்தேன்...''

''நான் அதைக் கேட்கவில்லை...''

''பின்னே வேறு எதைக் கேட்டீங்க?''

''உங்கள் பேச்சுக்கே நான் வரவில்லை. வீட்டுக்குப் போக வேண்டும். நேரமாகிவிட்டது. வருகிறேன். பை...''

''பொறுங்க துர்கா. அதற்குள் அவசரப்பட்டால் எப்படி?''

''என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?''



''உங்கள் காலேஜை கண்டுபிடித்தவனுக்கு உங்கள் பெயரைக் கண்டுபிடிப்பதா சிரமம்?''

''என் வீடு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''எப்படித் தெரியும்.''

''நீங்கள் அந்த மழைநாளில் பஸ் பிடித்து வீட்டுக்குப் போகும்போது நான் உங்கள் பின்னால்தான் தொடர்ந்து வந்தேன்.''

''ஃபாலோ பண்ணினீங்களா?''

''பாதுகாவலாய் வந்தேன்ங்க. இது என்ன நீங்க எதைக் கேட்டாலும் என்னை வில்லன் ரேன்ஜில் வைத்தே கேள்வி கேட்கிறீங்க? நான் ஹீரோங்க...''

அவன் கண்கள் சிரிக்க... அவளைப் பார்த்துச் சிரித்தான்.

## 4

''துர்கா! ஆபீஸுக்கு போக நேரமாகவில்லையா?'' சுப்ரமணி அழைப்பது துர்காவின் செவியில் ஏறவில்லை.

அவள் தன்னுள் மூழ்கி நினைவுக் கடலில் அவனைப் பற்றிய நினைவு முத்துக்களை எடுத்துக் கோத்துக் கொண்டிருந்தாள்.

''துர்கா...'' சுப்ரமணி அவளது அறை வாசலுக்கே வந்து விட்டார்...

''அப்பா...'' துர்கா அவசரமாக எழுந்து நின்றாள்.

''உனக்கு என்னம்மா ஆச்சு... உடம்பு சரியில்லையா. இன்றைக்கு லீவு போட்டிருக்கிறாயா?''

''இல்லைப்பா...''

''அப்புறம் ஏன் ஆபீஸுக்குப் போகாமல் உட்கார்ந்திருக்கிறாய்?''

''இதோ கிளம்பி விட்டேன்ப்பா...''

துர்கா அவசரமாக கைப்பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு வாசலில் இறங்கினாள். அவளுக்குப் பின்னால் புலம்பிய கோமளவள்ளியின் சொற்கள் காற்றோடு மிதந்து வந்து துர்காவின் காதுகளில் நுழைந்தன.

''அவளுக்குப் பேய் பிடித்திருக்கிறது...''

கைனடிக் ஹோண்டாவை உயிர்ப்பித்து சாலையின் போக்குவரத்தில் கலந்த துர்கா, மனதிற்குள் துக்கத்துடன் நினைத்துக் கொண்டாள்.

'ஆமாம். எனக்குப் பேய்தான் பிடித்திருக்கிறது...'

அவனது நினைவுகள் ஒரு சுழல் சூறாவளியாய் அவளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க, அவள் அதில் சிக்கிச் சுந்தலாகிக் கொண்டிருந்தாள்.

பிசாசு போல் அவளைப் பீடித்திருந்த காதல் உணர்வுகளை விரட்டும் வகை தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தாள் துர்கா.

ஏன் அவளைத் தேடி வந்தான் அவன்? இப்படி உயிரோடு அவளைக் கொல்வதற்காகவா அவள் பின்னாலேயே தொடர்ந்து வந்தான்?

அன்று பாதுகாவலனாக வந்தேன் என்று அவன் சொன்னபோது அவள் கேலியாக நகைத்தாள்.

''ஹலோ சார். நான் சென்னையிலேயே பிறந்து வளர்ந்தவள். எனக்கு பாதுகாவலாக நீங்கள் வருகிறீங்களா? எனக்கு என்னைப் பார்த்துக் கொள்ளத் தெரியும் சார்.''

''நான் தேனிக்காரன்ங்க. எனக்கு பெண்களுக்கு காவலாக இருந்துதான் பழக்கம்.''



''தோடா... தேனிக்காரரா நீங்க? பரவாயில்லை. அதுதான் முறுக்குமீசையை முறுக்கி விட்டுக் கொண்டு கம்பீரமாய் இருக்கிறீங்களா.''

துர்கா என்னவோ இயல்பாகத்தான் இதைக் கூறினாள். ஆனால், அவன் முகம் மலர்ந்து விட்டான்.

''நான் கம்பீரமாய் இருக்கிறேனா துர்கா... என்னை அந்த அளவிற்கு நீங்கள் ரசித்திருக்கிறீங்களா?''

அவனுடைய குரலில் தெரிந்த குழைவு அவளை சங்கடத்தில் ஆழ்த்தியது.

'இவன் என்ன இப்படியெல்லாம் கேட்கிறான்.'

''ஓகே... பை... நான் போய் வருகிறேன்...''

அவள் சிட்டாகப் பறந்து விட்டாள். அவன் மறுநாளும் வந்தான். அவளிடம் நின்று பேசினான். பின்னர் அது தொடர் கதையானது.

துர்கா முதலில் கல்லூரியின் வாசலில் நின்று பேசினாள். மெதுவாக அவர்களின் சந்திப்பு இறுகி அவர்கள் கடற் கரையிலும் பூங்காவிலும் சந்தித்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

''ஏம்மா. சிக்னல் இன்னும் விழவில்லையே... நீ பாட்டுக்கு வண்டியை நிறுத்தாமல் போய்க்கிட்டே இருக் கிறாயே.''

பக்கத்திலிருந்த வண்டிக்காரர் கடிந்து கொண்டார். துர்கா பதறிப்போய் பிரேக்கைப் போட்டாள்.

சுற்றிலும் கார்களும் பஸ்களும் இரு சக்கர வாகனங்களும் நின்றுகொண்டிருப்பதைக் கவனித்தவள், தன் மனதை கட்டுக்குள் வைக்க முடியாமல் போகிறதே என்று நொந்து போனாள்.

'இப்படியா டிராவலிங் நேரத்தில் யோசித்துக் கொண்டிருப்பேன்...' அவளுக்கு தன்னிரக்கம் பொங்கியது.

இனிமேல் அவனைப் பற்றியே நினைக்கக் கூடாது என்ற வைராக்கியத்துடன் நிமிர்ந்தவள், பக்கத்தில் யாரோ...

"ஏம்பா... கைலாசம்" என்று அழைக்கவும், ஆவலுடன் அந்தத் திசையில் பார்த்தாள்.

ஒரு நடுத்தர வயதுக்காரர் அழைத்தவரிடம் திரும்பி பதில் சொல்வதைக் கண்டதும் ஏமாற்றத்துடன் வண்டியைக் கிளப்பினாள்.

'கைலாஷ்...!'

அதுதான் அவனுடைய பெயர். இரவும் பகலும் இடைவிடாது துர்கா மனதிற்குள் ஜெபித்து கொண்டிருக்கும் பெயர் அது. தூங்கும்போதுகூட அவளுடைய இதழ்கள் முனுமுணுத்துக் கொண்டிருக்கும் பெயர் அது.

அவன் மேல் உயிரையே வைத்திருந்தாள் துர்கா. அவனும் அப்படித்தான். ஒரு நாள்கூட அவளைப் பார்க்காமல் அவனால் இருக்கவே முடியாது. ஞாயிற்றுக்கிழமைகளில் அவள் வெளியே வரமாட்டாள் என்பதால் அவனுடைய காரில் இரண்டு மூன்று முறை அவளது வீடு இருக்கும் தெருவை வலம் வருவான்.

"ஏன் இப்படி ரோட்டோர ரோமியோ போலப் பண்றீங்க." துர்கா சண்டைக்குப் போனாள்.

"ஏய்ய்... என் அவதி எனக்குத்தான் தெரியும். உன்னை ஒரு நாள் பார்க்க முடியலேன்னாலும் என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..."

அவனின் ஏக்கம் முகத்தில் வெளிப்படையாகத் தெரியவும், துர்கா அனலில் பட்ட மெழுகாய் கரைந்து போனாள்.

"ஓகே. இனிமேல் நீங்க வரும்போது எனக்குக் கால் பண்ணுங்க. நான் வாசலில் ஏதாவது வேலையிருப்பது போல் வந்து கொள்கிறேன்."



அந்த நாள்களை இன்றைக்கு நினைக்கும்போது துர்காவிற்கு கண்களை கரித்தது.

'எப்படி இருந்தவன் எப்படி ஆகிப் போனான்...'

எல்லாம் அவளாக இருந்தவன், எல்லாமே அவன்தான் என்று அவளை நினைக்க வைத்தவன்... எப்படி இன்னொருத்திக்கு சொந்தமானான்?

நினைக்கும்போதே நெஞ்சம் பற்றி எரிந்தது துர்காவிற்கு. கைலாஷ் குடியிருந்த அபார்ட்மெண்டிற்கு அவள் அதிகம் போனதில்லை.

"நீ வரப்போகும் வீட்டைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?" என்று கைலாஷ்தான் அவளிடம் முதலில் வம்பிழுத்தான்.

"அதை வரும்போது பார்த்துக் கொள்ளலாம்." என்று துர்கா அலட்சியம் போல் பதில் சொன்னாள்.

"அப்பா, அம்மா இல்லாதவன்ம்மா நான்." அவன் பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டான்.

துர்காவின் மனம் இளகிவிட்டது. அவள் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் கறாராக முகத்தை வைத்துக் கொண்டாள்.

"இப்போ அதுக்கு என்னவாம்?"

"என்னவா? திடீர்னு எனக்குக் காய்ச்சல் வந்து ஜன்னி கண்டுவிட்டதுன்னு வைச்சுக்க..."

"ஐயோ..."

"எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் விழுந்து விட்டேன்னு வைச்சுக்க..."

"ஐயையோ..."

"தட்டுத் தடுமாறி உடம்பை நகர்த்த முடியாமல் நகர்த்தி ஒருவழியாய் செல்போனைக் கண்டுபிடித்து அதை எடுத்து காதில் வைத்துக் கொண்டேன்னு வைச்சுக்க..."

"ஐயையோ..."

"உன்னிடம்தான் நான் உதவி கேட்டு அழைக்க முடியும். எனக்கென்று வேறு யார் இருக்கா?"

"இப்படியெல்லாம் பேசினால் அப்புறம் நான் அழுதுவிடுவேன். இப்பவே எனக்கு அழுகை அழுகையாய் வருது..."

"நீ செய்தியைக் கேட்டுவிட்டு இப்படி உன் வீட்டிலேயே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தால் எல்லாம் சரியாகப் போய்விடுமா? என்னைக் கவனித்துக் கொள்ள நீ ஓடோடி வர வேண்டாமா?"

"ஆமாமாம். வரவேண்டும்."

"என் வீடு இருக்குமிடம் தெரியாமல் எப்படி வருவாய்?"

"அட்ரஸ் கொடுங்க... வந்து விடுவேன்."

"அதை நேரில் வந்து பார்த்து தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டாமா?"

"அது வந்து கைலாஷ்...

"பயப்படாதே... உன் கழுத்தில் தாலியைக் கட்டாமல் நான் உன்னைச் சொந்தம் கொண்டாட மாட்டேன்."

கைலாஷ் சற்று கோபத்துடன் கூறவும், துர்கா வாயை மூடிக் கொண்டு அவனுடைய காரில் ஏறி அவனருகில் அமர்ந்தாள். அவன் அபார்ட்மெண்ட்டை நோக்கி காரைச் செலுத்தினான்.

'அவன் வீட்டுக்குப் போக மறுத்திருந்தால், அவனுடைய இன்னொரு முகத்தைப் பற்றி எனக்குத் தெரியாமலே இருந்திருக்குமே. நானும் அவனைப் பிரிந்திருக்க மாட்டேனே...'

துர்கா ஆற்றாமையுடன் நினைத்துக் கொண்டாள். இந்தப் பாழாய்ப் போன காதல்தான் அவனை என்னவெல்லாம்



நினைக்க வைக்கிறது. அவள் சலிப்புடன் தன் தலையைக் குலுக்கிக் கொண்டாள்.

'அவன் அயோக்கியன் என்ற கவலை எனக்கு இல்லை. அவன் அயோக்கியன் என்று எனக்குத் தெரியாமல் இருந்திருந்தால் நான் அவனைப் பிரிந்திருக்க மாட்டேனேன்னு கிடந்து மருகுகிறேனே... சேச்சே... என் நிலை இந்த அளவுக்கா இறங்கிவிட வேண்டும்...'

துர்காவின் மனம் அலைபாய்ந்தது. பாதைக்கு குறுக்கே வந்த கார், சட்டென்று பிரேக் பிடித்து நிற்க... துர்கா மயிரிழையில் உயிர்தப்பினாள்.

"ஏம்மா... கண்ணை பொடரியிலா வைத்துக் கொண்டு வண்டியை ஓட்டுகிற... நீ விழுந்து சாக என் வண்டிதான் கிடைத்ததா? சாவுக்கிராக்கி. நானே கடனை உடனை வாங்கி லோனைப் போட்டு ஒரு காரை வாங்கி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். நீ அந்த பிழைப்பிலயும் மண்ணை அள்ளிப் போட காலங்கார்த்தாலே வந்து சேர்ந்துவிட்ட போல... நினைப்பு எங்கேம்மா இருக்கு..."

அந்த டாக்ஸி டிரைவர் அவளை சரியானபடி அர்ச்சனை செய்துவிட்டுப் போனான். சுற்றிலும் யாராவது பார்க்கிறார்களா என்று பார்த்த துர்காவின் மனம் துடித்தது.

'என் நினைவு வேறு எங்கே இருக்கு? அவனிடம்தான் இருக்கிறது. அவனை ஏன் நான் சந்தித்தேன்...'

துர்கா துக்கத்துடன் மீண்டும் வண்டியை ஓட்ட ஆரம்பித்தாள். நினைக்கக் கூடாது என்று நினைத்தாலும் அவள் மனதில் நினைவுகள் கொந்தளித்து கும்மாளமிட ஆரம்பித்தன.

அன்று கைலாஷின் அபார்ட்மெண்டிற்குப் போனவள் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு திரும்பி விட்டாள். மற்ற இரு சமயங்களிலும் அது போலவேதான் நடந்தது.

# 5

"உட்காரு துர்கா. நான் காபி போட்டுக் கொண்டு வருகிறேன்."

"ஏன்... நான் காபி போட மாட்டேனா?"

"இது என் வீடு துர்கா..."

"நாளைக்கு என் வீடாக மாறப் போகும் வீடு..."

துர்கா கவிதையாய் சொல்ல... கைலாஷ் விழி மின்ன அவளுக்கு சமையலறையைக் காட்டினான்.

"இது ஸ்டவ்... இது காபிப் பொடி டப்பா. இது ஜீனி. இது பால்..."

"அட... இதையெல்லாம் நான் பார்த்ததே இல்லையே... உங்கள் புண்ணியத்தில் இன்றைக்கு பார்த்து விட்டேன்..."

"ஏய்ய்..."

"அப்புறம் என்னங்க... எனக்கு காபி போடத் தெரியும். சும்மா டெமான்ஸ்ட்ரேஷன் பண்ணிக் கொண்டிருக்காமல் அமைதியாய் நில்லுங்க..."

அவள் காபியை கலந்து இரு கோப்பைகளில் மாற்றி ஒன்றை அவனுக்குக் கொடுத்துவிட்டு இன்னொன்றை எடுத்துக் கொண்டாள். இருவரும் பால்கனிக்கு வந்தார்கள். பேசிக்கொண்டே காபியைக் குடித்தார்கள்.

அது வாடிக்கையாக ஆகாவிட்டாலும் அடுத்தடுத்து இரு முறை கைலாஷின் அபார்ட்மெண்டிற்கு போகும்போது துர்கா இயல்பாகவே உணர்ந்தாள்...

அந்த உணர்வில்தான் அவளுக்கு வேலை கிடைத்து விட்ட செய்தியைச் சொல்ல ஆவலுடன் அவனுடைய அபார்ட்மெண்டிற்கு ஓடினாள்.



அழைப்புமணியை அழுத்த வேண்டிய அவசியமே யில்லாமல் அபார்ட்மெண்டின் கதவு திறந்திருக்க...

'இப்படியா கதவைத் திறந்து போட்டுவிட்டு இருப்பார்' என்று கைலாஷை மனதிற்குள் கடிந்துகொண்டவாறு வீட்டிற்குள் பிரவேசித்தாள் துர்கா.

ஹாலில் கைலாஷ் இல்லை. மாறாக அவனது படுக்கையறையிலிருந்து பேச்சுக் குரல்கள் ஒலித்தன.

'யாரோடு பேசிக் கொண்டிருக்கிறார்?'

துர்கா புருவங்களை உயர்த்தியவாறு படுக்கையறையை அணுகினாள். அங்கேயும் கதவு திறந்துதான் இருந்தது. யாரோ ஒரு பெண் நின்றிருக்க, அவள் எதிரில் நின்று கொண்டிருந்த கைலாஷ் உணர்ச்சிமயமான குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

"அவசரப்பட்டு எந்த முடிவிற்கும் போய்விடாதே ரோஜா..." அவன் குரல் இறைஞ்சியது.

"எனக்கென்று இனி யார் இருக்கிறார்கள்?" அந்த ரோஜாவின் குரலில் அழுகை இருந்தது.

"ஏன் நானில்லையா? உனக்கு கடைசிவரை நானிருக்கிறேன் ரோஜா... என்னை நம்பு..." திடமாகக் கூறினான் கைலாஷ்.

துர்காவின் காலடியில் பூகம்பம் உருவானது. அவள் விழுந்துவிடாமலிருக்க சுவரில் சாய்ந்து நின்றுகொண்டாள்.

'கைலாஷா இப்படிப் பேசுகிறான்...'

அவள் மனம் அலைகடலாய் ஆர்ப்பரித்தது... கைலாஷோ, அறைக்கு வெளியே ஒருத்தி அனலில் விழுந்த புழுவாய் துடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அறியாதவனாக தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

"நான் உன்னை விட்டுவிட மாட்டேன் ரோஜா..."

"வேண்டாம் கைலாஷ். எனக்கு யார் மீதும் நம்பிக்கை வரவில்லை... நான் செத்துவிடுகிறேன்..."

"நான் உன்னை ஒருபோதும் சாகவிட மாட்டேன்."

"எனக்கென்று இனி என்ன இருக்கிறது? இந்த உலகத்தில் யாருக்காக நான் வாழ வேண்டும்?"

"ஏன் இப்படிப் பேசுகிறாய் ரோஜா. உனக்கென்று, உன் வயிற்றில் வளரும் குழந்தையில்லையா? இந்த உலகத்தில் அதற்காக நீ வாழ வேண்டாமா?"

துர்கா அதிர்ந்தேபோனாள். கைலாஷ் இப்படிப்பட்டவனா. ஒரு பெண்ணைத் தாயாக்கிவிட்டு... துர்காவிடம் காதல் நாடகமாடிய துரோகியா?

"என் குழந்தை... அது காதலின் சின்னம். ஆனால், எனக்கு இந்த நிலைமையில் பிறக்கப் போகிறதே..."

"அதனால் என்ன... அந்தக் குழந்தையை என் கண்ணுக்குள் வைத்து நான் வளர்ப்பேன். நீ அதைப் பற்றிக் கவலைப்படவே வேண்டாம்..."

"நீங்கள் அதைச் செய்யலாம். உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் பெண் இதற்கு ஒப்புக் கொள்வாளா?"

"யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் உன் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு நான்தான் பாதுகாப்பு. அதை நான் வளர்த்தே தீருவேன்."

இதற்கு மேலும் அங்கே நிற்கமுடியாதவளாக துர்கா வாசலை நோக்கி ஓடினாள். சந்தடி கேட்டுத் திரும்பிப் பார்த்த கைலாஷின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. அவன் அவசரமாய் துர்காவின் பின்னால் ஓடினான்.

"துர்கா... நில் துர்கா..."

துர்கா நிற்கவில்லை. பேயைக் கண்டவள் போல் அவள் விரைந்து மறைந்து விட்டாள். கைலாஷ் அவளுடைய செல்



போனில் பேச முயன்றபோதெல்லாம் போனைத் துண்டித்தாள். வீட்டை விட்டு வெளியில் வராமல் பதுங்கினாள். இரண்டு மாத காலம் போராடிப் பார்த்துவிட்டு அவனும் அமைதியாகி விட்டான்.

துர்காவின் மனம் வலித்தது. அவன் பேச முயன்றபோது அதைத் தவிர்த்ததும் அவள்தான். அவன் மௌனமாகிவிட்ட போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்ததும் அவள்தான்.

'அவ்வளவு சீக்கிரம் அவன் மனதிலிருந்து என்னைத் தூக்கிப் போட்டு விட்டானே... இவ்வளவுதானா இவனுடைய காதல்?'

துர்கா வேலையில் சேர்ந்தாள். கைலாஷைப் பற்றிய நினைவுகளை ஒதுக்கிவிட்டு வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள். அந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் அவளுடைய அலுவலகத்தில் கூட வேலை பார்க்கும் ரேவதி, அவளுடைய அக்காவிற்கு குழந்தை பிறந்திருப்பதாகக் கூறினாள். தோழியின் அக்கா குழந்தையைப் பார்ப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றாள் துர்கா. அங்கே கையில் குழந்தையுடன் நின்றுகொண்டிருந்த கைலாஷை அவள் சந்திக்க நேர்ந்தது.

கைலாஷ், துர்காவைப் பார்க்கவில்லை. அருகில் நின்று கொண்டிருந்த டாக்டரிடம் குழந்தையைக் காண்பித்து ஏதோ வினவிக் கொண்டிருந்தான். துர்கா சட்டென்று மறைந்து நின்றுகொண்டாள். உள்ளம் படபடக்க தன்னைக் கடந்து போய்க் கொண்டிருந்த நர்ஸை நிறுத்தி... கைலாஷை சுட்டிக்காட்டி விவரம் கேட்டாள்.

"அதோ நிற்கிறாரே... அவரைப் பார்த்தால் எங்களுக்குச் சொந்தக்காரர் போலத் தெரிகிறது. அவர் ஏன் இங்கே வந்து நிற்கிறார்?"

"அவரா? அவர் ஒரு பெண்ணைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து அட்மிட் பண்ணினார். அது கர்ப்பிணிப் பொண்ணு. குழந்தை பிறந்துவிட்டது. அந்தக் குழந்தையைத்தான் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பெண்..." என்று சொல்லிக் கொண்டிருந்த நர்ஸ்... பேச்சை பாதியில் நிறுத்திவிட்டு... எதிரே வந்த வேறொரு நர்ஸிடம் வினவினாள்.

"சுனிதா... ஆபரேஷன் தியேட்டர் ரெடியாகி விட்டதா?"

"அப்போதே ரெடியாகிவிட்டது. உன்னைக் காணோமென்றுதான் பெரிய டாக்டர் தாளித்துக் கொண்டிருக்கிறார். நீ இங்கே நின்றுகொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"ஐயையோ..."

அந்த நர்ஸ், துர்காவை அம்போவென்று விட்டுவிட்டு ஆபரேஷன் தியேட்டரை நோக்கி ஓடினாள். துர்கா... ரேவதியின் அக்கா குழந்தையைப் பார்க்கும் மனநிலையை இழந்தவளாய் வீடு நோக்கித் திரும்பினாள்.

கண்களை மூடினால் கையில் குழந்தையோடு நின்ற கைலாஷின் தோற்றம்தான் வந்து நின்றது. மனதின் துயர் தாங்காமல் அவள் விட்ட கண்ணீர் இரவு நேரங்களில் தலையணையை நனைத்தது. வருடம் ஒன்று ஓடிவிட்டது.

கைலாஷின் நினைவுகள் ஒருபுறம் துன்புறுத்தினால் வீட்டில் வேறொரு துன்புறுத்துதல் ஆரம்பமாகி விட்டது.

"துர்கா... உனக்கும் வயது இருபத்து மூன்றாகி விட்டது. படிக்க ஆசைப்பட்டாய். படிக்க வைத்தேன். வேலைக்குப் போக வேண்டுமென்று ஆசைப்பட்டாய். இந்த ஒரு வருஷமாய் வேலைபார்த்துக் கொண்டிருக்கிறாய். இப்போது உனக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வைத்துவிட வேண்டுமென்று உன் அம்மாவும் நானும் ஆசைப்படுகிறோம். நீ என்ன சொல்கிறாய்... நாளைக்கு மாப்பிள்ளை வீட்டில்



உன்னைப் பெண் பார்க்க வருவதாக தகவல் சொல்லிவிட்டிருக்கிறாங்க... வரச் சொல்லிவிடவா?"

சுப்ரமணி முதன்முதலில் திருமணப் பேச்சை ஆரம்பித்த போது துர்கா தீவிரமாக மறுத்து விட்டாள். அதன் பின்னால் இந்த ஒரு வருடமாக பெற்றவர்களின் வற்புறுத்தல் அதிகமாகி விட்டிருந்தது. துர்காவின் அம்மாவோ மகளிடம் முகம் கொடுத்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். சுப்ரமணியின் கண்டிப்பு கலந்த பார்வையில் ஒரு குற்றச்சாட்டு தெரிந்தது.

துர்கா தாங்கிக் கொண்டாள். மௌனமாக தாயின் புறக்கணிப்பைத் தாங்கிக் கொண்டாள். தந்தையின் குற்றம் சாட்டும் பார்வையைத் தாங்கிக் கொண்டாள்.

விளையாட்டுத் தோழனாக இருந்து இன்று உண்மையான தோழனாக மாறிவிட்டிருந்த உடன்பிறந்த தம்பியிடம் மட்டும் அவளால் எதையும் மறைக்க முடியவில்லை.

ஆண்களின் சூட்சும புத்தி எதையும் அறிந்து விடும்.. ரமணன், தன் தமக்கையின் மனதில் காதல் இருப்பதை அறிந்துகொண்டு விட்டான். அவனது முதல் கேள்வி நிச்சயமானதாக வெளிப்பட்டது.

"யாருக்கா அவர்?"

"ரமணா..."

"எனக்குத் தெரியும்க்கா... நீ காதலில் விழுந்து விட்டாய்... யாருன்னு சொல்லு... நான் பேசிப் பார்க்கிறேன். சரிப்பட்டு வரவில்லையென்றால் கையைக் காலை முறிக்கிறேன்."

"ஐயோ ரமணா... அப்படியெல்லாம் செய்து விடாதேடா..."

"ஸோ. உன் மனதில் காதல் இருப்பது உண்மைதான். இல்லையா?"

தம்பி போட்டு வாங்குவதில் கில்லாடி என்பதைத் தெரிந்திருந்தும், வாய்விட்டு மாட்டிக் கொண்ட தன்

அவசரத்தை நினைத்து மனதிற்குள் வேதனைப்பட்டபடி துர்கா, ரமணனிடம் தன் மனச் சுமையை இறக்கிவைத்தாள். அனைத்தையும் கூறினாள்.

"ஏனக்கா இப்படியொரு துரோகத்தை பண்ணியிருக்கும் ஆளை நினைத்துக் கொண்டா நீ கல்யாணம் வேண்டாம் என்கிறாய்?"

"அவன்தான் துரோகி... நான் துரோகியில்லையேடா. அவனை நான் உண்மையாகக் காதலித்தேன் ரமணா. என்னால் எப்படிடா இன்னொருவரை கல்யாணம் செய்து கொள்ள முடியும்? முடியவில்லை ரமணா... என்னால் அது முடியவில்லை..."

துர்கா குலுங்கி அழுதாள். பெண்மையின் தன்மையை அறிந்திருந்த ரமணன் தமக்கையை தேற்றினான். அவள் மனதிற்கு கஷ்டம் வராமல் வீட்டிலிருந்து பாதுகாத்தான்.

## 6

"விடுங்கம்மா. அக்காவுக்கு எப்ப விருப்பமோ அப்போதே மேரேஜ் பண்ணிக்கட்டும். ஃபோர்ஸ் பண்ணாதீங்கம்மா."

"டேய். உன்னை வேண்டுமானால் அப்படி விட்டு விடலாம்... உன் அக்காவை அப்படி விடமுடியுமா?"

"கடவுளே! என்னை யாரும்மா அப்படி விடச் சொன்னது? நான் என்ன மேரேஜ் வேண்டாமுன்னு விரதம் இருக்கிறேனா. இல்லை, கல்யாணம் வேண்டாமுன்னு உங்ககிட்ட வந்து சொன்னேனா? நாளைக்கே நீங்கள் கல்யாணம் பண்ணி வைத்தாலும் பண்ணிக்கொள்ள நான் ரெடிம்மா..."

"உன்னை நாலு போடு போட்டால்தான் எனக்கு மனம் ஆறும்டா. குரங்கே... உன்னைவிட ஐந்து பெரியவள் உன்



அக்கா, பெண்பிள்ளை... அவளுக்குக் கல்யாணம் ஆகவில்லைன்னு நான் புலம்பிக்கொண்டிருக்கிறேன். பத்தொன்பது வயதிலேயே நீ கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்லிக் கேட்கிறாய். உன்னை என்னடா செய்வது?"

"எதுவும் செய்ய வேண்டாம். அப்படியே விட்டு விடுங்க. என் கல்யாணத்தைப் பற்றிப் பேச்சை எடுத்தது யார்? நீங்களா... இல்லை. நானா?"

"உன்னை யாருடா உங்க அக்காவுக்கு சிபாரிசு பண்ணச் சொன்னது? வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டியதுதானே..."

"நீங்க என் வாயை மூடுவதிலேயே குறியாக இருங்க."

"ஊர் வாயை மூடிவிடலாம். உன் வாயை மூட முடியுமாடா? நடக்கிற காரியமாடா அது?"

"தெரியுதில்ல. அப்புறம் ஏன் வெட்டியாய் உங்க எனர்ஜியை குறைத்துக் கொள்கிறீங்க."

கோமளவள்ளி அழமாட்டாத குறையாய் மகனை முறைப்பாள். அதைக்கண்டுகொள்ளாமல் துர்காவை பார்த்து ரகசியப் புன்னகை புரிவான் ரமணன்.

'என் தம்பி...' நினைக்கும்போதே நெஞ்சில் பாசம் நிறைந்தது துர்காவிற்கு.

'தாமஸ் கம்ப்யூட்டர் சொலுசன்' என்ற பெயர் நியான் எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்த மிகப் பெரிய கம்பெனியின் வளாகத்தினுள் தன் வண்டியைச் செலுத்தியவள் எதிரே வந்த ஹீரோ ஹோண்டாவின் மேல் மோதித் தரையில் விழுந்தாள்.

"அடடா... என்ன துர்கா இது? என்ன அவசரம்? எதிரே நான் வந்து கொண்டிருப்பதைப் பார்க்காமல் இப்படி வந்து மோதிட்டீங்களே..."

அவசரமாய் தன் ஹீரோ ஹோண்டாவை நிறுத்தி விட்டு அருகில் வந்து அவளுடைய வண்டியைத் தூக்கி நிறுத்திய வண்ணம் வருத்தமாய் கூறினான் விவேக்.

''ஐ ஆம் ஸாரி. ஏதோ நினைவில் வந்தேனா? நீங்கள் எதிரே வந்ததைக் கவனிக்கவில்லை...''

வெட்கத்துடன் தன் மேலிருந்த தூசியைத் தட்டியபடி கூறினாள் துர்கா.

''இட்ஸ் ஆல்ரைட். உங்களுக்கு அடி எதுவும் பலமாகப் படவில்லையே...''

விவேக் அக்கறையுடன் வினவுவதைக் கவனிக்காதவள் போல் தன் வண்டியில் ஏறிச் சிறு தலையசைவுடன் கிளம்பி விட்டாள் துர்கா. அவளுடைய வண்டியில் முன்பக்கம் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியில், விவேக் அவளையே பார்த்த வண்ணம் நிற்பது தெரிந்தது.

விவேக் மட்டுமில்லை... அவளுடன் வேலைபார்த்தவர் களில் சிலர் அவள்மேல் மையலுடன் அருகில் வந்து பேச முயன்றிருக்கிறார்கள். துர்கா இடம் கொடுக்க மாட்டாள். ரேவதியிடம் சிலர் காதல் தூது விட்டிருக்கிறார்கள்.

''எனக்கு விருப்பமில்லைன்னு சொல்லிவிடு ரேவதி...''

இதுதான் துர்காவின் பதிலாக இருந்திருக்கிறது.

'இன்றைக்கு காலையில் இருந்து ஒன்றும் சரியில்லை...' துர்காவின் மனம் கவலை கொண்டபோது...

'என்றுதான் நீ சரியாக இருந்தாய்... என்றைக்கு கைலாஷைப் பிரிந்தாயோ அன்றையிலிருந்து நீ சரியாகத் தான் இல்லை' என்று அவளுடைய ஆழ்மனம் இடித் துரைத்தது.

''என்னடி, உம்முன்னு வருகிறாய்?'' ரேவதி ஆதுரத்துடன் வினவினாள்.



''ச்சு... ஹெவி டிராஃபிக். வீட்டிலிருந்து கம்பெனிக்கு வருவதற்குள் நான்கு வண்டிகளில் விழ இருந்து பிழைத்து வந்திருக்கிறேன்...'' துர்கா சலிப்புடன் கூறினாள்.

''ஓஹோ... சென்னை ரோடுகளில்தான் ஹெவி டிராஃபிக். நம்ம ஆபீஸ் காம்பஸுக்குள் என்ன ஹெவி டிராஃபிக்? விவேக்கின் ஹீரோ ஹோண்டாவின் மேல் மோதி விழுந்து எழுந்திருத்தாயே... அதற்கு அர்த்தம் என்ன?''

''நீ அதைப் பார்த்துவிட்டாயா?''

''ம்ம். நீ சரியில்லை துர்கா...''

''என்னவோ இன்றுதான் அதைக் கண்டுபிடித்தது போல புதிதாகச் சொல்கிறாயே...''

''என்ன சொல்லி என்ன பண்ண... நீ மாறவே மாட்டேன் என்கிறாயே.''

''ஏண்டி மனதை மாற்றிக் கொள்வதும் அதைச் சமாதானப் படுத்துவதும் என் கையிலா இருக்கிறது?''

''இப்படியே குதர்க்கமாய் பேசிக்கொண்டே இரு. நீ உருப்படும் வழியைப் பற்றி யோசிக்காதே...''

''சும்மா என்னையே குற்றம் சொல்லாதே ரேவதி. நான் என்ன வேண்டுமென்றா இப்படி இருக்கிறேன்.''

''நம்பிக்கைத் துரோகம் செய்தவன் எங்கேயோ நன்றாக வாழும்போது நீ மட்டும் ஏண்டி இப்படி இருக்கிறாய்?''

''அது என் தலைவிதி. விடேன்.''

''நீ டேஞ்ஜரஸ் பொஸிஷனில் இருக்கிறாய் துர்கா... அது உனக்குத் தெரிகிறதா? இப்படியே போனால், ரோட்டில் ஆக்ஸிடெண்டில் மாட்டிக் கொள்ள மாட்டாயா?''

துர்கா பதில் சொல்லாமல் தன் முன்னாலிருந்த கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தாள்.

''நமக்கு புது புராஜெக்ட் லீடர் வந்திருக்கிறார். அது உனக்குத் தெரியுமா துர்கா...''

"முதலில் இங்கேதான் வேலை பார்த்தாராம். மூன்று வருடங்களுக்கு முன்னால் பெங்களூருக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிக் கொண்டு போய்விட்டாராம். இப்போது திரும்பவும் இந்த ஊருக்கே வந்திருக்கிறார்."

"ஓஹோ..."

அதற்கு மேல் அதைப் பற்றி எதையும் கேட்காமல் வேலையில் ஆழ்ந்துவிட்டாள் துர்கா. மதிய உணவு முடிந்து அவளுடைய புராஜெக்ட் ரிப்போர்ட்டில் கையெழுத்து வாங்க புராஜெக்ட் லீடரின் அறைக்குப் போனபோதுதான் என்றுமில்லாமல் அன்று மட்டும் அதிகமாக அவளது மனம் அலைபாய்ந்ததற்கான காரணத்தை துர்காவினால் கண்டுபிடிக்க முடிந்தது.

"யெஸ்..." என்றபடி கம்ப்யூட்டர் திரையிலிருந்து முகத்தை உயர்த்தி அவளைப் பார்த்தான் கைலாஷ். துர்காவின் காதலன். அவளது நிம்மதியைக் கொன்று தின்றவன்.

'இவனா... இவன் எங்கே இங்கே வந்தான்...' துர்காவின் பார்வை கைலாஷின் டேபிளின் மேலிருந்த பெயர்ப் பலகையில் படிந்தது.

'எஸ். கைலாஷ் எம்.ஈ. எம்.பி.ஏ.,'' என்று அதில் பொறிக்கப்பட்டிருந்தது.

அவனைப் பார்த்த அவள்தான் அதிர்ச்சியடைந்தாள். அவன் அதிர்ச்சியடையவில்லை. நிதானமாய் ஒரு ஊடுருவும் பார்வையை அவள் மேல் செலுத்திய வண்ணம் சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

"சொல்லுங்க மிஸ் துர்கா. இன்னும் நீங்க மிஸ்தானே... இல்லை, மிஸஸ் துர்காவா?"

'எப்படிக் கேட்கிறான் பார்...' துர்காவின் இதயம் வலித்தது. 'இவனுடைய மனம் என்ன கல்லா... இல்லை, இரும்பா. என்னைப் பார்த்து இப்படியொரு கேள்வியைக் கேட்க இவனுக்கு எப்படி மனம் வந்தது.'



துர்கா அவனை அனல் பறக்கப் பார்த்தாள். அவனோ அமைதியாக அவள் முகம் பார்த்தான்.

"உங்களைப் போலவே எல்லோரையும் நினைத்துக் கொண்டால் எப்படி? நீங்கள் குடும்பஸ்தனாக இருந்தால் எல்லோரும் அப்படி இருக்க வேண்டுமென்ற அவசியமில்லையே..."

"உண்மைதான். ஆனால், நான் எல்லோரையும் பற்றிக் கேட்கவில்லையே. உங்களைப் பற்றித்தான் கேட்டேன்..."

'வாங்க போங்கன்னு பன்மையில் அழைக்கிறான்.' துர்கா மனம் கசந்தாள். யாரோ ஒருவரிடம் உரையாடுவது போல அவளிடம் நலம் விசாரித்துக் கொண்டிருக்கும் இவனுக்காகவா அவள் வாழ்க்கையில் இந்தத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறாள்.

"நான் வாழ்க்கையில் நல்ல மனிதர்களைச் சந்திக்க முடியவில்லை சார்... அதனால் நல்லவை எல்லாம் எனக்கு மிஸ் ஆகிவிட்டன... வேறுவழியில்லாமல் நானும் மிஸஸ் ஆக மனமில்லாமல் மிஸ்ஸாகவே இருந்து விட்டேன்."

கைலாஷின் விழிகளில் ஒரு மின்னல் தெறித்ததை துர்கா கண்கூடாகக் கண்டாள். ஆனால், இமைக்காமல் அவள் முகம் பார்த்தான்.

"பட், எனக்கு வாழ்க்கை நல்ல மனிதர்களின் அறிமுகத்தையே கொடுத்திருக்கிறது துர்கா. தேங்க் டு காட் பார் தட்."

'நீயெல்லாம் கடவுளுக்கு நன்றி சொல்கிறாய்.' எரிச்சலுடன் தன் கையிலிருந்த ஃபைலை அவனிடம் நீட்டினாள் துர்கா.

"என்ன இது?"

"புராஜெக்ட் ரிப்போர்ட் சார். நீங்கள்தானே எனக்கு டீம் லீடர். உங்களின் ஸைன் வேண்டும்."

''கொடு...''

''என்ன சொன்னீங்க?''

''கொடுன்னு சொன்னேன் துர்கா...''

'திரும்பவும் அவளை ஒருமையில் அழைக்கிறான்.' அவள் மனம் அவளுக்கு அடங்காமல் துள்ளிக் குதித்துத் தொலைத்தது.

'இந்த விவஸ்தை கெட்ட மனதை என்னதான் செய்வது?' அவள் செய்வதறியாதவளாக அவனிடம் ஃபைலை நீட்டினாள்.

''குட் ஜாப். நீ இந்தக் கம்பெனியில் மிகவும் நல்ல வொர்க்கர்னு பெயர் எடுத்திருக்கிறாய். அது உனக்குத் தெரியுமா துர்கா?''

''தெரியாது. ஆனால், இந்தக் கம்பெனியில் நான் வேலை பார்ப்பது உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும். நீ வேலையில் ஜாயின் பண்ணியபோதே அது எனக்குத் தெரியும்...''

'தெரிந்துமா இத்தனை நாளாய் நீ என்னைத் தேடி வரவில்லை.' மனம் ஏங்கியது.

'தேடி வந்திருந்தால் நீ அவன் பின்னால் போயிருப்பாயா?' வழக்கம் போல் ஆழ்மனம் கேள்வி கேட்டது.

'இருக்கும் வேதனை போதாது என்று என் கண் முன்னால் நடமாடிக் கொல்லும் வேதனையை எனக்கு அளிக்கவா இவன் இங்கு வந்து தொலைத்தான்? இவனை யார் இங்கே வரச் சொன்னது. என்னைப் பார், நான் குடும்பம் நடத்தும் அழகைப் பாருன்னு பெருமை பீற்றிக் கொள்ள என்னைத் தேடி வந்தானா...'

துர்காவின் கண்கள் லேசாக கலங்கின.



# 7

அவள் ஃபைலை எடுத்துக் கொண்டு திரும்பப் போனாள். கைலாஷ் அவனது சுழல்நாற்காலியை தள்ளி விட்டு எழுந்து கொண்டபடி அவளைப் பார்த்துக் கூறினான்.

''நில் துர்கா...''

அவள் நின்றாள். அவன் எழுந்து அவளருகில் வந்தான். அவள் மனம் படபடத்தது. அருகில் வந்து நின்றவனின் மார்பில் முகம் புதைக்க மனம் தவித்தது. அவள் கடைசியாக அவனைப் பார்த்தபோது கையில் குழந்தையுடன் அவன் நின்றிருந்த காட்சி மனதில் தோன்ற, அவள் வைராக்கியத்துடன் மனம் இறுகினாள்.

'இவன் இன்னொருத்தியின் கணவன். அவளுடைய குழந்தைக்கு தகப்பன். இவனுக்காக நான் மறுகுவதா? இவன்தான் என்னுடையவன் இல்லையே...'

''நான் போக வேண்டும் சார்.''

''போகலாம், இரு...''

''என்னவென்று சீக்கிரம் சொல்லுங்கள்.''

''அன்றிலிருந்து இன்றுவரை நீ மாறவேயில்லை துர்கா. அப்படியே அதே அவசரத்துடன் இருக்கிறாய்...''

'ஆனால், நீ மாறிவிட்டாயே. வேறு ஒருத்தியுடன் வாழ்ந்து விட்டாயே...' அவள் உதட்டைக் கடித்து தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

''இதைச் சொல்லத்தான் என்னை நிறுத்தி வைத்தீங்களா?''

''எப்படி இருக்கிறாய் துர்கா...''

அவளது ஒதுக்கத்தை சட்டை செய்யாமல் அவன் ஆழ்ந்த குரலில் வினவினான். துர்காவின் கண்களில் தேங்கியிருந்த

நீர் அணை உடைத்துக் கொண்டது. அவள் சட்டென்று சட்டென்று தன் கண்ணீரை அவனிடம் காட்டாமல் முகம் திரும்பித் துடைத்துக் கொண்டாள்.

"எனக்கு என்ன சார். அன்பான அப்பா, அம்மா, எனக்காக உயிரைக் கொடுக்கும் தம்பி... நன்றாக இருக்கிறேன்."

"ம்ம். நான் எப்படியிருக்கிறேன்னு கேட்க மாட்டாயா?"

அவள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு அவன் முகம் பார்த்தாள்.

"நீங்கள் யாரோ, நான் யாரோ... நான் ஏன் உங்களிடம் நலம் விசாரிக்க வேண்டும்.."

அவள் முகத்திலடித்தது போல் பேசியும் அவன் முகத்தில் சலனமில்லாமல் நின்றான்.

"அப்படியா? நான் யாரோ... நீ யாரோவா? இந்தக் கம்பெனியில் உனக்கு வேலை கிடைத்திருக்கிறது. ஆனால் இதற்கு நீ அப்ளை பண்ணியிருந்தாயா?"

இல்லைதான். அவளே அதை நினைத்து ஆச்சரியப் பட்டுதான் அவனிடம் தகவல் சொல்ல ஓடினாள். ஆனால் அங்கே கிடைத்த பேரதிர்ச்சியால் மனம் உடைந்து துகள் துகளாகச் சிதறிப் போனாள். மனமாற்றத்திற்கு வேலையில் சேர்ந்தவள், அந்தக் கம்பெனிக்கு அவள் விண்ணப்பிக்கவே இல்லை என்ற விஷயத்தை மறந்தே போனாள்.

'ஆனால், இது எப்படி இவனுக்குத் தெரியும்?'

எப்படித் தெரியுமென்பதை அவனே நிதானமாகக் கூறினான். "உன்னிடம் எனக்குப் பிடித்த விஷயம் என்ன தெரியுமா துர்கா... நீ என்னைப் பற்றியும் என் வேலையைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டியதேயில்லை. என்னை எனக்காகவே காதலித்தாய்."

'அதற்குத்தான் கைமேல் பலன் கொடுத்துவிட்டாயே...'



"நான் வேலைபார்க்கும் கம்பெனி இதுதான் என்பது உனக்குத் தெரியாது..."

'தெரிந்திருந்தால் இந்தப் பக்கம் தலைவைத்துப் படுத்திருப்பேனா?'

"உன் மார்க்சீட்டை என்னிடம் காட்டினாய். நான் உன் ஃபைலைக் கேட்டேன். நீ ஏனென்று கேட்காமலேயே என்னிடம் அதைக் கொடுத்து விட்டாய். நினைவிருக்கிறதா?"

'நினைவுதானே. அது இல்லாமல் எங்கே போய் தொலைகிறது. நித்தமும் உன் நினைவு என்னைச் சாகடித்துக் கொண்டுதானே இருக்கிறது.'

"அன்றைக்கே உன் படிப்பு சம்பந்தப்பட்ட அத்தனை ஜெராக்ஸ் காப்பிகளையும் ஒரு செட் நான் எடுத்து வைத்துக் கொண்டேன். என் கம்பெனியில் வேலை காலியானது. உனக்காக நான் அப்ளை பண்ணினேன். ஒரு நாள் எனக்காக ஒரு ஸைன் பண்ணு என்று ஒரு பேப்பரை நீட்டினேன். நீயும் அது என்ன என்றுகூடப் படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டாய். உன் நின்னவில் இருக்கிறதா... நான் அன்றைக்கு அயர்ந்து போய் விட்டேன் துர்கா... இவ்வளவு நம்பிக்கையா என்மீது உனக்கு இருக்கிறது என்று நெகிழ்ந்து போய் விட்டேன்."

'சண்டாளா... அந்த நம்பிக்கையை நாசம் பண்ணிவிட்டு இன்றைக்கு வந்து என் முன்னால் நின்று இவ்வளவு தைரியமாக என் முகம் பார்த்துப் பேசுகிறாயே...'

"உனக்குத் தெரிந்தவர்கள் இந்தக் கம்பெனியில் வேலை பார்க்கிறார்களா என்று ஒரு கேள்வி. அந்த அப்ளிகேஷன் ஃபார்மில் இருந்தது. உனக்குத்தான் அது தெரியாதே... நான் என் பெயரை எழுதி... உன் சார்பாய் கம்பெனிக்கு அனுப்பிவிட்டேன். கம்பெனியில் என்னிடம் விசாரித்தார்கள். நீ என் உறவென்று சொன்னேன்."

'என்ன உறவென்று சொன்னாய்? என்னிடம் ஏமாறிய வள்னு சொன்னாயா?'

''உனக்கு வேலை கிடைத்துவிட்டதும் முதலில் அந்தச் செய்தி எனக்குத்தான் தெரியும். நீ என்னிடம் தகவல் சொல்ல ஓடி வரும்போது இந்த விவரங்களையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேன். அது நடக்கவே இல்லை. நீயென்னைத் தேடி வந்துவிட்டு விவரம் சொல்லாமல் ஓடிவிட்டாய்...''

இவனால் எப்படி இவ்வளவு இயல்பாக பேச முடிகிறது என்ற ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள் துர்கா.

அன்று நடந்தது எதுவுமே இவனுக்கு நினைவில் இல்லையா... அவனைத் தேடி வந்தவள் ஏன் ஓடிவந்தாள் என்று அவனுக்குத் தெரியாதா? அவனுடைய குழந்தைக்கு அம்மா ஆகப்போகிறவளிடம் அவன் பேசிக்கொண்டிருந் ததை அவள் கேட்டுவிட்டாள் என்ற பதற்றம் அன்றும் அவனிடம் தென்படவில்லை, இன்றும் தென்படவில்லை.

அது ஏன் என்பதுதான் அவளுக்குப் புரியாத ஒன்றாக இருந்தது. இப்படியும் ஒருவன் இருக்கக்கூடுமா என்பது போல் அவனை மேலும்கீழும் பார்த்தவள் அங்கிருந்து நகர முற்பட்டாள்.

''நான் கேட்டதற்கு பதில் சொல்லாமலே போகிறாயே...''

''என்ன கேட்டீர்கள்?''

''நீ வேறு, நான் வேறா?''

இவன் கிராதகன் என்று அவளுக்கு அந்த நிமிடம் தோன்றியது. வேறு ஒருத்தியுடன் வாழ்ந்து, குழந்தை பெற்று விட்டு பழைய காதலியிடமும் காதல்வலை வீசப் பார்க் கிறானே. அவள் சிக்கினால் என்ன செய்துவிட உத்தேசித்து இருக்கிறான். சின்னாபின்னம் ஆக்கிவிட உத்தேசித்து இருக்கிறானா?



துர்கா அருவருப்புடன் முகம்சுளித்தவாறு அவனைப் பார்த்தாள். அவன் முகத்தில் தெரிந்த அந்த நல்ல தன்மை மீண்டும் அவளைக் கோபத்தில் ஆழ்த்தியது.

''சார்! நீங்களும் நானும் ஒரே கம்பெனியில் வேலை பார்க்கிறோம். நீங்கள் எனக்கு டீம் லீடர். அந்த லெவலில் நீங்கள் நின்றுகொள்வதுதான் உங்களுக்கு மரியாதை...''

அவள் முகத்தில் அடிப்பதைப் போல் பேசுகிறாளே என்ற கோபம் இன்றி அவளது வார்த்தைகளால் பாதிக்கப் படாதவனாக அவன் மென்சிரிப்புச் சிரித்தான்.

''உனக்கு இவ்வளவு கோபம் வருமா துர்கா...''

''வரும். என் பெயரே துர்காதான். மறந்துவிட வேண்டாம்''.

''மறக்கமாட்டேன். என் கடைசி மூச்சுவரை உன் பெயரை நினைவில் வைத்திருப்பேன்...''

இவனுக்கு கொழுப்பு ஜாஸ்தி என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

ஆண் என்ற ஆணவம். காதலித்தவள்தானே, இன்னும் நம்மை நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பாள், கூப்பிட்டவுடன் ஓடிவந்து விடுவாள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். இவன் நினைப்பது போல் துர்கா ஒன்றும் பலவீனமானவள் இல்லையென்று இவனுக்குப் புரியவைக்க வேண்டும்.

அவள் மனதிற்குள் முடிவெடுத்துக் கொண்டவளாய், அவன் பேச ஆரம்பிக்கும்போதே அதை சட்டை செய்யாமல் அறையை விட்டு வெளியேறி விட்டாள்.

''என்ன துர்கா. டீம் லீடரைப் பார்த்தாயா?''

''ம்ம். பார்த்தேன்... இப்ப என்ன அதற்கு?''

''வெரி ஹேண்ட்சம் மேன். இல்லையா?''

ஏனோ துர்காவுக்குள் ஏதோ பொங்கியது. அவன் இன்னொருத்தியின் கணவன். அவனை ரேவதி ரசித்தால் துர்காவிற்கு என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது?

தெரிந்தும் துர்கா, ரேவதியின் மேல் எரிச்சல்பட்டாள். "போடி. போய் வேலையைப் பார். தேவையில்லாத வெட்டிப் பேச்சைப் பேசிக் கொண்டிருக்காதே..."

"தோடா... இவள் மட்டும்தான் வேலை பார்க்கிறாள். நான் என்னவோ ஊஞ்சல் ஆடுகிறேனாக்கும். ஹலோ மேடம்! எங்கள் வேலையைப் பார்த்துக் கொள்ள எங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம்."

"நீயும் யாரைப் பற்றியும் என்னிடம் சொல்லாதே."

"நான் அந்த ஆளை ரசித்தால் உனக்கு ஏண்டி மிளகாயை அரைத்துப் பூசியது போல் எரிச்சல் வருகிறது?"

"அது அப்படித்தான். என்னிடம் சொல்லாதேன்னு சொன்னால் அதைக் கேட்டுக் கொள்..."

"ஏய்... நீ காதலித்தவன் போல இவர் இல்லை. பக்கா ஜென்டில்மேன்..."

"நீ ரொம்ப கண்டுவிட்டாய்..."

"காணாமலா சொல்கிறேன்? நீதான் இந்தக் கம்பெனிக்கு புதுசு. அவர் பழசு. தெரியுமா?"

"அதற்கு என்னடி வந்தது?"

"உன்னைவிட அவரைப் பற்றி இந்தக் கம்பெனியில் வேலை செய்கிறவங்களுக்கு நன்றாகவே தெரியும்னு சொல்கிறேன்..."

"தெரிந்தால் நீயே அவரைக் கொண்டாடு. என்னை விட்டுவிடு."

"நீயேண்டி இப்படி எரிந்து விழுகிறாய்?"



துர்கா பதில் சொல்லாமல் கம்ப்யூட்டரில் கவனமானாள். அவளது இறுகிய முகத்தை யோசனையாக பார்த்த ரேவதி... கவலை தொனிக்கும் குரலில் கூறினாள்.

"துர்கா! நீ மாறிக் கொண்டு வருகிறாய். இது நல்லதிற்கு இல்லை..."

துர்கா குழப்பத்துடன் ரேவதியைப் பார்த்தாள்.

"ஏண்டி... எனக்கு என்ன ஆச்சு?"

"ஒருவரை வைத்து மற்றவர்களை நீ எடை போடக் கூடாது."

"நான் அப்படிச் செய்யவில்லையே..."

"உன்னை ஒருவன் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றினால்... எல்லோரும் ஏமாற்றுக்காரர்களாக இருக்க முடியாது..."

"அது எனக்கும் தெரியுமே..."

"உன்னை ஏமாற்றியவன் ஒரு ஆண் என்பதற்காக ஒட்டுமொத்த ஆண்குலத்தையே நீ வெறுப்பது சரியில்லை..."

"உண்மைதான்."

"உன் அப்பாவும் ஒரு ஆண்தான். தம்பியும் ஒரு ஆண்தான்."

"அடித்துவிடுவேன் ரேவதி. இப்போது நீ என்னதான் சொல்ல வருகிறாய்?"

"நீ டீம் லீடரை வெறுப்பது சரியில்லை..."

ரேவதி யோசனையுடன் சொல்ல... துர்காவிற்கு சிரிப்பதா இல்லை அழுவதா என்றே தெரியவில்லை?

'அடிப்பாவி ரேவதி. என்னை ஏமாற்றிய ஆண் வேறு யாருமில்லை... நீ ஜென்டில்மேன் என்று வார்த்தைக்கு வார்த்தை கொண்டாடுகிறாயே... அந்த டீம் லீடர்தான்...'

நினைத்ததைச் சொல்லாமல் கசந்த புன்முறுவல் ஒன்றை உதிர்த்துவிட்டு துர்கா வேலையைத் தொடர... ரேவதி கவலை அதிகமானவளாக அவளைப் பார்த்தாள்.

## 8

**வா**சலில் இருந்த பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள் கோமளவள்ளி. காம்பவுண்டு கேட்டின் அருகே ஹாரன் சத்தம் கேட்க... போய் கேட்டைத் திறந்து விட்டாள். டி.வி.எஸ். அப்பாச்சியை படுஸ்டைலாக ஓட்டிய வண்ணம் உள்ளே வந்தான் ரமணன்.

''ஹாய்... அம்மா...''

''முதுகிலேயே ஒன்று போட்டு விடுவேன். படவா ராஸ்கல். அம்மாவிடம் போய் ஹாய் ஹூய்ன்னு சொல்லிக் கிட்டு...''

மகனைக் கடிந்துகொண்டே வாசல் கேட்டைப் பூட்டி விட்டு தன் வேலையை அவள் தொடர்ந்தாள். வண்டியை நிறுத்தி பூட்டிவிட்டு கையில் வண்டிச் சாவியைச் சுழற்றிய வண்ணம் அருகே வந்த ரமணன்...

''என்னம்மா... பக்கெட்டில் இருந்து தண்ணீரை மோந்து ஊற்றிக் கொண்டு இருக்கிறீங்க...'' என்று கேட்டான்.

''என்னடா செய்கிறது. இந்த வீட்டில்தான் எல்லாமே ரிப்பேராக இருக்கிறதே...''

''எல்லாமே ரிப்பேர்னா... என்ன அர்த்தத்தில் இதைச் சொல்கிறீங்க. எனக்குப் புரியவில்லையே...''

''உனக்குப் புரிந்து எனக்கு ஆகப்போவதென்ன?''

''எவ்வளவோ ஆகலாம்... சாண் பிள்ளைன்னாலும் நான் ஆண்பிள்ளையம்மா.''



''எம்மா. இவ்வளவு அலுப்பாகப் பேசுகிறீங்க. எது ரிப்பேர்னு கேட்டதற்காகவா இவ்வளவு புலம்பல்...''

''போடா நீ வேற... இந்த வீட்டில் மனுஷக் கழுதைதான் ரிப்பேராகிக் கிடக்குதுன்னா... தண்ணீர் ஊற்றுகிற ரப்பர் டியூபும் ரிப்பேராகிக் கிடக்கு...''

''ரிப்பேராகிக் கிடக்கும் ரப்பர் டியூபிற்கு பதில் வேறு டியூப் வாங்கி விடலாம்...''

''சாயந்திரம் வேலையை விட்டு வந்ததில் இருந்து மொட்டை மாடியில் உட்கார்ந்துக்கிட்டு வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு இருக்கும் உன் அக்காவிற்கு பதில் வேறு அக்காவை வாங்கித் தர உன்னால் முடியுமா?''

கோமளவள்ளியின் கோபத்தின் பின்னணியைப் புரிந்துகொண்ட ரமணன், விளையாட்டாகச் சிரித்தான்.

''யாராவது ஒரு சயின்டிஸ்ட் அகப்படுவாரான்னு பார்க்கிறேன்.''

''எதற்கு?''

''அக்காவுக்குப் பதில் அக்காவைப் போலவே இருக்கும், ஆனால் சொல் பேச்சுக் கேட்கும் குளோனிங் ஒன்றைச் செய்து தரச் சொல்லிக் கேட்கலாமுன்னுதான்.''

''அடச்சீ... வாயை மூடு. முதலில் வாயைப் போய் கழுவு...''

''ஏன்ம்மா... நான் தெருமுக்குக் கடையில் சமோசா சாப்பிட்டுவிட்டு வந்தது உங்களுக்கு அதற்குள் தெரிந்து போச்சா?''

''பெத்த பிள்ளைகளுக்குப் பதிலாய் மாற்றுப் பிள்ளையை செய்து தருகிறானாம். ஏண்டா... தினமும் நான் உன்னைத் திட்டுகிறேன் என்பதற்காக நீ எனக்குப் பதிலாக வேறு அம்மாவை செய்து கொண்டு வரும் திட்டத்தில் இருக்கிறாயா?''

"ஐயோ, அம்மா. நான் அப்படியெல்லாம் நினைக்கக்கூட நினைப்பேனா? நான் உங்கள் வீட்டுப் பிள்ளைம்மா."

"என் வயிற்றில் பிறந்த பிள்ளையா?"

"அதிலென்ன சந்தேகம். நீங்கள் பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்று பெயர் வைத்து வளர்த்த மகன் நான்தான்."

"அந்த நினைப்பு உன் மனசில் இருந்தால் வீட்டில் நான் டிபன் செய்து வைத்திருக்கும்போது நாயர்கடை சமோசாவை மொக்கிவிட்டு வருவாயா?"

"நான் என்ன வேண்டும்னா அப்படிச் செய்தேன்?"

"அதுதான் எனக்கும் தெரியுமே... என் டிபன் வேண்டா முன்னுதானே அப்படிச் செய்தாய்?"

"ஆக... எனக்கு டிபன் தரக்கூடாதுங்கிற முடிவோடுதான் நீங்க இருக்கீங்க. அதற்கு காரணத்தையும் கண்டு பிடிக்கறீங்க..."

"டேய்... சமோசாவை மொக்கிவிட்டு வந்ததை உன் வாயால் நீதான் இப்போது சொன்னாய்..."

"ம்ஹூம்... நுணலும் தன் வாயால் கெடுமாம்..."

"அதற்காக செடிகளுக்கு பக்கத்தில் நின்றுகொண்டு இப்படி அனல் வீசும் பெருமூச்சை விடாதே..."

"ஏம்மா... பெருமூச்சு விடுவதுகூட ஒரு குற்றமா?"

"ஏற்கெனவே டியூப் இல்லாமல் நான் பக்கெட்டில் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறேன். அது போதாமல் செடிகள் வாடிப்போய் கிடக்கின்றன. நீ விடும் அனல் மூச்சு பட்டால் பொசுங்கிப் போய்விடாதா?"

மகனுடன் பேசியபடி தண்ணீரை ஊற்றி முடித்த கோமளவள்ளி, காலி பக்கெட்டை கொண்டு வீட்டுப் படி ஏறினாள். துர்கா ஏன் இந்த நேரத்தில் மொட்டைமாடியில் போய் உட்கார்ந்திருக்கிறாள் என்ற யோசனையுடன் ரமணன் தாயைப் பின்தொடர்ந்தான்.



"டேய்... சீக்கிரமாக இந்த பேண்ட் சட்டையை மாற்றிவிட்டு நீ வீட்டில் இருக்கும்போது போடும் தொளதொளா டிரவுசரை மாட்டிக் கொண்டு வந்து சேரு..."

"யம்மா... அதற்குப் பெயர் பெர்முடாஸ்ம்மா..."

"அது என்ன 'முடாஸோ.' பெயர் வாயில் நுழைய மாட்டேன்கிறது. அரை டிரவுசரை கொஞ்சம் நீளமாக போட்டுக்கிட்டு அலைவதுதான் இந்தக் காலத்து பசங்களுக்குப் பிடித்திருக்கிறது. உன் அப்பாவைப் பார்... அழகாக கைலி கட்டுகிறார்.."

"உங்களுக்கு அப்பா எதைச் செய்தாலும் அது அழகுதான்."

ரமணன் அவனுடைய அறைக்குள் சென்றான். சற்று நேரத்தில் கோமளவள்ளி அழைக்கும் குரல் கேட்டது. சமையலறைக்குச் சென்றான்.

"என்னம்மா..."

"டிபன், காபி வேண்டாமா?"

"நான் அப்படிச் சொல்வேனா? உங்களுக்கு கொடுக்கும் உத்தேசம் இருக்கிறதா... இல்லையாங்கிற கவலையில் இருந்தேன்ம்மா."

"போடா அரட்டை. சாப்பிடு..."

மகனின் தலையில் செல்லமாய் ஒரு சின்னக் குட்டு வைத்துவிட்டு தட்டை வைத்துப் பரிமாறினாள் கோமளவள்ளி. வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது.

"உன் அப்பா வந்துவிட்டார் போல..." என்று மகனிடம் சொன்னாள்..

"வாசலுக்கு எதிர்கொண்டழைக்க போவீங்களே... போகலையா?"

"ஏண்டா, நீ வாயை மூடிக் கொண்டு சாப்பிடவே மாட்டாயா?"

மகனைக் கடிந்துகொள்வது போல் சிரித்துக் கொண்டே கோமளவள்ளி வாசலுக்குச் சென்றாள்.

''துர்காவும் ரமணனும் வந்துவிட்டாங்களா...'' என்று சுப்ரமணி வினவுவது ரமணனின் காதில் விழுந்தது.

'அப்பாவிற்கு எந்த நேரமும் பிள்ளைகளைப் பற்றிய நினைவுதான்...' ரமணன் புன்னகைத்துக் கொண்டான்.

''அப்போதே வந்துவிட்டாங்க...'' என்று கோமளவள்ளி பதில் சொல்வதும் அவனுக்கு கேட்டது.

''டிபன், காபி சாப்பிட்டுவிட்டாங்களா?''

''துர்கா சாப்பிட்டுவிட்டு மொட்டை மாடிக்குப் போய் விட்டாள். ரமணன் இப்போதுதான் சாப்பிடுகிறான்.''

''பாவம். கம்ப்யூட்டரைப் பார்த்துப் பார்த்து கண் வலித்திருக்கும். ஒரு சேன்ஜிற்காக மாடியில் இருப்பாள். விடு...''

ரமணன் கை கழுவி விட்டு வந்து சுப்ரமணியின் முன் நின்றான்.

''என்னப்பா. லேட்டா வருகிறீங்க போல...''

''ஆமாம்டா... தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சும் ரப்பர் டியூப் ரிப்பேராகி விட்டதாம். அம்மா சொன்னாள். அதை வாங்கிக் கொண்டு வந்தேன். லேட்டாகி விட்டது...''

''ம்ம்.. அம்மா இதை எப்போது உங்களிடம் சொன்னாங்க?''

''காலையில் சொன்னாள்...''

''ஈவினிங்கே அதை வாங்கிக் கொண்டுவந்து விட்டீங்க. குட். யூ ஆர் ஏ வெரிகுட் ஹஸ்பெண்ட்.''

மகனின் கேலியை ரசித்துச் சிரித்தார் சுப்ரமணி.

''போடா வாயாடி. அம்மா பாவம், பக்கெட்டில் தண்ணீரைப் பிடித்து செடிகளுக்கு ஊற்ற வேண்டியிருக்கும்...''





''ஆல்ரெடி அவங்க அதைச் செய்து முடித்துவிட்டாங்க.''

''அப்படியா... ஏன் கோமளா அவசரப்பட்டாய். நான்தான் ஈவினிங் வரும்போது ரப்பர் டியூப் வாங்கிக்கிட்டு வருகிறேன்னு சொன்னேனா... இல்லையா?''

சுப்ரமணி, மனைவியிடம் பாச மழையைப் பொழிய ஆரம்பிக்க, ரமணன் நழுவி மாடிப்படி ஏறினான்.

அந்தி வெயில் மறைந்து இருள் பரவிக் கொண்டிருந்த நேரம். பக்கவாட்டில் நடப்பட்டிருந்த தென்னை மரத்தின் கிளைகள் மாடி கைப்பிடிச் சுவரின் மீது உரிமையுடன் பரவியிருக்க... அதன் அருகில் அமர்ந்து யோசனையுடன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் துர்கா.

மாலை மயங்கிவிட்ட அந்த வேளையில் வீசிய தென்றல் காற்றைக்கூட உணராதவளாக... துர்கா வான்வெளியை வெறித்துக் கொண்டிருந்தாள்.

ரமணனின் முகத்தில் சிந்தனை படிந்தது. துர்காவின் மனப் போராட்டத்தை அவன் அறிந்தவன்தான். ஆனால், இந்த அளவு அவள் மனம் உடைந்து இருந்து அவன் பார்த்ததில்லை.

''அக்கா...''

அவனது அழைப்பை உணராதவளாக துர்கா அசைவற்று அமர்ந்திருந்தது அவனைக் கவலைக்குள்ளாக்கியது. அருகில் சென்று அவளது தோளைத் தொட்டு அசைத்தான்.

''அக்கா...''

''ம்ம்... என்ன...''

துர்கா உலுக்கிப் போட்டவள் போல் திரும்பிப் பார்த்தாள். ரமணனைக் கண்டதும் அவள் முகத்தில் ஆசுவாசம் வந்தது.

''நீயாடா ரமணா...''

''வேறு யாராக இருக்கும்னு நினைத்தாய்?''

"அப்பா வந்துவிட்டாரோன்னு நினைத்து விட்டேன்..."

"அப்பா இப்போதுதான் வந்தார். நீ பயப்படாமல் உட்கார்."

துர்கா தன் கைவிரல்களை கோத்துப் பிரித்துக் கொண்டு மீண்டும் அமைதியாகிவிட... ரமணன் மென்மையாக வினவினான்.

"என்னக்கா... புதிதாய் ஏதும் பிரச்னை வந்துவிட்டதா?"

"ம்ம். ஆனால், இது புதிதுதான் ரமணா... ஆனால், பழையதன் தொடர்ச்சி..."

"புரியவில்லை..."

"எனக்கும் வாழ்க்கையின் கணக்கு புரியத்தான் இல்லை..."

துர்காவின் வார்த்தைகளில் இருந்த துயரம் கண்டு ரமணன் மனம் கவிந்தான்.

அவனுடைய அன்பான இந்த அக்காவிற்கு என்ன குறை? அழகில் குறையா? அறிவில் குறையா? வசதியான தாய், தகப்பனைக் கொண்டவள்தானே. இருந்தும் இப்படி. அவளே ஒரு மனச்சிறையை உருவாக்கி அதில் அடைபட்டுக் கொண்டு தவிக்கிறாளே...

*'பொன் விலங்கை வேண்டுமென்றே...*
*பூட்டிக் கொண்டேனே...*
*உன்னைப் புரிந்தும் கூடச்...*
*சிறையில் வந்து மாட்டிக்கொண்டேனே...'*

பக்கத்து வீட்டுக்குள்ளிருந்து பழைய பாடலின் ஒலி காற்றோடு கலந்து வந்து அவர்களின் காதுகளில் நுழைந்தது.

'யார் அந்தக் கயவன்? ஏன் இப்படிச் செய்தான்? பூப்போன்ற என் அக்காவின் மனதை கசக்கித் தன் காலடியில் போட்டு மிதித்த அந்த ராட்சசன் யார்?'



ரமணன் பல்லைக் கடித்துக் கொண்டான். துர்கா மெதுவாக தம்பியை நிமிர்ந்து பார்த்தாள். அவள் எதையோ சொல்ல விரும்புவது ரமணனுக்குப் புரிந்தது.

"என்ன அக்கா?"

"ரமணா... இன்றைக்கு அவனை நான் திரும்பவும் பார்த்து விட்டேண்டா..." துர்கா விசும்பினாள்.

## 9

ரமணனின் ரத்தம் சூடேறியது. அவளது அன்பான அக்காவின் சிறகுகளை வெட்டி அவளை குற்றுயிரும் குலையுயிருமாய் போட்டிருக்கும் ராட்சசன் எவனென்று அறிந்து அவனது தலையை வெட்டி மணலில் சாய்க்கும் ஆசை அவனுக்குள் முளைவிட்டது.

"எவன்க்கா அவன். எனக்கு அவனை அடையாளம் காட்டு. அவன் குடலை உருவி மாலையாகப் போட்டு விடுகிறேன்..."

"வேண்டாம் ரமணா. உன்னிடம் அதற்காகத்தான் இந்த விஷயத்தை சொல்லாமல் மறைத்து வைக்கலாமான்னு நான் நினைத்தேன்."

"அப்படி அவனை நீ காப்பாற்ற வேண்டிய அவசியம் என்னக்கா?"

"உளறாதேடா. அவனைக் காப்பாற்ற ஒன்றும் நான் துடிக்கவில்லை. நீ வளர்கின்ற பையன். இந்தப் பகையுணர்ச்சி உனக்கு எதற்கு?"

"அதற்காக உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கியவனை விட்டுவிடச் சொல்கிறாயா?"

"எந்த நிலைமைக்கு ஆளாக்கிவிட்டான்? அவன் ஒரு தடவைகூட என்னிடம் அத்துமீறி நடந்துகொண்டதில்லை

ரமணா... இப்போது நான் நினைத்தாலும் யாருக்கு வேண்டுமானாலும் கழுத்தை நீட்டலாம். அதற்கான முழுத் தகுதியும் எனக்கிருக்கிறது.''

''அப்புறம் ஏன் நீ கழுத்தை நீட்டவில்லை? உன் மனதிலிருந்து அவனைத் தூக்கி எறிந்துவிட்டு வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்ட வேண்டியது தானே...''

''என்னால் அது முடியாதுன்னு தெரிந்திருந்தும் நீ இப்படிப் பேசலாமா ரமணா?''

''இதற்குக் காரணம் அவன்தானேக்கா...''

''இல்லை ரமணா... நான்தான் காரணம். அவன் மேல் அளவு கடந்த பிரியத்தைக் காண்பித்தது நான்தான். அவன் என்னை விட்டுப் போய் நிம்மதியாக வாழ்கிறான். அவனால் அது முடிகின்றது. என்னால்தான் முடியவில்லை. அவனை மறக்க முடியவில்லை. அவன் நினைவுகளை துரத்த முடியவில்லை. இதில் அவனிடம் போய் குற்றம் கண்டுபிடித்து எனக்கு ஆகப் போவதென்ன?''

''மனதைக் கெடுப்பதும் குற்றம்தானேக்கா...''

''அவன் அதையும் செய்யவில்லை ரமணா. என்னுடன் பழகிய காலத்தில் எவ்வளவு நாகுக்காக பழகுவான் தெரியுமா? ஒன்று தெரியுமா ரமணா...''

''என்னக்கா?''

''இன்றைக்கு அவன் சொன்னான். இந்த வேலை எனக்குக் கிடைக்கக் காரணம் அவன்தானாம்.''

''இது என்ன புதுக்கதை...''

''கதைதான். ஆனால், உண்மைக் கதை...''

''எப்படியாம்?''

''இந்த வேலைக்கு நான் அப்ளை பண்ணவே இல்லை ரமணா.''



''நிஜமாகவா?''

''ஆமாம். அதோடு இன்னொன்றும் உண்டு...''

''என்னக்கா...''

''அவனும் என் கம்பெனியிலேயே வேலை பார்த்திருக்கிறான்...''

''அக்கா...''

''இன்றைக்குத்தான் இது எனக்குத் தெரியும்டா. பெங்களூரில் இருந்து டிரான்ஸ்ஃபர் ஆகி வந்திருக்கிற புது டீம் லீடர்னு சொன்னாங்க. கையெழுத்து வாங்கப் போனேன். டீம் லீடராக இவன் உட்கார்ந்திருக்கிறான்.''

''மை காட்... உன்னைப் பார்த்த அதிர்ச்சி கொஞ்சமாவது அவனிடம் இருந்ததா?''

''இல்லையே... சலனமேயில்லாமல் பேசுகிறான்...''

''ப்ளடி ராஸ்கல்...''

''அந்த ராஸ்கல்தான் இந்தக் கம்பெனியில் வேலை காலியாக இருக்கும் விவரம் தெரிந்ததும் எனக்காக அப்ளை பண்ணினானாம். வேலை கிடைத்தவுடன் பிரிந்து விட்டோமாம். அதனால் இதை என்னிடம் அவனால் சொல்ல முடியாமல் போய்விட்டதாம்.''

''எதற்காகப் பிரிந்தீங்கன்னு ஒரு நொடியாவது அவன் நினைத்துப் பார்த்தானா?''

''இல்லைடா. அவன் நினைத்தே பார்க்கவில்லை...''

''உன்னிடம் உரிமை பாராட்டிப் பேசுகிறானா?''

''முதலில் இல்லை. வாங்க போங்கன்னுதான் பேசினான். எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதான்னு மறைமுகமாய் கேட்டான்.''

''எப்படிக் கேட்டான்?''

"'உங்களை மிஸ் துர்கான்னு கூப்பிடுவதா... இல்லை மிஸஸ் துர்கான்னு கூப்பிடுவதா'ன்னு கேட்டான்."

"மேடம்னு கூப்பிடுடான்னு சொல்லவேண்டியது தானே..."

"அந்த நேரம் அது தோன்றவில்லைடா..."

"சரி, விடு. அப்புறமாய் உரிமையுடன் பேசினானா?"

"ஆமாம்டா. எதுவுமே நடக்காதது போல பேசுகிறான். எப்படித்தான் அப்படிப் பேச அவனால் முடிகின்றதோ..."

"உன்னைப் போல் எத்தனை பேரை ஏமாற்றினானோ... அவனையெல்லாம் சும்மா விடக் கூடாதுக்கா..."

"இல்லைடா ரமணா. எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஏமாற்ற நினைப்பவன், அந்தப் பெண்ணைக் கைவிட வில்லையே."

"அதே நேரம் உன்னிடமும் உண்மையைச் சொல்ல வில்லையே. அக்கா! அவன் இரட்டைக் குதிரையில் சவாரி செய்ய ஆசைப்பட்டிருக்கிறான்..."

"அதுதான் நடக்கவில்லையே. கடைசி வினாடியில் எனக்கு உண்மை தெரிந்து விட்டதே..."

"அதற்காக அவனைச் சும்மா விடச் சொல்கிறாயா?"

"சும்மா விடாமல் என்ன செய்யப் போகிறாய்?"

"அவன் கையைக் காலை உடைக்கப் போகிறேன்."

"வேண்டாம் ரமணா..."

"எதற்குக்கா வேண்டாம் என்கிறாய். அவனைப் பார்த்துப் பயப்படுகிறாயா...?"

"சேச்சே. அப்படியெல்லாம் இல்லை..."

"பின்னே... ஏன் இப்படிச் சொல்கிறாய்?"

"டேய்... அந்த ஆள் இப்போது ஒரு குழந்தைக்கு தகப்பனாக இருப்பான்டா. அவனை அடித்தால் அது



அவனோடு மட்டும் போகுமா? அவனை நம்பியிருக்கும் குடும்பத்தின் கதி என்ன ஆகும்? கொஞ்சம் யோசித்துப் பாரு..."

"இது மட்டும்தான் காரணமா?"

துர்கா பதில் சொல்லாமல் மௌனித்தாள். ரமணன் அவளை விடுவதாக இல்லை. பேசத் தூண்டினான்.

"வேறு என்ன காரணம் இருக்க முடியும்?"

"நீ உண்மை பேசுகிறவள் என்று நினைத்தேன் அக்கா..."

துர்கா மீண்டும் மௌனித்தாள். பின் மெதுவாகப் பேசினாள். "அவனை நீ அடித்தால் அவனைவிட பல மடங்கு அதிகமாக எனக்கு வலிக்கும் ரமணா..."

"அக்கா..."

ரமணன் திகைத்துப் போய் விட்டான். இதை அவன் எதிர் பார்க்கவில்லை. உயிர் கொலையைவிட கொடுமையானது மனதைக் கொலை செய்வது. அதை செய்துவிட்டு ஓடியிருக்கிறான் ஒருவன். அவனை இன்னும் மறக்க முடியாமல் நேசித்துக் கொண்டு இருக்கிறாள், அவனுடைய தமக்கை.

'காதல் என்பது இவ்வளவு குரூரமானதா.'

அவன் கண் முன்னால் உருக்குலைந்து தவிக்கும் உடன்பிறந்தவளைக் கண்டபோது காதலின் மீது அவனுக்கு வெறுப்பு பொங்கியது.

"அவன் கெட்டவன்தான் ரமணா... எனக்குத் துரோகம் செய்துவிட்டு என்னை விட்டு ஓடியவன்தான். ஆனால், ஒரு நாள், ஒரு பொழுதாவது என்னை உண்மையிலேயே அவன் காதலித்தான்."

"அப்படிப்பட்ட நேர்மையாளன் எப்படி இன்னொரு பெண்ணைத் தாயாக்கினான்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை ரமணா. அதனால் தானே அவனை விட்டு விலகி நான் ஓடிவந்தேன்?"

"ஓடிவந்து என்ன புண்ணியம். இப்படி ஒற்றைப் பனைமரமாய் தனித்து நிற்கிறாயே..."

"என் தலைவிதி இதுதான். விட்டுவிடுடா."

"நீயேன் அவன் கண் முன்னால் வாழ்ந்து காட்டக் கூடாது?"

"இப்போது வாழ்ந்து காட்டிக் கொண்டுதானே இருக்கிறேன்?"

"இதற்குப் பெயர் வாழ்க்கையா?"

"பின்னே... இல்லையா?"

"தூங்குகிறவங்களை எழுப்பலாம். தூங்குவதைப் போல நடிக்கிறவங்களை எழுப்ப முடியாது."

துர்கா வழக்கம் போல் மௌனிக்க, ரமணனே பேச்சைத் தொடர்ந்தான்.

"இன்னொருவனுடன் வாழ்ந்து காட்டுக்கா."

"அது என்னால் முடியாதேடா ரமணா."

"இப்படித் தனிமரமாய் நீ நின்றால், அதுதானேக்கா அவனுக்கு வெற்றி. அப்படி அவன் வெற்றிக் களிப்பில் மிதக்க நீ விடலாமா?"

"அவனை ஜெயிக்க வேண்டுமென்பதற்காக என்னைத் தோற்றுப் போகச் சொல்கிறாயா?"

"இதில் நீ தோற்க என்னக்கா இருக்கிறது?"

"அவனை நான் காதலித்தேன். அவன்தான் துரோகி. நான் துரோகியில்லை. வாழ்ந்தால் அவனுடன்தான் என்னால் வாழ முடியும். அவனுடன் வாழ முடியாத கல்யாண வாழ்க்கையை வேறு யாருடனும் என்னால் வாழ முடியாது..."



துர்கா சட்டென்று எழுந்து கீழே போய்விட்டாள். ரமணன் மட்டும் அசையாமல் அமர்ந்திருந்தான். தென்னங் கீற்றுகளின் மெல்லிய சலசலப்புச் சத்தம் அவன் காதை வருடியது. துர்காவின் முடிவு அவனை உலுக்கியது.

'அவனை விட்டு வேறு ஒருவனை அக்காவால் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாதாமே...'

அவன் மனம் யோசித்தது. 'துர்காவின் காதலனோ வேறு துணையைத் தேடிக் கொண்டுவிட்டான். துர்கா அவனது நினைவுகளோடு தனித்து நின்றுவிட்டாள். அவனோடு வாழ முடியாத வாழ்க்கை அவளுக்கு வேண்டாமாம்.

இப்போது என்ன செய்வது? இப்படியே அக்காவை விட்டுவிடுவதா?'

ரமணனின் மனம் முரண்டியது. அவன் முள்ளை முள்ளாலேயே எடுக்க விழைந்தான். யாரால் துர்காவின் மனம் பாதிக்கப்பட்டு அவள் இப்படித் தனிமையில் நிற்கிறாளோ அவனிடமே சென்று நியாயம் கேட்க நினைத்தான்.

'கேட்டால் என்ன... உன்னால்தானேடா பாவி. என் அக்கா. இப்படிக் கல்யாணம் வேண்டாமென்று கன்னியாகவே நிற்கிறாள்னு நேரில் பார்த்து நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும்படி அவனை இரண்டு வார்த்தை கேட்டால்தான் என்ன...'

ரமணனின் மனம் கொதித்தது. அவன் கண்கள் சிவக்க தன் முன் தெரிந்த இருள் போர்வையை வெறித்துப் பார்த்தான்.

'இதுபோல்தானே... என் அக்காவின் வாழ்வும் இருண்டு விட்டது. அவனை அடிக்கத்தானே அக்கா தடை விதித்திருக் கிறாள். கேள்வி கேட்க தடைவிதிக்கவில்லையே...' ரமணன் ஒரு முடிவோடு எழுந்து கொள்ளப் போனான்.

# 10

ரமணன் எழுந்திருக்க முனையும்போது மாடிப்படியில் காலடியோசை கேட்டது. அவன் 'யாராக இருக்கும்' என்ற சிந்தனையுடன் மாடிப்படிகளைப் பார்த்தான்.

'அக்காதான் திரும்பவும் வருகிறாளா...'

ரமணனின் அக்கா வரவில்லை. மாறாக அப்பா வந்தார்.

''அப்பா...''

ரமணன் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்து அழைத்தான். அவர் இதுபோல் ரமணனிடம் தனியாகப் பேச வந்ததில்லை. அதைவிட அவரிடம் இதுபோல அடங்கி உட்கார்ந்து ரமணன் ஒரு நாளும் பேசியதில்லை. அவன் தீராத விளையாட்டுப் பிள்ளை. அப்படித்தான் சுப்ரமணியும் கோமளவள்ளியும் அவனை நினைத்தார்கள். செல்லம் கொஞ்சினார்கள்.

இன்று அதிசயமாய் தந்தை அவனைத் தேடி வரவும், அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

''ரமணா...''

என்றுமில்லாமல் சுப்ரமணியத்தின் குரல் ஆதுரத்துடனும் ஒரு எதிர்பார்ப்புடனும் ஒலித்தது. அவர் பற்றுகோலைத் தேடும் கொடியின் தவிப்புடன் மகனின் தோள்மேல் கை போட்டுக் கொண்டார்.

''சொல்லுங்கப்பா...''

''அக்கா என்ன சொல்கிறாள்?''

'ஓ! இதுதான் விஷயமா?' ரமணன் உஷராகி விட்டான்.

''இத்தனை நேரமாக நீயும் அக்காவும் பேசிக்கொண்டு இருந்தீங்களே...''

''அது சும்மா. வெறும் அரட்டைதான்...''



''இதை என்னை நம்பச் சொல்கிறாயா?''

''நம்பித்தான் ஆக வேண்டும்.''

''ரமணா. நீ என் மகன்...''

'இதையென்ன புதிதாய் இன்று வந்து என்னிடம் அப்பா சொல்கிறார். நான் பிறந்ததிலிருந்து இவர் மகன்தானே...'

ரமணன் அமைதி காத்தான். சுப்ரமணியத்தின் குரல் கம்மியிருந்தது.

''எனக்குப் பின் இந்த வீட்டின் பொறுப்பை சுமக்கப் போகிறவன் நீதான்...''

''ஏன்ப்பா.. இப்படியெல்லாம் பேசுகிறீங்க...''

''இல்லைடா. உனக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய வயது வந்துவிட்டது... இல்லையா?''

''நான் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றுகிறேன்னு யாரும் உங்களிடம் வந்து போட்டுக் கொடுத்தாங்களா?''

''போட்டுக் கொடுத்தால் நான் அதைக் கேட்டுக் கொண்டு இருப்பேனா?''

''பின்னே... ஏம்ப்பா இப்படியெல்லாம் பேசுகிறீங்க?''

''துர்காவின் கவலை என் மனதை போட்டு அரிக்கிறது ரமணா.''

''அக்கா பாவம் என்ன செய்தது? தேமேன்னு வேலைக்கு போவுது. திரும்பி வந்து வீட்டில் விட்டத்தைப் பார்க்குது...''

''அது... அது... அதுதாண்டா எனக்குக் கவலையாக இருக்கிறது.''

'இதற்குப் போய் ஏன் அப்பா இத்தனை அது போட்டார்' என்ற யோசனையுடன் தலையை மட்டும் ஆட்டி வைத்தான் ரமணன்.

''சின்ன வயசுடா உன் அக்காவுக்கு...''

'நான் என்ன கிழவின்னா சொன்னேன்...'

''வாழ வேண்டிய வயசு...''

'நிஜம்தான். நான் சொன்னால் அக்கா கேட்கணுமே...'

''இப்படிக் கல்யாணத்தை தட்டிக் கழிப்பதற்கு நிச்சயம் ஏதாவது ஒரு பலமான காரணம் இருக்கும்.''

'இருக்கிறதே...'

''அது என்னன்னு நீதான் கேட்டுப் பாரேன்...''

'ஆல்ரெடி கேட்டாகிவிட்டது அப்பா...'

''எதுவும் காதல் கீதல்ன்னாலும் பரவாயில்லை. அவள் ஆசைப்பட்டவனுக்கே அவளைக் கல்யாணம் பண்ணி வைத்து விடலாம்...''

'எப்படி முடியும்? அவள் ஆசைப்பட்டவன் கையில் பிள்ளையோடும் பக்கத்தில் அந்தப் பிள்ளையைப் பெற்ற அம்மாவுடனும் நிற்கிறானே...'

''நான் இதை அவளிடம் கேட்க முடியாது. உன் அம்மாவும் மறைமுகமாய் கேட்டுவிட்டாள். இனி நீதாண்டா. அவளுக்கு ஒரு வழி செய்யணும்...''

ரமணனுக்கு சுப்ரமணியத்தைப் பார்க்கையில் மனதை என்னவோ செய்தது. அவன் அண்ணாந்து பார்க்கும் கம்பீரத்தோடு இருக்கும் அப்பா. தன் நிலையிலிருந்து கீழிறங்கி வந்து பெண்ணுக்காக மகனிடம் இந்த அளவுக்கு தழைந்து பேசுவதை நினைத்து சங்கடப்பட்டான்.

''நீங்க கவலையே படாதீங்க அப்பா. நான் அக்காவிடம் பேசிப் பார்க்கிறேன்.''

''பேசிப் பார். உன்னை நம்பித்தாதன் நான் இந்தப் பெரிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்து இருக்கிறேன்.''

சுப்ரமணி வருத்தத்தோடு இறங்கிச் சென்று விட்டார். அவரின் தளர்ந்த நடையைக் கண்ட ரமணனுக்குள் கொலை வெறி கிளம்பியது.



அவன் துர்காவின் காதலனை சந்தித்தே தீருவது என்று முடிவெடுத்துக் கொண்டு படியிறங்கினான்.

## 11

துர்கா சாலைப் போக்குவரத்தில் திணறிக்கொண்டிருந்தாள். அவளுக்கு முன்னாடி இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தவன், காதுக்கு செல்போனை அணைவாக கொடுத்து தலையை ஒரு பக்கம் சாய்த்தவாறு வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான். நேராகச் செல்லாமல் அவனுடைய வாகனம் இங்கும் அங்குமாய் வளைந்து செல்ல... துர்கா எரிச்சலுற்றாள்.

'ஒன்று, ஒழுங்காய் முன்னால் போய் தொலைக்க வேண்டும். இல்லையென்றால், வழியை விட்டுத் தொலைக்க வேண்டும். இது என்ன இவன் இப்படி வண்டியை ஓட்டுகிறான்.'

அவனோ செல்போனில் இருந்து காதை எடுக்காமல் சர்க்கஸில் வண்டியை ஓட்டிக்கொண்டிருக்க... துர்கா அவஸ்தைக்கு ஆளானாள். விலகி ஓட்ட நினைத்தவளின் வழியின் குறுக்கே அவனது வண்டி வந்துவிட... இரு வண்டிகளும் மோதிக்கொண்டன.

அவன் அப்போதும் செல்போனை காதில் வைத்துக் கொண்டே துர்காவிடம் சண்டைக்கு வரவும், துர்கா பொறுமையிழந்து விட்டாள்.

''ஏய்ய். ஒன்று, வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு செல்போனில் பேசு. இல்லைன்னா செல்போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணிவிட்டு ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டு. இப்படி நடுரோட்டில் வண்டியை ஓட்டிக்கொண்டு செல்

போனில் பேசிக்கொண்டிருக்கிறாயே... உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா..." என்று கேட்டு விட்டாள்.

அவ்வளவுதான். அவனுக்கு கோபம் வந்துவிட்டது. "இது என் செல்போன். நான் அப்படித்தான் என் இஷ்டத்திற்கு பேசிக்கொண்டே வண்டியை ஓட்டுவேன். அதைக் கேட்க நீ யார்?" என்று பொரிந்து கொட்டினான்.

"உன் இஷ்டத்தையெல்லாம் உன் வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி நடுரோட்டில் வண்டியை ஓட்டிக்கொண்டு பேசினால் நான்கு பேர் கேட்கத்தான் செய்வாங்க."

"அவங்க யாரு என்னைக் கேட்க?"

"ம்ம். பொதுஜனம். நீ செல்போனில் பேசுவதால் நீ மட்டும் அடிபட்டுத் தொலைந்தால் பரவாயில்லையே. ஊரில் இருக்கிற அத்தனை பேரையும் ஆக்ஸிடெண்ட் பண்ணித் தொலைக்கிறாயே..."

"பார்த்தாயா... நான் ஆக்ஸிடெண்ட் பண்ணியதை நீ பார்த்தாயா?"

"புதிதாக எங்கே போய் பார்க்க... இப்போது என் வண்டியில் வந்து மோதியிருக்கிறாயே... இதுக்கு என்ன சொல்லப் போகிறாய்?"

"நீ வந்து என் வண்டியில் மோதிவிட்டு என்னைக் குற்றம் சொல்கிறாயா?"

"குடித்துவிட்டு தள்ளாடுகிறது போல உன் வண்டி தள்ளாடிக்கிட்டுப் போனால் வேறு என்ன ஆகும்.? வண்டியை ஓட்டி அராஜகம் பண்ணுகிறவனெல்லாம் பத்திரமாய் போய் விடுகிறீங்க... ரூல்ஸை மதித்து வண்டியை ஓட்டுகிற அப்பாவிகள்தான் அடிபட்டுத் தொலைக்கிறாங்க..."

அவன் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிவிட... துர்காவிற்கு பயம் வந்துவிட்டது. ஆனால், சுற்றிலும் ஆள் சூழ்ந்து நின்ற தைரியத்தில் அவள் பயத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டாள்.



அப்போது ஒரு கார் வந்து நின்றது. கையில் குழந்தையோடு கைலாஷ் காரிலிருந்து இறங்கினான்.

"என்ன துர்கா... என்ன சண்டை?"

பொது இடத்தில் அவனை முறைத்துக் கொள்ள மனமில்லாமல் துர்கா வேண்டாவெறுப்பாக விவரம் சொன்னாள்.

"மிஸ்டர்! பெண்கள்கூட ஏன் வீணாக தகராறு பண்ணுகிறீங்க. நீங்க செல்போனில் பேசிக்கொண்டே வண்டியை ஓட்டியது எவ்வளவு பெரிய தவறு தெரியுமா?"

துர்காவிற்கு உதவிக்கு ஆள் வந்து விட்டது தெரிந்ததும், சண்டை போட்டுக் கொண்டிருந்தவன் ஜகா வாங்கினான்.

"நீங்க கிளம்புங்க துர்கா..."

அவள் கிளம்பாமல் அவன் கையிலிருந்த குழந்தையைப் பார்த்தாள். ஒன்றரை வயது மதிக்கத்தக்க அந்தக் குழந்தை அழகாய் அவளைப் பார்த்து பொக்கை வாயைத் திறந்து கன்னம் குழியச் சிரித்தது. அந்தக் குழந்தையின் சிரிப்பில் மயங்கிப் போனாள் துர்கா.

'இது கைலாஷின் குழந்தை...'

துர்காவிற்குள் அலையலையாய் உணர்வுகள் பொங்கி எழுந்தன. அந்தக் குழந்தையை வாங்கி அணைத்து உச்சி முகர அவள் துடித்தாள். காருக்குள் பார்த்தாள். வேறு யாருமில்லை.

"குழந்தையின் அம்மா எங்கே?" என்று கேட்டாள்.

"இல்லை..." அவன் அவளுடைய கண்களுக்குள் பார்த்தான்.

'வரவில்லை போல...' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவள், தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல்

குழந்தையை வாங்க கைநீட்டினாள். அது தாவிக் கொண்டு வந்தது.

''ஹௌ ஸ்வீட்... பெயர் என்ன?''

''பவித்ரன்...''

''ஓ...''

'பவித்ரமான அன்பில் உருவானவனா இவன்...?'

துர்காவின் மனம் வலித்தது. ஆனால், அவள் கையில் இருந்த பூக்குவியலை வெறுக்க அவளால் முடியவில்லை. குழந்தையின் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

## 12

''**கொ**டுத்து வைத்தவன்...''

குழந்தையின் கன்னத்தைப் பார்த்துக் கொண்டே கைலாஷ் கூறவும், துர்காவுக்குள் கோபம் குமிழ்விட்டது.

இவன் இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிக்க நினைப்பான் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

அவளுடைய வேதனையைப் புரிந்துகொள்ள மாட்டாமல் வேறு ஒருத்தியுடன் குடும்பம் நடத்தி குழந்தையும் பெற்றுக் கொண்டு கொஞ்சம்கூட குற்றஉணர்வு இல்லாமல் அவள் முகம் பார்த்துப் பேசுவான்.

''குழந்தையை வாங்கிக்கங்க...''

அவள் கறாராய் குழந்தையை நீட்ட, அவன் வாங்கிக் கொள்ள கை நீட்டினான். குழந்தை அவனிடம் போக மறுத்தது. அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டது.

துர்காவின் மனம் பொங்க அவள் மீண்டும் குழந்தையை அணைத்துக் கொண்டாள். அதைக் கனிவுடன் பார்த்துக்



கொண்டு நின்றிருந்த கைலாஷின் முகத்தில் ஆயிரமாயிரம் உணர்வுகள் பிரதிபலித்தன.

''குழந்தையை வைத்துக் கொண்டு எப்படிக் காரோட்டினீங்க.''

''பழகிவிட்டது...''

''வேடிக்கை பார்க்க குழந்தையை அழைத்துக் கொண்டு வந்தீங்களா?''

''இல்லை... கிரஷ்ஷில் இருந்து குழந்தையை அழைத்துக் கொண்டு போகிறேன்...''

''கிரஷ்ஷில் இருந்தா? குழந்தையின் அம்மா வேலை பார்க்கிறாங்களா...''

துர்கா, கைலாஷின் முகம் பார்க்காமல் வினவ, அவன் எதையோ சொல்லத் துடிக்கும் பார்வையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். பின் மெதுவாகக் கூறினான்.

''இல்லை...''

''இல்லையா... அப்புறம் ஏன் குழந்தையை கிரஷ்ஷில் விட வேண்டும்?''

''அவனுக்கு அம்மா இல்லை...''

துர்கா அதிர்ந்துபோய் கைலாஷைப் பார்த்தாள்.

''என்ன? குழந்தைக்கு அம்மா இல்லையா?''

''ம்ம். இவன் பிறந்தபோதே அவங்க இறந்துவிட்டாங்க.''

துர்காவின் மனதில் பல வகையான உணர்வுகள் ஒரே நேரத்தில் பொங்கி எழுந்தன.

தன் கையில் மனம் கவரும் விதத்தில் அழகாக சிரிக்கும் அந்தக் குழந்தைக்கு தாயில்லை என்பதை உணர்ந்ததால் உண்டான பரிதாபம், இந்த ஒன்றரை வருடங்களாக இதைச் சொல்லாமல் அவன் கைக்குழந்தையுடன் ஏன் மறைந்து

வாழ்ந்தான் என்று மனதில் தோன்றிய சந்தேகம். இப்போது மட்டும் இதை ஏன் அவளிடம் சொன்னான் என்ற சந்தேகம்.

"ஐ ஆம் ஸாரி" என்றாள் துர்கா.

"பரவாயில்லை..." குழந்தையை வாங்க கை நீட்டினான் கைலாஷ்.

"குழந்தையை யார் பார்த்துக் கொள்வது?"

"நான்தான்..."

அவன் இலகுவாக கூறிவிட்டு காருக்குள் ஏறிக் கொண்டான். கையசைத்து விடைபெற்றுவிட்டு அவன் போய்விட... மாலையில் ரமணனிடம் கண்கலங்கினாள் துர்கா.

"அந்தக் குட்டிப்பையன் அவ்வளவு அழகாய் இருக்கிறான்டா ரமணா. என்னிடம் எப்படி ஒட்டிக் கொண்டான் தெரியுமா?"

"அக்கா! நீ அவனிடம் நின்று பேசியதே தவறு. இதில் அவனுடைய குழந்தையை வேறு வாங்கி கொஞ்சியிருக் கிறாய்."

"நீ அந்தக் குழந்தையைப் பார்த்தால் இப்படியெல்லாம் பேச மாட்டாய்..."

"நான் அதைப் பார்க்கவே வேண்டாம்..."

"போடா. நீ இப்படித்தான் பேசுவாய்..."

"நான் உன்னுடைய தம்பி. எனக்கு இப்படித்தான் பேச வரும்."

"எப்படியோ பேசு... அந்தக் குழந்தைக்கு தாயில்லை யென்றதும் எனக்கு மனம் தாளவில்லை..."

"ஏன்... நீயே அந்தக் குழந்தைக்கு தாயாகப் போய்விட வேண்டியதுதானே..."

"ரமணா!"



"பின்னே என்னக்கா... உன்னை ஏமாற்றியவன் கையில் குழந்தையோடு வந்து நிற்கிறான். நீ அவன் சட்டையைப் பிடித்து நியாயம் கேட்காமல் அவனுடைய பெண்டாட்டி செத்துவிட்டதற்கு கண்ணீர் வடிக்கிறாய்."

"போதும்டா. என் மனம் கல்லில்லை. அவன்தான் அயோக்கியன். அந்த பச்சைமண் என்னடா பாவம் செய்தது?"

"போதும்க்கா. ஓவராய் பாசமழையைப் பொழியாதே... வா. தூங்கப் போகலாம்..."

அன்று இரவு துர்கா தூங்கிய பின் எதற்காகவோ. அவளுடைய அறைப்பக்கம் சென்றவன், தூங்கும் தமக்கையின் முகத்தில் ஒரு தெளிவு இருப்பதைக் கண்டான். அவனுடைய புருவங்கள் உயர்ந்தன. சத்தமில்லாமல் அவளுடைய அறைக் கதவைச் சார்த்திவிட்டு சிந்தனையுடன் உறங்கப் போனான்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள்... துர்கா வேலையை விட்டு வரும்போது கையில் குழந்தையோடு அவன் படியேறி வந்தான். துர்காவின் கண்கள் குழந்தையின் பக்கம் தாவ... குழந்தை அவளிடம் தாவியது.

"என்ன சார். ஆபீஸுக்கு குழந்தையைக் கொண்டு வந்து விட்டீங்க..."

"புராஜெக்ட் வொர்க் பெண்டிங்... நைட்டில் டியூட்டியைப் பார்க்கணும்..."

"குழந்தை?"

"பார்த்துக் கொள்ள ஆளில்லை. தூக்கிக் கொண்டு வந்து விட்டேன்."

"உங்களுக்குத்தான் பெத்தவங்க இல்லை... குழந்தையின் அம்மாவிற்கு இருப்பாங்களே..."

அவன் அவளை நிதானமாகப் பார்த்துவிட்டுக் கூறினான்.

''இல்லை...''

''ம்ம்...''

துர்கா ஒரு முடிவோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஓகே சார். குழந்தை என்னிடம் இருக்கட்டும். நீங்கள் டியூட்டியைப் பாருங்க...''

''உனக்கு ஏன் வீண் சிரமம்?''

''ஒரு சிரமமுமில்லை. என் வீட்டில் அம்மா, அப்பா, தம்பி இருக்கிறாங்க. நான் காலையில் வரும்போது குழந்தையைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்.''

''தேங்க்யூ துர்கா. இந்தா... இது குழந்தைக்கு வேண்டிய மாற்றுத்துணியும் பால் பவுடரும் இருக்கும் பை...''

''கொடுங்க...''

குழந்தையுடன் வீட்டுக்குச் சென்ற துர்காவைப் பார்த்து கோமளவள்ளியும் சுப்ரமணியும் திகைக்க... ரமணன் பல்லைக் கடித்தான்.

''உனக்கு இது தேவையாக்கா...''

''ஏய்ய்... பாவம்டா ரமணா. இதன் அப்பாவிற்கு நைட் டியூட்டி. அம்மா இல்லை. இந்தக் குழந்தை என்ன செய்யும்?''

''இத்தனை நாளும் என்ன செய்ததோ அதைச் செய்து விட்டுப் போகிறது. நீயேன் இந்தப் பொறுப்பை இழுத்து விட்டுக் கொள்கிறாய்...''

''எனக்கு மனம் வரவில்லைடா...''

''எதனால்?''

ரமணனின் கேள்வி கூர்மையாக வந்தது.

''தெரியவில்லை...''



''ஊரில் இது போல் ஆயிரம் அநாதைக் குழந்தைகள் இருக்கிறாங்க. அவங்க மேலெல்லாம் உனக்கு வராத பாசம் இந்தக் குழந்தையின் மேல் மட்டும் ஏன் வருகிறது?''

''அதுதான் தெரியவில்லைன்னு சொல்கிறேனே...''

''நான் சொல்லவா?''

துர்கா, 'சொல்...' என்று சொல்லவில்லை. மௌனமாக குழந்தையின் கையைப் பிடித்து விளையாடிக் கொண்டிருந் தாள்.

''இது உன் 'அவனி'ன் குழந்தை. அதுதானே காரணம்?''

''பேச்சை விடு ரமணா...''

''இல்லையென்று உன்னால் சொல்ல முடியவில்லை, பார்த்தாயா?''

''இருக்கலாம். நீ சொன்னது ஒரு காரணமாக இருக்கலாம். அதற்காக என்னை என்னடா செய்யச் சொல்கிற?''

''அவன் கைக்குழந்தையோடு உன் முன்னால் வந்து நின்று வேஷம் போட்டு உன் மனதை கலைக்கப் பார்க் கிறான்.''

''என் மனதுதான் ஏற்கெனவே கலைந்து போய்க் கிடக் கிறதே. அவன் புதிதாய் என்ன பண்ணிவிடப் போகிறான்?''

''அக்கா! அவன் பரிதாபத்தை சம்பாதித்துக் கொள்ளப் பார்க்கிறான். அது புரியாமல் நீ முட்டாளாகி விடாதே...''

''குழந்தைக்கு ஒன்றரை வயதாகிறது ரமணா...''

''இதுக்கு எத்தனை வயதானால் எனக்கு என்ன... நான் கேட்டேனா?''

''குழந்தை பிறந்தவுடனே அதன் தாய் இறந்துபோய் விட்டாளாம்...''

''உன் வாழ்வைத் தட்டிப் பறித்துக்கொண்ட பாவம் அவளை வாழ விடுமா...''

''இப்படியெல்லாம் பேசாதே ரமணா...''

''நான் கௌதம புத்தரில்லை. எனக்கு இப்படித்தான் பேச வரும்.''

''அதை விடு. இந்த ஒன்றரை வருடமாய் இந்தக் குழந்தையைக் காட்டி என்னிடம் பரிதாபம் சம்பாதித்துக் கொள்ள விரும்பாதவர், இப்போது மட்டும் புதிதாக அதைச் செய்வாரா?''

துர்காவின் கேள்வியில் இருந்த நியாயம் ரமணனின் புத்திக்கு உறைக்கத்தான் செய்தது.

''இப்போதும் அவராகவே வந்து என்னிடம் இந்தக் குழந்தைக்கு அம்மா இல்லை என்ற உண்மையைச் சொல்லவில்லை ரமணா. தற்செயலாகத்தான் எனக்குத் தெரிந்தது...''

ரமணனுக்கு துர்கா, கைலாஷின் சார்பாக நின்று வாதாடியது பிடிக்கவேயில்லை. ஆனால், துர்காவின் முகத்தில் நீண்ட நாள்களுக்குப் பின்னால் வந்திருந்த மலர்ச்சியையும் கெடுக்க அவனுக்கு விருப்பமில்லை. அவன் பேசாமல் எழுந்து போய் விட்டான்.

கோமளவள்ளியும் சுப்ரமணியும் துர்காவை தீவிரமாக விசாரித்தனர்.

''இது யாருடைய குழந்தை துர்கா...'' சுப்ரமணி கேட்டார்.

''என்னுடைய டீம் லீடரின் குழந்தைப்பா. அவருக்கு இன்றைக்கு நைட் டியூட்டி. அதனால் நான் தூக்கிக் கொண்டு வந்தேன்.'' துர்கா குழந்தைக்கு பால் பவுடரை கலக்கியவாறு பதில் கூறினாள்.

''அவர் குழந்தைக்கு என்னவானால் நமக்கென்ன துர்கா. வீட்டில் இந்தக் குழந்தையின் அம்மா இருப்பாளே. அவள் இதை பார்த்துக் கொள்ள மாட்டாளா...'' கோமளவள்ளி கோபப்பட்டாள்.



''இல்லைம்மா... இந்தக் குழந்தைக்கு அம்மா இல்லை. இது பிறக்கும்போதே இறந்துவிட்டாளாம்...'' துர்காவின் பதிலில் சோகம் இருந்தது.

தாய்மை பெண்களின் பிரத்தியேக உணர்வு... கன்னியான துர்காவிற்கு தாயில்லாத குழந்தையின் மேல் அவ்வளவு பாசம் பொங்கும்போது இரண்டு குழந்தைகளைப் பெற்ற கோமளவள்ளி இரக்கப்பட மாட்டாளா?

## 13

''என்னடி சொல்கிற... இந்தக் குழந்தைக்கு தாயில்லையா?''

''ஆமாம்மா...''

''ஐயோ பாவம்.. இங்கே கொடு...''

பெண்கள் கூட்டணி சேர்ந்துவிட... ஆட்சேபிக்க வழியில்லாமல் சுப்ரமணி மனத்தாங்கலுடன் அங்கிருந்து நகர்ந்து விட்டார். அவரையும் விடுவேனா என்று குழந்தை தவழ்ந்து சென்று அவருடைய கைலியைப் பற்றி இழுத்தது. திரும்பிப் பார்த்த சுப்ரமணியைப் பார்த்து சிரித்தது. அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்.

''அடடே... என்னடி கோமளம்... இந்தக் குழந்தை இப்படியெல்லாம் செய்யுது...''

''அச்சு அசல் நம்ம ரமணன் மாதிரியேதான். அவனும் சின்ன வயதில் இப்படித்தான் தவழ்ந்து வந்து உங்கள் கைலியைப் பிடித்து இழுப்பான்.''

''நிஜம்தாண்டி... அவன்கிட்ட இருக்கும் அதே குறும்பு இந்தக் குழந்தையிடமும் இருக்கே...''

சுப்ரமணி குனிந்து குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டார். கோமளவள்ளி குழந்தைக்கு பால் கரைத்துப்

புகட்டினாள். அவர்கள் இருவர் மனதையும் கொள்ளை கொண்ட குழந்தை... போதாது என்று ரமணனைப் பார்த்து கையாட்டிச் சிரித்தது. மழலையாய் பிதற்றியது. அவன் 'இதற்கெல்லாம் நான் மயங்க மாட்டேன்...' என்ற பாவனையில் அதைப் பார்த்து முறைத்தான்.

"குழந்தையை ஏண்டா முறைக்கிற?" என்று துர்கா சண்டைக்கு வந்தாள்.

"கூடப் பிறந்தவனை... நேற்று வந்த குழந்தைக்காக அதட்டுகிறாயா? இது கொஞ்சம்கூட சரியில்லைக்கா." ரமணன் எரிச்சலுடன் சொன்னான்.

"நேற்று வந்தால் என்ன... இன்று வந்தால் என்ன... குழந்தை குழந்தைதானேடா..." துர்கா எரிச்சல்பட்டாள்.

"போதும்க்கா... நீ இதோடு நிறுத்து. குழந்தையை அம்மாவும் அப்பாவும் கொண்டாடட்டும்... என்னிடம் அதை எதிர்பார்க்காதே."

"இது பச்சைக் குழந்தைடா..."

"இல்லையே.. இது வேறு நிறத்தில் அல்லவா இருக்கிறது."

"நீயும் உன் கேலியும்..."

"இது கேலி இல்லை... எச்சரிக்கை..."

"எதைப் பற்றியாம்?"

"இந்த விபரீத விளையாட்டு வேண்டாம். நிறுத்திக் கொள்."

"போடா... இதிலென்ன விபரீதம் இருக்கிறது?"

"கைக்குழந்தையோடு நிற்பவனுக்கு உன்னை ஒரு நாளும் இரண்டாம் தாரமாக நம் வீட்டில் கல்யாணம் பண்ணி வைக்க மாட்டார்கள்... புரிந்து கொள்."

துர்காவின் மனதிற்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது.



'நடக்குமா... அது நடக்குமா... அப்படி நடந்துவிட்டால் அவள் கைலாஷின் அருகே உரிமையுடன் வாழ ஆரம்பித்து விடலாமே. அவனை மறக்கவும் முடியாமல் நினைக்கவும் பிடிக்காமல் தவிக்கும் இந்தத் தவிப்பு நின்று விடுமே...'

அடுத்தது காட்டும் பளிங்கு போன்ற முகத்தைக் கொண்ட துர்காவின் உணர்வுகளை ரமணன் எளிதாக கண்டுபிடித்து விட்டான். அவன் முகம் கடுத்தது.

"வேண்டாம் அக்கா. வீணான எதிர்பார்ப்பை வளர்த்துக் கொள்ளாதே... கைலாஷ் ஒரு துரோகி..."

துர்கா பதில் சொல்லாமல் தலையைக் கவிழ்ந்து கொண் டாள். மறுநாள் குழந்தையை கைலாஷிடம் ஒப்படைத்த போது... குழந்தை அவளை விட்டுப் போக மறுத்தது. ஒரு தாயின் உணர்வோடு அதைப் பிரிய மனமில்லாமல் பிரிந்தாள். மறு வாரத்தில் மீண்டும் கைலாஷுக்கு இரவு நேரம் பணி வந்துவிட, அவளே தானாக முன்வந்து குழந்தையைக் கேட்டு வாங்கிக் கொண்டு போனாள். மெல்ல குழந்தை துர்காவின் வீட்டில் ஒருவனாகி விட்டான்.

'இனி பொறுக்க முடியாது...' என்ற முடிவிற்கு ரமணன் வந்துவிட்டான். நடப்பதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் கைலாஷை வெறுத்தான்.

'என் அக்காவை காதலித்து நம்பிக்கைத் துரோகம் செய்து அவளை உயிருடன் சாகடித்துவிட்டு வேறு ஒருத்தியுடன் குடும்பம் நடத்தி, குழந்தையும் பெற்றுக் கொள்வானாம். இப்போது பெண்டாட்டி சாகவும், என் அக்காவை தேடிவந்து குழந்தையைக் காட்டி பரிதாபம் சம்பாதித்துக் கொண்டு இரண்டாம் தாரமாய் என் அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் பார்ப்பானாம். என்னை என்ன கேணையன்னு அவன் நினைத்து விட்டானா...'

துர்கா குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்த ஒரு இரவு வேளையில் நண்பன் வீட்டிற்குப் படிக்கப் போவதாக கூறிவிட்டு ரமணன், கைலாஷை தேடிச் சென்றான்.

"ஹலோ. ஐ ஆம் கைலாஷ். நீங்க துர்காவின் தம்பிதானே."

வரவேற்பறையில் காத்துக் கொண்டிருந்தவனிடம் வந்து கை கொடுத்தான் கைலாஷ். பதிலுக்கு கை கொடுக்காமல் ஜீன்ஸ் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டு நின்று ரமணன், கைலாஷை எரித்துவிடுவது போலப் பார்த்தான்.

"நான் துர்காவின் தம்பியென்று உனக்கு எப்படித் தெரியும்?"

"உங்களைவிட வயதில் பெரியவன் நான். உங்களை நான் மரியாதையுடன் கூப்பிடும்போது நீங்க என்னை வா போன்னு பேசுகிறீங்களே..."

"எல்லாம் உனக்கு இந்த மரியாதையே போதும். கேட்ட கேள்விக்கு முதலில் பதிலைச் சொல்லு..."

"துர்காவின் பேரண்ட்ஸ் யார், அவளுக்கு கூடப் பிறந்தவங்க எத்தனை பேர், அவங்க என்ன செய்கிறாங்க என்ற விவரம் தெரியாமல் இருப்பதற்கு துர்கா யாரோ நான் யாரோ இல்லை. எனக்கு உங்களைத் தெரியும். இதைக் கேட்கத்தான் இந்த ராத்திரி வேளையில் என்னைத் தேடி வந்தீங்களா?"

"நான் கேட்க வந்ததே வேறு..."

"என்னன்னு சொல்லுங்க..."

"நீ உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

"புராஜெக்டை சீக்கிரமாய் முடிக்கணுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்..."

"திமிரா?"



"அதெல்லாம் இல்லைங்க..."

"இதற்கு முன் எங்கேயிருந்தாய்?"

"பெங்களூரில்..."

"அங்கேயே இருந்து தொலைக்கவேண்டியதுதானே. சென்னைக்கு ஏன் வந்தாய்?"

"ஏன்... நான் சென்னைக்கு வந்தால் என்ன? சென்னையை உங்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறாங்களா?"

"திரும்பவும் திமிராகப் பேசுகிறாய்."

"இல்லவே இல்லை... இப்போதும் நீங்கள் கேட்டதற்குத் தான் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்."

"எவளோ ஒருத்தியை அம்மாவாக்கிவிட்டு அவளுடன் பெங்களூரில் குடும்பம் நடத்த ஓடினாயே. அப்படியே தொலைந்துபோவதற்கு என்ன? ஏன் திரும்பி வந்தாய்? என் அக்காவின் வாழ்க்கையை பாழடிக்கவா?"

"ரமணன்..."

"ச்சீ... உன் வாயால் என் பெயரைச் சொல்லாதே. இது ஒரு உத்தமரின் பெயர்..."

"ஆனால், அதுதானே உங்களின் பெயராகவும் இருக்கிறது. உங்களை நான் கூப்பிட வேண்டுமானால் ரமணன் என்றுதானே கூப்பிட வேண்டும்?"

ரமணன் நெருப்பாக முறைக்க... கைலாஷோ நீராக நின்றான்.

## 14

கைலாஷின் அமைதியை ரமணன் நம்பிவிடவில்லை. 'இவன் காரியவாதி...' என்றுதான் அவன் நினைத்தான். 'என் அக்காவை வளைக்கப் பார்க்கிறான். அவளுடைய

தூய்மையான காதல் உணர்வுகளைத் தூண்டிவிட்டு இவன் அதில் குளிர் காயப் பார்க்கிறான். இவன் அயோக்கியன் என்று தெரிந்தபின்னாலும் இவன்மேல் உயிரையே வைத்திருக்கும் என் அக்காவின் கருணையைச் சம்பாதித்து அவளை இவனுடைய பிள்ளைக்கு சித்தி ஆக்கப் பார்க்கிறான்.'

இதுதான் ரமணனின் மனக்குமுறலாக இருந்தது. அவன் கோபத்துடன் கைலாஷை முறைத்தான்.

''இந்த நடிப்பையெல்லாம் நம்பி ஏமாந்து போக நான் ஒன்றும் என் அக்கா இல்லை. தெரிந்து கொள்.''

''பொறுங்க, பொறுங்க... உங்க அக்கா நம்பினாளா... யாரை நம்பினாள்? என்னையா? குட்ஜோக்...''

''கைலாஷ்.''

ரமணன் அடக்க முடியாத கோபத்துடன் எகிறி கைலாஷின் சட்டையைப் பிடித்தான். சுற்று முற்றும் பார்த்த கைலாஷ்... தன்னை விடுவித்துக் கொண்டு ரமணனை தள்ளி நிறுத்தினான்.

''நல்லவேளையாய் யாரும் பார்க்கவில்லை ரமணன்.''

''யாருக்கு நல்லவேளை. கைலாஷ்? உனக்கா?''

''இது என் இடம் ரமணன்.''

''என் அக்காவிற்கும் இதுதான் இடம். மறந்துவிட வேண்டாம்.''

''நீங்கள்தான் அதை மறந்துவிட்டீங்க... எனக்கும் துர்காவிற்கும் பழக்கம் இருந்தது யாருக்குமே தெரியாது. துர்காவின் தம்பி வந்து என் சட்டையைப் பிடித்தால் இங்கே அது நியூஸாகிவிடும். தேவையா?''

''மிரட்டுகிறாயா?''



''இல்லை. நிலைமையைச் சொல்கிறேன். நாம் ஆண்கள் ரமணன். எது நடந்தாலும் தூசியைத் தட்டிவிடுவது போல தட்டிவிட்டுப் போய்க் கொண்டே இருப்போம். துர்கா பெண். இதுவரை அவளுக்கு என்னால் எந்தவித அவப்பெயரும் வந்ததில்லை...''

''உன்னால் பாதிக்கப்பட்டவள் என் அக்கா...''

''மனதளவில்தானே...''

''மனது என்பது உனக்குச் சாதாரண விஷயமாகப் போய் விட்டதா? என் அக்காவின் மனம் பூப்போன்றது கைலாஷ்.''

''அதை நீங்கள் சொல்லி நான் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை ரமணன்...''

''இந்த உரிமை பாராட்டும் வேலையெல்லாம் வேண்டாம்.''

''எனக்கு துர்காவின் மனம் தெரியும். அதைத்தான் நான் சொன்னேன்...''

''அதைச் சொல்ல நீ யார்?''

மீண்டும் ரமணன் தன் ஒற்றை விரலைத் தூக்கி எச்சரிக்கும் பாவனையில் கைலாஷிடம் காட்டிவிட... அவன் எழுந்து கொண்டான்.

''வாங்க ரமணன். என் காரில் ஒரு டிரைவ் போய்விட்டு வந்து விடலாம்...''

''ஏன்... என்னை அடிப்பதற்கு அடியாள்களை வெளியே செட்டப் செய்து வைத்திருக்கிறாயா?''

''அதே சந்தேகம் எனக்கும் வரலாமில்லையா? ஆனால், நான் துர்காவின் தம்பியை ஒரு நாளும் சந்தேகப்பட மாட்டேன்.''

அவனது தெளிவான பேச்சும் துர்காவின் மீது அவன் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் ரமணனை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

'இவன் என்னடாவென்றால் இப்போது இப்படிப் பேசுகிறான். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வேறு மாதிரி பேசி என்னிடம் வாங்கியும் கட்டிக் கொண்டான். இவன் எந்த ரகம்னு பிடிபடவே மாட்டேன் என்கிறதே...'

கைலாஷ் கார் சாவியை எடுத்துக் கொண்டு ரமணனைப் பார்த்தான்.

"என்னங்க... போவோமா?"

"நீ உண்மையிலேயே யார்?"

"இது என்னங்க கேள்வி... நான் கைலாஷ்."

"என் அக்காவைப் பேசும் யோக்கியதை உனக்கில்லை."

"ஏன்... இதைச் சொல்கிறீங்க?"

"உன்னை நம்பி என் அக்கா ஏமாந்து போகவில்லை யென்று இப்போதுதானே என்னிடம் சொன்னாய்? கல் நெஞ்சக்காரா."

"ஓ! நீங்க அதைச் சொல்கிறீங்களா? இதோ பாருங்கள் ரமணன். இப்போதும் நான் அதைத்தான் சொல்கிறேன். உங்களுடைய அக்கா என்னை நம்பவில்லை. நான் அவளை ஏமாற்றவும் இல்லை..."

"டேய்ய்ய்..."

"ஆஹா... வரவர என் மரியாதை கூடிக்கொண்டே வருகிறதே. இந்த மரியாதையை இங்கே உள்ளவங்க கேட்டுவிட்டால் நம் இருவருக்குமே பிரச்னைதான். அதனால் காரில் போய்க் கொண்டே பேசலாம். வாங்க..."

"ஊஹூம். உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் நான் கம்பெனிக்கு திரும்பி வரவே மாட்டேன். ஒன்று சொல்லவா ரமணன்..."

"என்ன?"

"நீங்கள் என் சட்டையைப் பிடித்து இன்று கேட்கும் கேள்விகளை அன்றைக்கு துர்கா என்னிடம் கேட்டிருந்



தானானால் இந்த இரண்டு வருட பிரிவே எங்களுக்குள் வந்திருக்காது..."

"நீ செய்த துரோகத்தை உன் வாயாலேயே என் அக்காவிடம் சொல்லமுடியவில்லையென்ற மனக்குறையா உனக்கு?"

"கொலைக் குற்றவாளிக்குக்கூட அவன் தரப்பைச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் கொடுப்பார்கள். அதைக்கூட எனக்குத் தர மறுத்து தண்டனையை வழங்கிவிட்டு ஓடி விட்டாள் துர்கா..."

'இவன் என்ன... இப்படிச் சொல்கிறான்...'

"நீ செய்ததும் கொலைதானே. மனக்கொலை... உயிரைக் கொன்றிருந்தால் ஒரு வினாடியில் உயிர் போயிருக்கும். நீ மனதைக் கொன்றுவிட்டாய். என் அக்கா அணுஅணுவாக செத்துக் கொண்டிருக்கிறாள். அது தெரியுமா உனக்கு..."

கைலாஷ் நிமிர்ந்து ரமணனைப் பார்த்தான். அவன் பார்வையில் அடிப்பட்ட பறவையின் வலி தெரிய... ரமணன் வாய் மூடிக் கொண்டான்.

"வாங்க காருக்குப் போய் விடலாம்..."

கைலாஷ், ரமணனின் பதிலை எதிர்பார்க்காமல் கண்ணாடிக் கதவுகளைத் திறந்துகொண்டு படிகளில் இறங்கினான். வேறுவழியில்லாமல் ரமணன் அவனைப் பின்தொடர்ந்தான். கார் கதவை அவனுக்குத் திறந்துவிட்ட கைலாஷ், அவன் ஏறியதும் டிரைவர் ஸீட்டில் அமர்ந்து காரை உயிர்ப்பித்தான். கம்பெனியை விட்டு விலகி கடற்கரைச் சாலையில் கார் பறந்தது. ஓரமாக காரை நிறுத்தி விட்டு, ரமணனின் பக்கம் திரும்பி அமர்ந்தான்.

"இப்போது கேளுங்கள் ரமணன். எதை வேண்டு மானாலும் கேளுங்கள். நான் பதிலைச் சொல்கிறேன். உண்மையில், இப்படிப்பட்ட கேள்விகளை துர்காவைச்

சேர்ந்த யாராவது என்னிடம் கேட்க வரமாட்டாங்களா... அவர்களிடம் உண்மையைச் சொல்லி விட மாட்டேனான்னு நான் துடித்துக் கொண்டு இருந்தேன். கடவுளின் காதுகளில் என் கோரிக்கை விழுந்துவிட்டது போல... நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீங்க...''

ரமணனின் புருவங்கள் உயர்ந்தன. கைலாஷ் காட்டிய ஒத்துழைப்பு அவனுக்கு மீண்டும் ஆச்சரியத்தை அளித்தது. அவனுடைய வார்த்தைகளில் எதுவோ ஒளிந்திருப்பதைப் போல உணர்ந்தான் ரமணன்.

## 15

''நீ நல்லவன் போல் நடித்தால்... நான் ஏமாற மாட்டேன்.''

''ஏமாற வேண்டாம். நீங்கள் கேட்கவந்ததைக் கேளுங்க.''

''எவளோடோ குடும்பம் நடத்த என் அக்காவை விட்டுவிட்டு பெங்களூருக்கு ஓடுவாய்... இப்போது அவள் இறந்துபோனதும் நீ பெற்ற உன் கைக்குழந்தைக்கு என் அக்காவை ஆயாவாக்க திட்டம் போட்டு சென்னைக்குத் திரும்பி வருவாய். என் அக்காவை நீ இழுத்த இழுப்பிற்கு வரும் கிள்ளுக்கீரைன்னு நினைத்து விட்டாயா?''

''நிச்சயமாக இல்லை... துர்கா உயர்வானவள். அந்த நினைவு என்னிடம் உண்டு. நான் பெங்களூருக்கு போனதற்கு காரணமே ஒருவகையில் துர்காதான்.''

''என்னது... என் அக்காதான் உன்னை பெங்களூருக்குப் போகச் சொன்னாளா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை ரமணன். என் அபார்ட்மெண்டிற்கு அவளுடைய அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரோடு ஓடிவந்தவளுக்கு... நானும் அதே கம்பெனியில்



தான் வேலை பார்க்கிறேன்னு தெரியாது. என்னை அவள் தவிர்த்தாள். என் முகத்தில் விழிப்பதே பாவம் என்று நினைத்து ஒதுங்கிப் போனாள். நான் அந்தக் கம்பெனியில் வேலைபார்ப்பது அவளுக்குத் தெரிந்துவிட்டால், அந்த வேலையில் ஜாயின் பண்ண மாட்டாள். அதனால்தான் நான் பெங்களூருக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிக் கொண்டு போனேன்.''

''நீ கெட்டிக்காரன். அவள் உன்னிடம் தகராறுக்கு வந்து விடுவாளோ... அதனால் உன் வாழ்க்கை பாதிக்கப்படு மோன்னு நினைத்து நீ போகவில்லையாக்கும்...''

''அவள்தான் தகராறுக்கே வரவில்லையே...''

''அது உனக்கு வசதியாகப் போய் விட்டது...''

''இல்லை... தீராத வேதனையாகப் போய்விட்டது...''

ரமணனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இவன் என்னதான் சொல்ல வருகிறான்? துர்கா இவனுடன் தகராறு பண்ண விரும்பாதது இவனுக்கு தீராத வேதனை யாகப் போய்விட்டதா?

''எனக்குப் புரியவில்லை...''

''எப்படிப் புரியும்? உங்கள் பார்வையில் நான் ஒரு துரோகி. உங்களுடைய அக்காவிற்கு துரோகம் பண்ணிவிட்டு ஊரை விட்டு ஓடியவன்.''

''அது இல்லையென்கிறாயா?''

''ஆமாம்.''

''எனக்குக் கொலைவெறியை உண்டாக்காதே கைலாஷ்.''

''ஏன் கொலைவெறி வர வேண்டும்? நான் என்ன தவறு செய்தேன்?''

இப்படிக் கேட்டவனின் கழுத்தை நெரித்துக் கொன்றால் தான் என்ன என்று ஒரு வேகம் ரமணனுக்குள் கிளம்பியது.

''நீ என் அக்காவைக் காதலிக்கவில்லையா?''

''காதலித்தேன்... காதலித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.''

''அது கனவு... என் அக்காவை நினைக்காதே...''

''ஏன் நினைக்கக்கூடாது? அவள் ஒருவேளை இன்னொருவனின் மனைவியாக ஆகியிருந்தால்... நீ சொல்வதில் ஒரு நியாயம் இருக்கிறது.''

''அவள் மனதைத்தான் நீ சல்லடையாக்கிவிட்டாயே. அவள் எப்படி இன்னொருவனை மணப்பாள்?''

''எனக்கும் அந்த நம்பிக்கை இருந்தது. ஆனால், துர்கா என்னைத் தவறாக நினைத்து விலகி ஓடிவிட்டாள். விளக்கம் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் தரவும் மறுத்து விட்டாள். என் மீது இருந்த வெறுப்பில் வேறு ஒருவரை மணந்து கொண்டிருந்தால் என்ன செய்வது என்ற நினைவில்தான் நான் இத்தனை காலமும் சென்னைக்கு திரும்பி வராமல் இருந்தேன்.''

''எனக்கு ஒரு சந்தேகம் கைலாஷ்?''

''கேளுங்க...''

''அது எப்படி நீ உத்தமன் போலவே பேசிக் கொண்டிருக்கிறாய்?''

''உத்தமன் உத்தமன் போலத்தானே பேசுவான்...''

''யோவ்... நான் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப் போல ஒரு ஜெகஜால கில்லாடியைப் பார்த்ததே இல்லை. அது எப்படி நீ அப்படியே 'நான் அவனில்லை' ஹீரோ போலவே நிஜத்திலும் இருக்கே...''

கைலாஷ் இப்போது ரமணனின் பேச்சை ரசித்துச் சிரித்தான்.

''உண்மையாகவே நான் அவனில்லை ரமணன்.''



''நீ 'எவன்' இல்லை?''

''நான்... 'நான் அவனில்லை' ஹீரோ போல இல்லை.''

''நீ கில்லாடின்னுதான் நான் சொல்லிவிட்டேனே.''

''எதனால் அப்படிச் சொல்கிறீங்க?''

''ஏன்ய்யா... என் அக்கா உன்னைத் தேடி உன் அபார்ட்மெண்டிற்கு வந்தாள். நீ கூப்பிடக் கூப்பிட உன் விளக்கத்தைக் கேட்காமல் ஓடிவந்து விட்டாள்னு குற்றம் சொல்கிறாயே... என் அக்கா எதைப் பார்த்து ஓடிவந்தாள்?''

''ரமணன்... கண்ணால் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்...''

''இந்தக் கருமத்தை என் அக்கா விசாரிக்க வேறு செய்யணுமாக்கும்? நீ கிராதகனேதான்.''

''விசாரிக்காமல் எப்படி உண்மை தெரியும்?''

''அதுதான் நீ... உன் அருமைக் காதலியிடம் வசனம் பேசிக்கொண்டிருந்தாயாமே...''

''என் அருமைக் காதலி... அன்றும் இன்றும் என்றும் உன் அக்கா ஒருத்தி மட்டும்தான்...''

''இந்த உடான்ஸ்தானே வேண்டாம் என்கிறேன். உன் ஜில்பா வேலைகளையெல்லாம் வேறு எங்காவது காட்டு கண்ணா. என்னிடம் வேண்டாம். உன் முன்னால் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாளாமே...''

''ஆமாம்...''

''நீ அவளிடம் 'உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் பாதுகாப்பு... உன்னை விட்டுவிட மாட்டேன்'னு சொன்னாயா... இல்லையா?''

''சொன்னேன்தான்.''

இப்போது ரமணன், கைலாஷின் மேல் வெறியோடு பாய்ந்தான். கைலாஷ், ரமணனை விலக்கி அமர வைத்தான்.

''ஏண்டா, உன் வாயாலேயே உண்மையை ஒப்புக் கொள்கிறாய். கையில் குழந்தையோடு வந்து நிற்கிறாய். அப்புறமும் என்னடா நல்லவன் போல வேஷம் போடுகிறாய்?''

''பொறுங்கள் ரமணன். நான் ரோஜாவிடம் சொன்னதை சரியாக புரிந்துகொள்ளாமல் துர்கா என்னை விட்டு விலகி என்னைத் தண்டித்து விட்டாள். விளக்கம் கேட்க வந்த நீங்களும் நிதானத்தை இழக்காதீங்க. என்னைப் பேச விடுங்க.''

''என்ன பேசப் போகிறாய்? உன் ரோஜாவின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசப் போகிறாயா?''

''அவள் என் ரோஜாவல்ல...''

''என்னது?''

ரமணனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''அடப்பாவி... உன் குழந்தைக்கு அம்மாவானவளை உன் ரோஜா இல்லையென்று சொல்கிறாயே. இது தெய்வத்திற்கே அடுக்குமா?''

''எல்லாம் அடுக்கும். முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள் ரமணன். அந்தக் குழந்தைக்கு அப்பா நானில்லை...''

''கைலாஷ்...''

''பவித்ரன்... என் உயிர் நண்பன் ஆதித்யனுடைய குழந்தை...''

ரமணன் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான். எதிர்பாராத கைலாஷின் இந்த வாக்குமூலம் அவன் வாயை மூட வைத்துவிட்டது.



# 16

''கேளுங்கள் ரமணன். தேனிக்குப் பக்கத்திலிருக்கும் ஆண்டிப்பட்டிதான் என் பிறந்த ஊர். எனக்கு அப்பா, அம்மா இல்லை. என் வயதான தாத்தா என்னை வளர்த்தார்.''

ரமணன் அனுதாபத்துடன் கேட்டுக்கொண்டிருக்க, கைலாஷ் தன் கடந்த காலத்தை சொல்ல ஆரம்பித்தான்.

''தாத்தாவால் வேலை செய்ய முடியாது ரமணன். சின்ன பெட்டிக்கடை வைத்திருந்தார். அதிலிருந்து வரும் வருமானம் எங்கள் இரண்டு பேரின் வாழ்க்கைப்பாட்டிற்குப் போதவில்லை.''

''கஷ்டமாக இருந்ததா கைலாஷ்?''

''ரொம்பக் கஷ்டமாக இருந்தது ரமணன். அந்தச் சமயம் எனக்குக் கை கொடுத்தவன்தான் ஆதித்யன். என் உயிர் நண்பன்.''

''அவரும் உங்கள் ஊர்தானா?''

''ஆமாம். எங்கள் ஊரின் பெருந்தனக்காரரின் மகன். பரம்பரைப் பணக்காரன். என்னுடன் பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்தான்...''

''ஓ! சிறுவயதிலிருந்து சிநேகிதம்...''

''ம்ம். இரண்டு பேரும் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஒன்றாகவே படித்தோம். ராமணன்... உங்களிடம் இதைச் சொல்வதற்கென்ன... காலையில் சாப்பிட வெறும் நீராகாரம் தான் இருக்கும். மதிய சாப்பாடு ஸ்கூலில் போட்டு விடுவாங்க. ராத்திரிக்கு மட்டும் தாத்தா எதையாவது அடுப்பை மூட்டி ஆக்கி வைப்பார்.''

''சொல்லாதீங்க கைலாஷ்! கேட்கும்போதே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது...''

''இதை நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும் ரமணன். அப்போதுதான் ஏன் நான் ஆதித்யனின் மேல் உயிராக இருந்தேன். ஏன் அவனுடைய காதலிக்கு என் வாழ்வைப் பணயம் வைத்து அடைக்கலம் கொடுத்தேன். ஏன் அவன் பெற்ற பிள்ளையை, தாயில்லாதபோது, தனியனாக நின்று நான் வளர்க்கிறேன் என்பது உங்களுக்குப் புரியும்...''

''நீங்கள் சொல்வதும் நிஜம்தான்... சொல்லுங்கள்...''

''வாரத்தில் இரண்டு நாள்கள் ஸ்கூல் லீவ். கால் பரீட்சை லீவ்... அரைப்பரீட்சை லீவ்... இதுபோன்ற சமயங்களில் சாப்பாட்டிற்கு நான் என்ன செய்திருப்பேன்னு நீங்க நினைக்கறீங்க...''

''எனக்குத் தெரியவில்லை.''

ரமணன் சங்கடத்துடன் கூறினான். அவனுக்கு இது போன்ற கதைகள் எல்லாம் புதிது.

''ஆதித்யன் பார்த்துக் கொண்டான். தோட்டத்திற்கு சாப்பாட்டை அனுப்பச் சொல்லி வீட்டில் சொல்லிவிட்டு என்னைத் தோட்டத்திற்கு கூப்பிட்டுக் கொண்டு போய் விடுவான். மதியச் சாப்பாட்டை அவன் புண்ணியத்தில் வயிறார சாப்பிடுவேன்.''

''எனக்கு இதெல்லாம் தெரியாது கைலாஷ்...''

''பிறக்கும்போதே வசதியான வீட்டில் கைநிறையச் சம்பாதிக்கும் தகப்பனுக்கும் பார்த்துப் பார்த்துக் கவனித்துக் கொள்ளும் தாய்க்கும் மகனாகப் பிறந்தவங்க நீங்க. என் நிலைமை உங்களுக்குத் தெரியாதுதான்...''

''வருத்தப்படாதீங்க கைலாஷ்.''

''நான் வருத்தப்பட்டதே இல்லை ரமணன். கிடைக்கும் பற்றுக்கோட்டைப் பற்றிக் கொண்டு வாழ்வில் மேடேறி



விடத் துடித்தேன். ஆதித்யனின் நட்பு எனக்குக் கை கொடுத்தது. ஒரு முறை போட்ட யூனிபார்மை அப்படியே எனக்குக் கொடுத்துவிட்டு அவன் வேறு வாங்கிக் கொள்வான்.''

''ஏன்... புதிதாய் வாங்கித் தரலாமே.''

''அவன் வீட்டில் விட மாட்டாங்க. ஆனாலும் அவனுடைய பாக்கெட் மணியில் எனக்கு நோட்டுப் புத்தகம், பேனா, ஸ்கூல் பை எல்லாம் வாங்கிக் கொடுப்பான்.''

''சின்ன வயதிலேயே என்ன ஒரு தாராள மனது...''

''அதனால்தான் அப்படி இருக்க முடியும் ரமணன். நான் உள்ளூர் ஸ்கூலில் ப்ளஸ் டூ படித்து முடித்துவிட்டேன். அது கவர்ன்மெண்ட் ஹையர் செகண்டரி ஸ்கூல். என் ஸ்கூலில் மட்டுமில்லை... மாவட்டத்திலேயே நான் முதல் மாணவனாக வந்தேன்.''

''வெரிகுட்...''

''அப்போதுதான் என் தாத்தா இறந்துவிட்டார்...''

''ஐ ஆம் ஸாரி...''

''எனக்குன்னு இருந்த ஒரே சொந்தமும் போனபோது என் நண்பன் எனக்கு எல்லாமுமாக நின்றான்...''

''ரியலி. ஹி இஸ் கிரேட்...''

''மேலே படிக்க எனக்கு இன்ஜினீயரிங் காலேஜில் இடம் கிடைத்திருந்தது. ஆதித்யனுக்கும் அதே காலேஜில் இடம் கிடைத்தது...''

''இங்கேயும் அவர் உதவி செய்தாரா?''

''முழு உதவியும் அவன்தான் செய்தான். அவனுடைய காலேஜ் ஃபீஸை கட்டும்போது எனக்கும் சேர்த்து கட்டி விடுவான். ஹாஸ்டல் ஃபீஸும் அப்படித்தான். இரண்டு பேரும் ஒரே ரூமில்தான் தங்கியிருந்தோம். அவனுக்குத்

துணிகள் வாங்கும்போது எனக்கும் சேர்த்து வாங்கிக் கொடுத்து விடுவான்.''

''இப்போது பழையதை கொடுக்கவில்லை போல...''

''இங்கே அவன் வீட்டினரின் கண்காணிப்பு இல்லையே...''

''ஷ்யூர்...''

''அதனால் அவன் தன் விருப்பப்படி என் செலவுகளைப் பார்த்துக் கொள்ள முடிந்தது. அவன் கேட்டதும், கேட்டதை விட அதிகமாக கொடுக்கும் வீடு அவனுக்கிருந்தது. அவன் தயவில் நான் படிப்பை முடித்தேன். எனக்கு கேம்பஸ் இன்டர்வியூவில் வேலையும் கிடைத்தது. ஆதித்யன் எங்கள் ஊரில் சொந்தமாக கரும்பு மில் ஒன்றை ஆரம்பித்தான். நாங்கள் இருவரும் பிரிந்தோம்.''

கதை கேட்கும் ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்த ரமணன், சஸ்பென்ஸ் தாங்காதவனாய்...

''ஊம்... அப்புறம்'' என்று தூண்டினான்.

''நான் சென்னைக்கு வந்தேன். வேலை பார்த்துக் கொண்டே ஈவினிங் காலேஜில் சேர்ந்து மேலே படித்தேன். என் தகுதிகளை உயர்த்திக் கொண்டேன். என் சம்பளமும் உயர்ந்தது. தனி ஆள்... அதிக செலவு செய்து பழக்க மில்லாதவன். சேமிப்பு சேர்ந்து மேலே கொஞ்சம் லோனைப் போட்டு சொந்தமாய் ஒரு அபார்ட்மெண்ட் வாங்கினேன். அடுத்து கார்.''

''ம்ம்... சொந்த அபார்ட்மெண்ட்... சொந்தக் கார்... கலக்கிட்டீங்க போங்க...''

''அப்போதுதான் அழகான ஒரு மாலை நேரத்து மழைச் சாரலில் உன் அக்காவைச் சந்தித்தேன்.''

''ஓ... அதனாலதான் அந்தப் பாட்டைக் கேட்டதும் அக்கா அசையாமல் உட்கார்ந்து வருகிறாளா?''



''எந்தப் பாட்டு... 'அந்தி மழை பொழிகிறது'ன்ற பாட்டுத் தானே...''

''அது எப்படி உங்களுக்குத் தெரியும்...?''

''நான் பாடிக் காட்டினேன்...''

''யாரிடம்?''

''வேறு யாரிடம்? உன் அக்காவிடம்தான்.''

பேச்சின் போக்கில் ரமணன் இயல்பாக கைலாஷை 'நீங்க' என்று மரியாதையாக அழைத்தான். அதே நேரத்தில் கைலாஷ் ரமணனை 'நீ... வா... போ...' என்று உரிமையுடன் அழைக்க ஆரம்பித்து விட்டான்.

## 17

''நானும் துர்க்காவும் ஒருவரையொருவர் காதலிக்க ஆரம்பித்தோம். அப்போதுதான் ஒரு நாள் நள்ளிரவில் ஆதித்யன்... ரோஜாவோடு என் அபார்ட்மெண்டிற்கு ஓடி வந்தான்.''

ரமணனுக்கு திரைப்படம் ஒன்றைப் பார்க்கும் உணர்வு வந்துவிட்டது. கைலாஷின் வாழ்வில் நடந்த விறுவிறுப் பான சம்பவங்கள் தன் வாழ்வில் நடக்கவில்லையே என்று அவனுக்கு பொறாமையாக இருந்தது.

''என்ன ஆனதாம்?''

''ரோஜா, நாங்கள் கடைசி வருடம் படித்தபோது முதல் வருடத்தில் சேர்ந்தவள். ஆதித்யன் அவளை ராகிங் பண்ணுகிறேன் பேர்வழின்னு கலாட்டா பண்ணியபோது ஒன்னு அழுது விட்டாள். ஆதித்யன் அப்போதே அவளிடம் கவிழ்ந்துவிட்டான். இது எனக்கு அரசல் புரசலாகத் தெரியும்...''

"அப்புறம்?"

"நான் சென்னைக்கு வந்த பின்னால் ஆதித்யனுடன் செல் போனில் அடிக்கடி பேசுவேன். ஆனால், அவன் ரோஜாவைப் பற்றி என்னிடம் எதுவும் சொன்னதில்லை."

"ஏன் மறைத்தாராம்?"

"அவனுடைய குடும்ப சூழ்நிலை அப்படி ரமணன். அவர்கள் மிகப் பெரிய பணக்காரர்கள். ஜாதிப் பற்று அதிகம் இருக்கும். ரோஜா ஏழை வீட்டுப் பெண். வேறு ஜாதி. இது போதாதா? அவன் காதலை வெளியே சொல்லாமல் மறைத்து வைத்தான்."

"அப்புறம் எப்படி வீட்டைவிட்டு ஓடிவந்தானாம்?"

"ஆதித்யனுக்கு தாய்மாமன் ஒருவர் இருந்தார். முரட்டு மாமன். அவருடைய பெண்ணிற்கும் ஆதித்யனுக்கும் கல்யாணம் நிச்சயம் ஆகி பத்திரிகை அடிப்பது வரை போய் விட்டது. ஆதித்யன் கல்யாணத்தை மறுத்திருக்கிறான். அவனுடைய மாமனுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. அவர் ரோஜாவைக் கொல்ல ஆளை அனுப்பி விட்டார்..."

"என்ன இது... என்னென்னவோ சொல்றீங்களே..."

"இதெல்லாம் எங்கள் ஊர்ப் பக்கம் சகஜமாக நடக்கும் விஷயம்... நீ பட்டணத்துக்காரன். உனக்கு புதிதாக தெரியும்..."

"அப்புறம் என்ன ஆச்சாம்?"

"ஆதித்யனுக்கு விஷயம் தெரிந்து ரோஜாவைத் தேடி ஓடியிருக்கிறான். கடைசி நிமிடத்தில் ரோஜாவைக் காப்பாற்றி கையில் பிடித்துக் கொண்டு சென்னைக்கு ஓடிவந்து விட்டான்..."

"நீங்கள் என்ன செய்தீங்க?"



"முதல் வேலையாய் அவங்க இரண்டு பேருக்கும் கோயிலில் கல்யாணத்தை நடத்திவிட்டு ரெஜிஸ்டர் பண்ணி விட்டேன்."

"பரவாயில்லை..."

"வேறு என்ன செய்ய... பஞ்சையும் நெருப்பையும் என் அபார்ட்மெண்டில் ஒன்றாக வைத்திருந்தேன். பற்றிக் கொண்டால் பழிபாவம் யாருக்கு... எனக்குத்தானே..."

"அதைச் சொல்லுங்க..."

"ரோஜா கன்ஸீவ் ஆகிவிட்டாள். ஆதித்யனுக்கு வேலைக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன். எல்லாம் நல்ல படியாக போய்க் கொண்டிருந்தபோதுதான் அது நடந்தது..."

"என்ன... என்ன ஆச்சு?"

"ஆதித்யன் இறந்துவிட்டான் ரமணன்..."

என்னவோ ஆண்டாண்டு காலமாய் ஆதித்யனை அறிந்தது போன்றதொரு தவிப்பு ரமணனுக்குள் உருவானது. குரல் கம்ம இதைச் சொன்ன கைலாஷின் விரல்களைப் பிடித்து ஆதரவு தரும் விதத்தில் அழுத்தினான் ரமணன்.

"எப்படி ஆனது?"

"தெரியவில்லை. ரோட்டில் அடிபட்டு கிடந்தான். லாரி அடித்துவிட்டதா... இல்லை... ஆள்கள்தான் தீர்த்துக் கட்டி விட்டார்களான்னு தெரியவில்லை..."

"ஆள்களா?"

"ரமணனின் மாமா... முரடர். யாருக்கும் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார். கல்யாண மேடை வரைக்கும் வந்து நின்றுபோன மகளின் கல்யாணம் அவரைப் பார்த்திருக்கலாம்."

"அதற்காக இப்படியும் செய்வாங்களா?"

"இது யூகம்தான். கண்ணால் பார்த்த சாட்சி யாருமில்லையே..."

"ரோஜா இதை எப்படித் தாங்கிக்கிட்டாங்க..."

"அழுதாள். தானும் செத்துப்போவதாகக் கூறினாள். நான்தான் அவளைத் தடுத்து நிறுத்தினேன்."

"அவங்களைப் பற்றி ஆதித்யனின் வீட்டிற்குத் தெரியுமா?"

"தெரியாது... அவங்களுக்கு நான் இங்கே இருப்பதே தெரியாது."

"நீங்களும் ஆதித்யனும் திக் ஃப்ரெண்ட்ஸுன்னு சொல்றீங்க... அப்புறம் உங்களைத் தெரியாமல் எப்படிப் போகும்?"

கைலாஷின் இதழ்களில் கேலிப்புன்னகை ஒன்று உதித்தது.

"அது அப்படித்தான் ரமணன். அவங்க என்னை ஒரு மனிதனாகவே கன்ஸிடர் பண்ண மாட்டாங்க. அப்புறம் எப்படி ஆதித்யனின் நண்பனாக என்னைக் கன்ஸிடர் பண்ணுவாங்க?"

"ஏன்?"

"ஏன்னா... நான் ஏழை. அதுதான் காரணம். ஏழையிலும் நான் பரம ஏழை. என்னைப் போய் அவர்கள் ஆதித்யனின் நண்பனாக ஒரு நாளும் நினைக்க மாட்டாங்க..."

"இது என்ன அநியாயம்? ஃப்ரெண்ட்ஷிப்புக்குள் இதெல்லாம் வராதே சார்..."

"எங்கள் ஊரில் வரும். அதனால்தான் ஆதித்யன், ரோஜாவோடு என்னைத் தேடி வந்தான். அப்போதும் அவர்கள் ஆதித்யனை சென்னையில் தேடும்போது தனியாகத்தான் பார்த்திருக்கிறார்கள். ரோஜாவைப் பற்றியோ ஆதித்யனும் அவளும் கல்யாணம் பண்ணிக் கொண்டதைப் பற்றியோ என்னைப் பற்றியோ தெரிந்திருந்தால் என்னையும் ரோஜாவையும் தேடி வராமல் விட்டு வைத்திருக்க மாட்டார்கள்.



ரமணன் விழி விரிய கேட்டுக் கொண்டிருந்தான்.

## 18

அது பின்னிரவு தொடங்கிக் கொண்டிருந்த நேரம்... இரவுக்கே உரிய இதமான காற்றும் அழகான அமைதியும் அவர்களை அரணாகச் சூழ்ந்திருந்தன. ரமணன் அந்த அமைதியைக் கலைத்தான்.

"ஆதித்யனின் வீட்டிற்கு அவர் இறந்துவிட்டது தெரியுமா?"

"தெரியும்..."

"யார் சொன்னது?" நீங்கள் சொன்னீர்களா?"

"இல்லை ரமணன். எனக்கு அதுதான் சந்தேகமாக இருந்தது. ஆதித்யனைக் காணோம்னு ரோஜா அழுதாள். நான் அப்போதுதான் கம்பெனியில் வேலையை முடித்து விட்டு திரும்பி வந்திருந்தேன். ரோஜா சொன்னதைக் கேட்டதும் உடனடியாக காரை எடுத்துக் கொண்டு ஆதித்யனைத் தேடிப் போனேன். அவன் இறந்துகிடந்த இடத்தில் கூட்டம் இருந்தது. விலக்கிப் பார்த்தால் அது ஆதித்யன். நான் வாய்விட்டுக் கதறும் முன்னால் அவனுடைய மாமா கதறிக் கொண்டு அவன் பக்கத்தில் போய் விழுந்தார். அவரும் அப்போதுதான் வந்தாராம்."

"அது எப்படி கரெக்டாக அங்கே அப்போது வர முடிந்தது?"

"அதனால்தான் நான் அவர்மேல் சந்தேகப்படுகிறேன்?" ஆதித்யனின் வீட்டிலிருந்து வந்து அவனுடைய உடலை வாங்கிக் கொண்டு போய் விட்டாங்க. ஆக்ஸிடெண்ட்னு போலீஸ் கேஸை பதிவு பண்ணி விட்டாங்க. நான் வந்த

சுவடு தெரியாமல் யார் கண்ணிலும் படாமல் நழுவி வந்து விட்டேன்...''

''ஏன் அப்படிச் செய்தீங்க?''

''நிச்சயமாய் என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அப்படி வரவில்லை. ரோஜாவைக் காப்பாற்ற வேண்டாமா? அவளுடைய வயிற்றில் என் ஆதித்யனின் குழந்தை இருந்ததே... அதைக் காப்பாற்ற வேண்டாமா?''

''என் ஆதித்யன்...!' என்ன மாதிரியான நட்பு இது என்று ரமணன் சிலிர்த்துப் போனான்.

நினைத்ததைச் சொன்னபோது கைலாஷ் கடந்த கால நினைவுகளுக்குச் சென்றவனாக தொலைதூரத்தில் தெரிந்த கடலலைகளைப் பார்த்தபடி பதில் கூறினான்.

''அவன் என் ஆதித்யன்தான் ரமணா... தாய், தகப்பனில்லாத எனக்கு இரண்டுமாக அவன் இருந்தான்...''

''இன்றைக்கு தாய், தகப்பனில்லாத அவருடைய குழந்தைக்கு நீங்க தாயும், தகப்பனுமாக இருக்கறீங்க... இதுவும் கடவுளின் சித்தம் போல... இல்லையா அத்தான்?''

ரமணனின் வார்த்தைகளினால் கண்கள் கசிந்த கைலாஷ்... அவன் 'அத்தான்' என்று அழைக்கவும்... உடல் சிலிர்க்க அவனைப் பார்த்தான்.

''என்ன சொன்னாய் ரமணா?''

''அத்தான் என்று சொன்னேன்...''

''என்னையா அப்படிச் சொன்னாய்?''

''உங்களைச் சொல்லாமல் வேறு யாரைச் சொல்வேன்?''

''எப்படி ரமணா? என்னைப் பார்க்க வரும்போது கொலை வெறியோடு வந்தாய்...''

''இப்போது உங்களின் கால்களில் விழுந்து வணங்க வேண்டும் போல இருக்கிறது அத்தான். என்ன மாதிரியான மனிதர் நீங்கள்! யூ ஆர் ஸோ கிரேட் அத்தான்...''



''இவ்வளவு உயர்வாக நீ என்னை நினைக்கும்படி நான் அப்படி என்ன செய்து விட்டேன்?''

''நன்றி மறப்பது நன்றன்று'னு வள்ளுவர் சொல்லி யிருக்கிறார்... அதே வள்ளுவரே... எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு... என்றும் சொல்லியிருக்கிறார்... நீங்க நன்றி மறக்க வில்லையே அத்தான்...''

''நன்றி மறந்து என்னால் எப்படி இருக்க முடியும் ரமணா. ஆதித்யன் இல்லாவிட்டால் இந்த கைலாஷ் இல்லை. அவனுடைய அன்பும் ஆதரவும் நட்பும் இல்லாமல் போயிருந்தால் நான் வாழ்க்கையின் ஓட்டத்தில் காணாமல் போயிருப்பேன். இப்படி படித்து முன்னேறி உயர்ந்த நிலைக்கு வந்திருக்க மாட்டேன்...''

''செஞ்சோற்றுக் கடன் பட்டானாம் மகாபாரதத்தில் அந்த கர்ணன். அது போல் நீங்களும் ஆதித்யனிடம் நன்றிக்கடன் பட்டு விட்டீர்கள்...''

''ஆமாம். செஞ்சோற்றுக் கடன் தீர்க்கத்தான் நான் பின்வாங்கி என்னை மறைத்துக் கொண்டு ரோஜாவைக் காப்பாற்ற ஓடினேன். அந்த துரியோதனன், கர்ணனுக்கு நாடு கொடுத்தான். நட்பைக் கொடுத்தான். என் ஆதித்யன் அதற்கும் மேலே அன்பை அள்ளி அள்ளிக் கொடுத்தான் ரமணா. தேரோட்டியின் மனைவி... ராதையின் தாய்ப்பாச மாவது கர்ணனுக்கு கிடைத்ததே. எனக்கு அதுவும் கிடைத்த தில்லையே. அந்த இரண்டையும் என் ஆதித்யன் தான் எனக்குக் கொடுத்தான்...''

இது ஒருவகையான பந்தம். மனதிலிருப்பதை எல்லோ ராலும் எல்லோரிடமும் சொல்லிவிட முடியாது. சொல்லி அழும்போது வெளிப்படும் வார்த்தைகளின் கனத்தை... அது வெளிப்படுத்தும் உணர்வுகளின் மதிப்பைப் புரிந்து

கொண்டு அதற்கு கௌரவம் கொடுக்கும் நபரிடம்தான் அவற்றைச் சொல்லி அழ முடியும்.

கைலாஷ் பிறந்ததில் இருந்து தனிமைப்பட்டான்... அவனுக்கு எல்லாமுமாக இருந்த ஆதித்யனின் அகால மரணத்தைப் பற்றிய செய்தியை அவனுடைய உயிரில் கலந்துவிட்ட காதலியிடம் பகிர்ந்துகொள்ளத் துடித்தான். ஆனால் துர்க்கா, கைலாஷைத் தவறாக நினைத்து வெறுத்து ஒதுங்கி விட்டாள்.

கைலாஷ் தன் துக்கங்களை, சோகங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ளாமல் இதயத்தில் பூட்டி வைத்துக் கொண்டான்.

## 19

மடை திறந்த வெள்ளம் போல் இன்று ரமணனிடம் கைலாஷ் கொட்டிக் கொண்டிருக்கும் மன உணர்வுகளை துர்காவிடம் கொட்டிவிடத்தான் அவன் துடித்தான். தவித்தான். போராடினான். ஆனால், துர்க்கா தன் செவிகளை மூடிக் கொண்டாள் வேறுவழி தெரியாமல் கைலாஷ் அவளைப் பிரிந்து பெங்களூர் சென்றான்.

"நான் வேறு என்ன செய்ய முடியும் ரமணன். ஆதித்யன் குடும்பம் பணத்தில் மட்டுமில்லாமல் அளவிலும் பெரியது. அவனுக்கு அண்ணன்கள் இரண்டு பேர் ஒரு அக்கா என்று மூன்று உடன்பிறப்புகள் இருக்கிறாங்க. இவன்தான் கடைக்குட்டி. அதனால் எல்லோருக்கும் செல்லம். என்ன ஒன்று... மற்றவர்கள் எல்லாம் அந்தஸ்து பார்த்துப் பழக... இவன் மட்டும் கடைநிலையில் கிடந்த என்னைக் கைதூக்கி விட்டு என்னிடம் உயிராய் பழகினான்..."



"சென்னையில் நிறையப் பேர் இப்படி இருக்கிறாங்க அத்தான்..."

"கிராமத்துப் பக்கம் அப்படி இருக்க மாட்டாங்க ரமணன். ஆதித்யனின் குடும்பத்தில் அவன் மரணம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. கொஞ்ச நாள் அழுவார்கள். அப்புறம் மறந்து விடுவார்கள். ஆனால் ரோஜா... ஆதித்யனை நம்பி அவன் பின்னே ஓடிவந்தவள். அவனுடைய குழந்தையை வயிற்றில் சுமப்பவள். அவளை நான் பார்த்தாக வேண்டாமா ரமணன்?"

"கட்டாயம் பார்க்க வேண்டும் அத்தான். அது உங்கள் கடமை..."

"அந்தக் கடமையைத்தான் நான் செய்தேன். ஆதித்யன் ஊருக்குப் போயிருப்பதாக கொஞ்ச நாள் சொன்னேன். ரோஜா தானும் அவனைத் தேடி அவன் ஊருக்கே போவதாகச் சொல்லிக் கிளம்பி விட்டாள்..."

"அடக் கடவுளே..."

"இவள் வயிற்றில் குழந்தையோடு அங்கே போய் நின்றால் என்ன ஆகும்? வேற்று இனத்துப் பெண் வயிற்றில் அவங்க வீட்டு வாரிசு வளர்வதை வெளியே மூடி மறைக்கப் பார்ப்பாங்க. அவளுடைய உயிருக்கு ஆபத்து வந்து விடும். அவளை உயிருடன் விட்டு வைக்க மாட்டாங்க..."

"எனக்கு என்னவோ நீங்க ஆதித்யனின் அம்மாவிடம் பேசிப் பார்த்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது அத்தான். ஆயிரம்தான் இருந்தாலும் தாய் மனது மகனின் பிள்ளையைப் பார்த்தால் அவங்க மனம் ஆறுமில்லையா?"

"நானும் அதையேதான் நினைத்தேன். ஆனால், ரோஜாவை கர்ப்பிணியாக கூப்பிட்டுக் கொண்டு போவதை விட கையில் குழந்தையோடு கூப்பிட்டுக் கொண்டு போவது பெட்டர்னு தோன்றியது. அது ரோஜாவுக்கு பாதுகாப்பு... ஆதித்யனின் குழந்தையின் முகத்தைப் பார்த்து

விட்டால் அந்தக் குழந்தையின் அம்மாவை அழிக்கத் தோன்றாது இல்லையா?''

எல்லா வகையிலும் யோசித்து செயலாற்றியிருந்த கைலாஷின் புத்திகூர்மையை எண்ணி வியந்து கொண்டான் ரமணன்.

''ரோஜாவிடம் எப்படி அத்தான் ஆதித்யன் இல்லாததைச் சொன்னீங்க...''

''வேறுவழியில்லை ரமணா... உண்மையைச் சொல்ல வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. சொல்லி விட்டேன்.''

''அவங்களால் தாங்கிக் கொண்டிருக்க முடியாதே...''

''முடியாதுதான். ஆனால், வேறுவழியில்லையே...''

''எப்படி அவங்களைச் சமாளித்தீங்க?''

''குழந்தையை நினைவுபடுத்தித்தான். வேறு என்ன சொல்ல முடியும்? அப்படி ஒரு நாள் ரோஜா அழுது புலம்பிக் கொண்டிருக்கும்போது நான் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தேன். அந்த நேரம் பார்த்து உன் அக்கா அங்கு வந்து விட்டாள். ரோஜாவும் நானும் பேசிக் கொண்டிருந்ததைத் தவறாக புரிந்து கொண்டு விட்டாள்.''

''நீங்கள் அப்படி என்னதான் பேசிக் கொண்டிருந்தீங்க அத்தான்?''

''அதையேன் கேட்கிறாய். சொன்னால் நீ சிரித்து விடுவாய்...''

''அதெல்லாம் மாட்டேன்.''

''அதைக் கேட்ட பின்பு சொல்லு.''

''நீங்க சொல்லுங்க... நான் சிரிப்பு வருகிறதான்னு பார்க்கிறேன்.''

''ரோஜா இந்த உலகத்தில் அவளுக்கு துணையாக யாரிருக்கிறாங்கன்னு கேட்டு அழுதாள்...''



''உடனே நீங்க நானிருக்கிறேன் உனக்குன்னு சொல்லியிருப்பீங்க. கரெக்ட்தானே அத்தான்...''

''கரெக்ட். சும்மாவும் சொல்லவில்லை. கடைசிவரை நானிருப்பேன்னு சொன்னேன்.''

''கிழிஞ்சது போங்க. இதைக் கேட்டுவிட்டு எந்தக் காதலிதான் பேசாமல் இருப்பாள்?''

''யாருக்காக நான் உயிர் வாழணும்னு கேட்டு ரோஜா அழுதாள். அதற்கு நான் உன் வயிற்றில் வளரும் பிள்ளைக்காக உயிர் வாழ வேண்டாமான்னு கேட்டேன்.''

''கேட்டதை சரியாகக் கேட்டு வைத்திருக்க வேண்டாமா? உன் வயிற்றில் வளரும் என் நண்பனின் குழந்தைக்காக உயிர் வாழ வேண்டாமான்னு கேட்டால் அதில் ஓர் அர்த்தம் இருக்கிறது. இப்படியா மொட்டை தாத்தா குட்டையில் விருந்தான் என்பது போல கேட்டு வைப்பாங்க?''

''பின்னால் உன் அக்கா நின்றுகொண்டிருக்கிறாள் என்று நான் கனவா கண்டேன்?''

''அதுசரி... அக்கா பின்னால் நின்றதுதான் உங்களுக்குத் தெரியாது. பகலில் பக்கம் பார்த்துப் பேசுன்னு ஒரு பழமொழி இருக்கே... அதுவுமா உங்களுக்குத் தெரியாது?''

தமக்கையின் காதலன் தூயவன் என்று அறிந்துவிட்ட மகிழ்ச்சியில் ரமணன் கைலாஷை மடக்கி மடக்கி கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான்.

## 20

''இதையெல்லாம் யார் சொல்லித் தர வேண்டும்? தாய் சொல்லித் தர வேண்டும். எனக்குத் தாய் இல்லை. தாய்க்குப்

பின் தாரம்தானே சொல்லித் தர வேண்டும்? அவளோ தவறாகப் புரிந்து கொண்டு ஓட்டம் பிடித்து விட்டாளே..."

"அக்காவுக்கு ஒல்லியான உடல்வாகு... அதனால் ஈஸியாய் ஓட்டப் பந்தயம் வைப்பாள். அவளுடன் ஓடிப் பிடித்து விளையாட உங்களால் முடியாதுதான். அடுத்து என்ன பேசி வைத்தீங்க?"

"என் குழந்தை இந்த நிலையில் பிறக்கிறதேன்னு சொல்லி ரோஜா அழுதாள்."

"பாவம்... அவங்க துயரம் அவங்களுக்கு..."

"உன் குழந்தைக்கு நான் பாதுகாப்புன்னு நான் சொல்லி வைத்தேன்..."

"வெரிகுட்... இதையும் அக்கா கேட்டு விட்டாள்?"

கைலாஷ் அழமாட்டாத குறையாக 'ஆமாம் சாமி' போட, ரமணன் சிரித்து விட்டான்.

"இந்தச் சோகக் கதையிலும் உங்கள் நிலைமையை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. அத்தான்..."

"உங்களுக்கு கல்யாணமாகி உங்கள் பெண்டாட்டி வந்து விட்டால் 'இதற்கு ஒப்புக்கொள்வாளானு?' ரோஜா கேட்டாள்..."

"பாவம்... கவலையில் அவங்களும் பேசத் தெரியாமல் பேசிவிட்டாங்க போல..."

"ம்ம்... நான் அதற்கும்... யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் உன் வயிற்றில் வளரும் குழந்தையை வளர்த்தே தீருவேன்னு சொன்னேன்..."

"வீர சபதம்தான் போட்டிருக்கீங்க. அது இவ்வளவு வில்லங்கத்தையும் கொண்டு வந்துவிட்டது. சிக்கலான நூலைப் பிரிக்கலாம். பிரிக்கவே முடியாமல் சிக்கலாக்கி விட்டு அதன் நடுவில் மாட்டிக் கொண்டு விழித்துக்



கொண்டு இருக்கிறீங்க. இதை எப்படிச் சரிபண்ணுவதுன்னு தான் எனக்குப் புரியவில்லை..."

"சின்ன நூல்கண்டா நம்மை சிறைபடுத்துவது?"

"அத்தான். வேண்டாம். சிவசங்கரியின் கட்டுரை டைட்டிலை சொல்லிவிட்டால் மட்டும் சிக்கலான நூல் கண்டிலிருந்து நீங்கள் வெளியே வந்து விடுவீங்களா?"

"பின்னே... என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய் ரமணா... நானும் உன் அக்காவின் பின்னாடி டாமி போல அலைந்து பார்த்துவிட்டேன். அவள் மசியவில்லை."

"டாமியா. யார் அது?"

"பக்கத்து வீட்டு நாய்க்குட்டியின் பெயர் அது..."

"சிரிக்க வைக்காதீங்க அத்தான்."

"போன் மேல் போன் போட்டுப் பார்த்துவிட்டேன். என் நம்பரைப் பார்த்தாலே கட் பண்ணி விடுவாள்."

"அதற்காக அப்படியே விட்டு விடுவதா?"

"யார் விட்டது? ரோஜாவை சென்னையில் என் அபார்ட்மெண்டிலேயே பாதுகாப்பாய் தங்க வைத்துவிட்டு நான் மட்டும் பெங்களூர் போய் வேலையைப் பார்த்தேன். வீக் எண்டில் வந்து விடுவேன்."

"ஏன்?"

"அவளோடு பெங்களூர் போய் ஒரே வீட்டில் எப்படி இருப்பது? நான் அவளுக்கு காவலன்தான். என் நண்பனின் மனைவி எனக்குத் தங்கைதான். ஆனால், அறியாத ஊரில் அவளையும் என்னையும் இணைத்துப் பேச மாட்டார்களா?"

"அதையே சென்னையில் பேச மாட்டாங்களா?"

"மாட்டார்கள்..."

"ஏன்?"

"ஏனென்றால், சென்னையில் எங்கள் அபார்ட்மெண்டில் இருக்கிறவங்களில் எனக்குப் பழக்கமானவங்க எல்லோருக்கும் ஆதித்யனைப் பற்றியும் ரோஜாவைப் பற்றியும் தெரியும். ஆதித்யன் இறந்துபோய்விட்ட விவரமும் தெரியும். அவங்களுக்கு ரோஜாவின் மேல் பரிதாபம் உண்டு..."

"இந்த விவரங்களை முதலிலேயே அக்காவிடம் சொல்லி யிருந்தால் அவளுக்கும் ரோஜாவின் மேல் பரிதாபம் வந்திருக்கும் இல்லையா?"

"தப்புதான் ரமணன். நான் அவளிடம் இதைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும்தான். ஆதித்யன்... ரோஜாவை இழுத்துக் கொண்டு வந்துவிட்டான். நண்பனின் பர்ஸனலைப் பற்றிக் காதலியிடம் சொல்ல வேண்டா மேன்னு நினைத்தேன்."

"காதலியைப் பற்றித்தான் நண்பனிடம் பேசக்கூடாது அத்தான். நல்ல குடி நாணயம் போல கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அவளிடம் போய் நம்மைப் பற்றி எக்குத்தப்பாய் பேசி பிட்டைப் போட்டுவிட்டு அவனுக ருட்டைப் போட்டு விடுவானுக..."

"இதிலெல்லாம் நீ விவரமான ஆளாக இருக்கிறாய் போல..."

"என்ன விவரமிருந்து என்ன பண்ண... இன்னும் ஒரு பெண்கூட என்னிடம் அகப்பட மாட்டேன் என்கிறாளே."

"ஏன் அப்படி?"

"என்மேல் அவ்வளவு நம்பிக்கை..."

"உனக்கென்ன ரமணன். நீ ஹீரோ போல இருக்கிறாயே..."

"அதனால்தான் எதற்கும் இருக்கட்டும்னு எல்லாப் பெண்களிடமும் நூல் விட்டுப் பார்க்கிறேன். ஒருத்தியும் சிக்குவதில்லை..."



"அப்போ... நீ ஒன்றிலேயே நிற்கவில்லையா?" அதற்கு ரமணன் சொன்ன பதிலைக் கேட்டு கைலாஷ் சிரித்து விட்டான்.

## 21

"எதுக்கு அத்தான் அந்த விஷப்பரீட்சை? ஒன்றிலேயே நின்று நீங்கள் படும் பாடு போதாதா? நானெல்லாம் உஷாரான ஆளாக்கும்."

"போதும் ரமணா... எனக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை."

"ஓகே. இந்தக் கதையை விட்டுவிட்டு நம் சொந்தக் கதைக்கு வரலாம்... அடுத்து என்ன ஆனது?"

"ரோஜாவிற்கு சென்னையில் பிரசவம் ஆனது. அந்தப் பிரசவத்தில் ரோஜா செத்துப்போனாள்..."

"அத்தான்..."

"ம்ம்... எப்போதும் ஆதித்யனின் நினைவிலேயே இருந்து கொண்டு ஒழுங்காய் சாப்பிடாமல் இருந்தால் என்ன ஆகும்? பிரசவத்தைத் தாங்கிக் கொள்ள அவளுக்கு சக்தி இல்லாமல் போய்விட்டது."

ரோஜா உயிரோடு இல்லையென்பது ரமணனுக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனாலும் முதலில் இருந்து மனநிலையில் அவள் துர்காவின் காதலைக் குலைக்க வந்த வில்லியாக ரமணனுக்குத் தெரிந்தாள். இப்போது உண்மை தெரிந்த பின்னால் அவளை நினைத்து ரமணனுக்குள் பரிதாபம் சுரந்தது.

"பாவம் அத்தான்."

"பாவம்தான். ஆனால், ஒருவகையில் அவளுடைய முடிவு இப்படித்தான் அமையுமென்று என் மனதில் பட்டது."

"என்ன அத்தான் சொல்கிறீங்க..."

"அவள் அடிக்கடி சொல்வாள் ரமணா... 'நான் இல்லா விட்டாலும் என் குழந்தையை நீங்கள் பார்த்துக் கொள்வீங்க என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு'ன்னு... அவள் ஒரு முடிவோடுதான் இருந்திருக்கிறாள். ஆதித்யனின் குழந்தையைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமைக்காக உயிரைச் சுமந்தவள், அந்தக் கடமை முடிந்ததும் பறந்து விட்டாள். அவள் ஆதித்யனின் மேல் உயிரையே வைத்திருந்தாள். அவன் போனபின் அவள் அத்தனை நாள்கள் உயிரோடு இருந்ததே அதிசயம்தான்."

'என்ன மாதிரியான காதல் ஜோடி...' என்ற நினைவில் ரமணனின் மனம் நெகிழ்ந்தது...

"ரோஜாவிற்கு செய்ய வேண்டிய கடைமைகளைச் செய்தபின் குழந்தையை அந்த ஹாஸ்பிடலில் காட்ட அடிக்கடி போவேன். தாயில்லாமல் வளரும் குழந்தைக்கு அதிக மருத்துவக் கவனிப்பு தேவைப்பட்டது. அப்படி ஒரு நாள் போனபோது துர்காவை திரும்பவும் பார்த்தேன்..."

"பேசியிருக்க வேண்டியதுதானே..."

"அவள் திரும்பவும் ஓடிவிட்டாள். சரி, என்னை வெறுத்து விட்டாள். இனி குழந்தையை வளர்ப்போம்னு நினைத்து ஒதுங்கிப் போய் விட்டேன். திரும்பவும் சென்னைக்கே மாறுதல் கிடைத்தது. இந்த இடைப்பட்ட நாள்களில் துர்கா வாழ்க்கையில் செட்டிலாகியிருப்பாள் என்ற நினைவுடன் திரும்பி வந்தேன்."

"நீங்களில்லாத வாழ்க்கையை அக்கா வாழ்ந்து விடுவாளா? உண்மையான காதல் என்பது ஆதித்யனுக்கும் ரோஜாவுக்கும் மட்டும் சொந்தமா? உங்களுக்கும் என் அக்காவிற்கும் சொந்தமில்லையா?"



"என் மனதில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை..."

"அவள் மனதிலும் உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை..."

"அவள் வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தாலும் நான் அவள் நினைவோடு கடைசி வரை கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல்தான் இருந்திருப்பேன்..."

"அவளும் இதே டயலாக்கைத்தான் சொல்கிறாள்."

அவ்வளவு நேரமும் மனம்விட்டுப் பேசிக் கொண்டிருந்ததில் கைலாஷின் மனம் லேசாகி விட்டிருந்தது. அவன் ரமணனின் கையைப் பிடித்து...

"தேங்க்ஸ் ரமணன்" என்றான்.

"நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். எங்கே என் அக்காவின் வாழ்க்கை இப்படியே வீணாகப் போய்விடுமோன்னு கலங்கிப் போயிருந்தேன். நீங்கள் கலங்கரை விளக்கு போல் வழிகாட்டி விட்டீங்க..."

"இப்போது என்ன செய்யப் போகிறீங்க ரமணன்?"

"அக்காவிடம் போய் நடந்த உண்மைகளைச் சொல்லப் போகிறேன்..."

"வேண்டாம்."

ரமணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏன் கைலாஷ் இப்படிச் சொல்கிறான் என்ற கேள்வியோடு அவனைப் பார்த்தான்.

"என் மனதில் முள் இருக்கிறது ரமணன். அதைத் துர்காதான் எடுக்க வேண்டும்."

"புரியவில்லை..."

"காதல் என்றால் என்ன? அது ஒருவகையான பந்தம். வெறும் உடல் ஈர்ப்பு மட்டுமில்லை அது... திருமணத்தில் கூட லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து வியாபாரம் போல்

பேசி முடிப்பார்கள். காதல் லாப நஷ்டக் கணக்கு பார்க்காது..."

"அக்கா அப்படி எதுவும் செய்யவில்லையே..."

"அது எனக்கும் தெரியும். நான் எங்கே வேலை பார்க்கிறேன் என்பதைக்கூட அவள் கேட்டுக் கொள்ளவில்லை. என் ஏழ்மையான பின்புலம் பற்றி விசாரிக்கவில்லை. என்னை எனக்காகவே காதலித்தாள்..."

இதைச் சொல்லும்போது மென்மையான கைலாஷின் முகம் மெல்ல மாறியது. அவன் புருவம் சுளித்தான்.

## 22

"அது தெரிந்த பின்னாலும் ஏன் அத்தான் இந்த யோசனை?"

"காதலில் நம்பிக்கை என்பது அவசியம் இல்லையா? அவள் என்னைச் சந்தேகப்பட்டாளே. நான் துரோகியென்று நினைத்து விலகிப் போய் விட்டாளே. என் விளக்கத்தைக் கேட்க மறுத்து விட்டாளே... செய்யலாமா? அப்படிச் செய்யலாமா?"

"உங்களைத் தவறாக நினைத்துவிட்டதற்காக அக்காவின் மேல் கோபப்படுகிறீர்களா?"

"இல்லை ரமணன். அவள் என்னைத் துரோகியென்று நினைத்துவிட்டதற்காகக்கூட நான் வருத்தப்படவில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவளை அப்படி நினைக்க வைத்திருக்கலாம். ஆனால், அவள் என் சட்டையைப் பிடித்து நியாயம் கேட்டிருக்கலாமே... ஏன் செய்யவில்லை?"



"உங்களின் சட்டையைப் பிடிப்பது என்பது உங்களுக்கு அவ்வளவு பிடித்தமான விஷயமா? அக்காவிற்குப் பதில் நான் உங்கள் சட்டையைப் பிடித்து நியாயம் கேட்டு விட்டேனே... அதிலேயே சமாதானம் அடைந்து கொள்ள வேண்டியது தானே..."

"நீங்கள் எப்போது வந்து நியாயம் கேட்கறீங்க ரமணன்... இரண்டு வருடம் கழித்து வந்து நியாயம் கேட்கறீங்க."

"இரண்டு வருடத்திற்கு முன்னால் நான் ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்தேன் அத்தான். நியாயம் கேட்கும் வயதிற்கு நான் அப்போது வரவில்லை..."

சூழ்நிலையை இலகுவாக்க ரமணன் செய்த முயற்சியைக் கண்டு கைலாஷ் லேசாக சிரித்தான். அன்போடு ரமணனின் கையில் மெதுவாக தட்டினான்.

"இல்லை ரமணன். அவள் என்னை நம்பவில்லை. நம்பிக்கை எங்கே இல்லையோ அங்கே காதலும் இருக்காது."

"அத்தான்..."

"துர்கா என்னை நம்பட்டும். மனப்பூர்வமாக என்னை இதே நிலைமையிலேயே ஏற்றுக்கொள்ளட்டும். அதற்குப் பின்னால் நான் இந்த உண்மைகளை அவளிடம் சொல்கிறேன்."

"எதற்கு அத்தான் இந்த வேண்டாத வேலை? என் அப்பாவும் அம்மாவும் என் அக்காவின் கல்யாணம் காலாகாலத்தில் நடக்கவில்லையென்ற கவலையில் இருக்கிறார்கள். என் அக்கா வாழ்ந்தால் உங்களோடுதான் வாழ்வேன்னு பிடிவாதமாக காலம் தள்ளிக் கொண்டிருக்கிறாள். டகார்னு வந்து, படார்னு தேங்காயை உடைத்தது போல் உண்மையச் சொல்லுவீங்களா... அதை விட்டுவிட்டு வீணான விஷப் பரீட்சை எதற்கு?"

"என் மனம் துடித்த துடிப்பு உனக்குத் தெரியாது ரமணன்... நான் தாய், தகப்பனில்லாதவன். வளர்த்த

தாத்தாவும் இடையில் போய்விட்டார். நண்பனையும் காலப்போக்கில் பிரிந்து வேலைக்கு வந்து விட்டேன். எனக்கு வாழ்வில் அனைத்து சொந்தகளுமாய் நின்றவள் துர்கா. என்னை அநாதை போல் விட்டுவிட்டு அவள் போகலாமா?''

''அடடா... இது என்ன அத்தான் உங்களோடு பெரிய ரோதனையாய் இருக்கிறது. என் அக்கா என்ன உங்களைவிட வசதியான அமெரிக்க மாப்பிள்ளை எவனுக்காவது கழுத்தை நீட்டிவிட்டு என்னை மறந்துவிடுங்கள் கைலாஷ்னு சொல்லி உங்களைக் கை கழுவிவிட்டா போய் விட்டாள்? பெண் பார்க்கக்கூட ஒருவனையும் வரவிட மாட்டேன்னு பிடிவாதமாய் உட்கார்ந்து கொண்டு இருக்கிறாள். அவளைப் போய் குறை சொல்கிறீங்களே...''

''என்னைத் தவறாய் நினைத்துவிட்டாளே...''

''நீங்களும்தான் அவளைத் தவறாய் நினைத்தீங்க...''

''நான் என்ன நினைத்தேன்?''

''மிஸ் துர்காவா... இல்லை மிஸஸ் துர்காவான்னு நீங்க அக்காவிடம் கேட்கவில்லையா?''

''என் மனதுக்குத் தெரியும் ரமணன். அவள் மிஸ் துர்காவாகத்தான் இருப்பாள் என்று...''

''இப்போதுதான் அவள் செட்டிலாகியிருப்பாள் என்ற நினைவில் சென்னைக்கு வந்தேன்னு சொன்னீங்க...''

''என் அடிமனதில் அவள் தனித்துதான் இருப்பாள் என்ற எண்ணம் இருந்தது...''

''இது வேலைக்கு ஆகாதுங்க... விட்டால் விடிய விடிய நீங்க வியாக்கினம் பேசிக்கிட்டு இருப்பீங்க. இப்போ என்னதான் செய்யணும்ங்கறீங்க?'

''துர்கா என்னைத் திரும்பவும் காதலிக்கட்டும். என்னை முழுமனதாய் ஏற்றுக் கொள்ளட்டும். அதற்குப் பின்னால் நான் அவளிடம் நடந்ததைச் சொல்கிறேன்...''



''அவ்வளவுதானே... அதை நான் பார்த்துக் கொள்கிறேன்...''

''என்ன செய்யப் போகிறீங்க...''

''செய்வதற்கு நிறைய காரியம் இருக்குங்க. அதையெல்லாம் வெளியில் சொல்ல முடியாது. சஸ்பென்ஸ்.''

ரமணன், கைலாஷிற்கு கையாட்டிவிட்டு விடை பெற்றான்.

## 23

தலைமாட்டில் இருந்த செல்போனில் ஒலித்த அலாரத்தின் சத்தம் கேட்டுக் கண்விழித்த துர்கா, அவசரமாக எழுந்து கொண்டாள்.

'குழந்தையைக் குளிக்க வைத்து பால் கரைத்துக் கொடுத்துவிட்டு நானும் கிளம்பியாக வேண்டுமே...'

பதற்றத்துடன் விரிந்திருந்த கூந்தலை முறுக்கி சிறிய கொண்டையாக போட்டுக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்தவள், திகைத்து நின்றாள்.

குளித்துவிட்டு வந்திருந்த ரமணன், குழந்தையையும் குளிக்க வைத்துவிட்டு... அதைத் திரும்பவும் பவுடரால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான்.

துர்கா ஜன்னல் வழி வெளியே எட்டிப் பார்க்க...

''ஹாய் அக்கா. குட்மார்னிங்.. என்ன ஜன்னலுக்கு வெளியே பார்வையிடுகிறாயே... என்ன விஷயம்?'' என்று கேட்டான் ரமணன்.

''இல்லை. கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதிச்சிருக்கான்னு பார்க்கிறேன்' என்று கூறியவாறே

கோமளவள்ளி கொடுத்த காபி தம்ளரை வாங்கிக் கொண்டு தம்பியின் அருகே சென்று அமர்ந்தாள் துர்கா.

நத்தை கூட்டுக்குள் ஒடுங்கியிருந்ததைப் போல தனக்குள்ளேயே எதையோ ஒரு சோகத்தைப் புதைத்துக் கொண்டு நடமாடிய மகள் இயல்பாய் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட கோமளவள்ளியின் மனம், கொஞ்சம் சந்தோஷப்பட்டது.

"என்னடி... துர்காவை ஏன் அப்படிப் பார்க்கிற?" அவளுக்கு பின்னால் வந்து நின்ற சுப்ரமணி வினவினார்.

"நான் பார்த்தால் என்னவாம்..."

"கண் பட்டு விடாதா?"

"போய் உங்கள் செல்ல மகளுக்கு சுற்றிப் போடுங்க..."

கோமளவள்ளி நொடித்துக் கொண்டாள். அவள் மனதில் இருப்பதை அறிந்துவிடும் உத்தேசத்துடன் சுப்ரமணி மீண்டும் அவளை வம்புக்கு இழுத்தார்.

"வைத்த கண்ணை விலக்காமல் என் பெண்ணை அப்படிப் பார்த்தால் சுற்றிப் போடத்தானே வேண்டும்? எதற்குடி அப்படிப் பார்த்தாய்?"

"எத்தனை நாளாச்சு... நம் துர்கா இப்படிக் கலகலப்பாய் சிரித்துப் பேசுவதை நாம் பார்த்து எத்தனை நாளாச்சு..."

"ச்சீ! பைத்தியம். ஏண்டி கண்கலங்கறே. அந்தக் குழந்தை ஒரு தெய்வப்பிறவிடி. எல்லோரையும் சிரிக்கவைத்து விடுகிறது. நம் ரமணனைப் பாரேன். நேற்று வரை அந்தக் குழந்தையைக் கண்டாலே அவனுக்கு ஆகாது. இன்றைக்குப் பார்... அதற்கு குளிப்பாட்டிவிடுமளவிற்கு போய் விட்டான்."

கோமளவள்ளி குழந்தையைக் கனிவுடன் பார்த்துக் கொண்டே அதற்கு பாலை ஆற்றி பாட்டிலில் ஊற்றிக் கொண்டு வந்தாள்.



"ஏம்மா... ஒன்றரை வயதுக் குழந்தைக்கு வெறும் பால் மட்டும் போதுமா? அதற்கு பசி தாங்குமா..." என்று சண்டைக்கு வந்தான் ரமணன்.

"உன் அக்காவும் நீயும் வளர்ந்து இத்தனை பெரிய ஆள்களாக நிற்கறீங்க. நான் குழந்தை வளர்ப்பை மறந்தே வருஷக்கணக்காகிறது. என்னிடம் போய் இதையெல்லாம் கேட்டால் எனக்கு எப்படித் தெரியும்?"

"தெரியாவிட்டால் தெரிந்தவங்க சொல்வதைக் கேட்டுக்கணும்."

"நீ தெரிந்தவன்தானே... சொல்லுடா. கேட்டுக்கறேன்."

"எனக்கு எப்படித் தெரியும்? இந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தவங்ககிட்ட கேளுங்க..."

கோமளவள்ளி, துர்காவைப் பார்க்க... அவள் திருதிருவென்று விழித்தாள்.

"எனக்கும் தெரியாதேம்மா..."

"ஏம்மா... இந்தக் குழந்தையின் அப்பாவிடம் இதையெல்லாம் விவரமாய் கேட்டுக் கொண்டு வர வேண்டாமா?"

கோமளவள்ளி கூறியதை மறக்காமல் நினைவில் வைத்திருந்த துர்கா... குழந்தையை கைலாஷிடம் கொடுக்கும்போது தயக்கத்துடன் கேட்டாள்.

"குழந்தை... ஒவ்வொரு நேரமும் என்னென்ன சாப்பிடும்?"

கைலாஷ் வியப்புடன் துர்காவைப் பார்த்தான். அவன் பார்வையைச் சந்தித்த துர்காவின் பார்வை ஒரு கணம் நிலைத்துப் பின் விலகியது. துர்காவின் முகம் சிவந்தது. அதைக் கவனிக்காதவன் போல கைலாஷ் நிதானமாக கேட்டான்.

"இது எதற்கு உனக்கு? அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்வேன்..."

''ஒதுக்குகிறானா? அவன் குழந்தை என்ன சாப்பிடும் என்று அறிந்துகொள்ளக்கூட அவளுக்கு உரிமையில்லையா?'

அவள் மனம் வலித்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் முகத்தை நேராகப் பார்த்தாள். அவளுடைய பார்வையை தயக்கமில்லாமல் எதிர்கொண்டான் அவன்.

''அம்மா என்னிடம் இதைக் கேட்டாங்க...''

''ஓ... தெரியாது என்று சொல்ல வேண்டியதுதானே...''

''சொன்னேன்...''

''அப்புறம் என்ன?''

''குழந்தையின் அப்பாவிடம் இதைக் கேட்டுக் கொண்டு வான்னு சொன்னாங்க...''

இதைச் சொல்லும்போது துர்காவின் விழிகள் கலங்கிச் சிவந்ததைக் கவனித்த கைலாஷ், மனம் கடுத்தான்.

'தாங்கமுடியவில்லையாடி... இந்தக் குழந்தைக்கு என்னை அப்பாவென்று சொல்ல உன் மனம் துடிக்கிறதா? என்னை இன்னொரு பெண் பெற்ற பிள்ளையின் அப்பாவாக உன்னால் நினைக்க முடியவில்லைதானே. அப்புறமும் ஏண்டி அதை நினைக்கிறாய். நான் உன்னுடையவன்டி...'

## 24

மனதிலிருப்பதை வெளியில் காட்டாமல் உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் கைலாஷ்... துர்காவைப் பார்த்தான்.

''சரி... அடுத்த முறை குழந்தையை உன்னிடம் கொடுக்க வேண்டியிருந்தால் நான் ஒரு பேப்பரில் விவரம் எழுதித் தருகிறேன். போதுமா. இப்போது குழந்தையைப் பார்த்துக் கொண்டதற்கு உனக்கும் உன் குடும்பத்திற்கும். நன்றி...''



''ஏன்... இனி குழந்தையை என்னிடம் கொடுக்க மாட்டீங்களா?''

''இரவு நேரத்தில் நான் வேலைக்கு வரவேண்டியிருந்தால் குழந்தையைப் பார்த்துக் கொள்ள என் அபார்ட்மெண்டின் வாட்ச்மேன் சுந்தரத்தின் மனைவியை வரச் சொல்லி இருக்கிறேன்...''

''நான் குழந்தையைப் பார்த்துக் கொள்ள மாட்டேனா?''

''உனக்கு எதற்கு வீண் சிரமம்?''

''என் வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்வுகள் வீணாகத்தான் போய்விட்டன. உங்கள் மகனைக் கொஞ்சுவது எனக்கு என்றுமே வீணான ஒன்றில்லை. அதனால் இந்தப் பேச்சைப் பேச வேண்டாம்...''

இப்போது விழிகள் சிவப்பது கைலாஷின் முறையாக ஆகிப் போனது. அவன் துர்காவை உறுத்துப் பார்த்தான்.

'எதற்கு இப்படிக் குழந்தை மேல் பாசம் வைக்கிறாய்? அது என் குழந்தை என்பதனாலா? பைத்தியக்காரி. எவளோ ஒருத்தியுடன் நான் குடும்பம் நடத்தி பிள்ளை பெற்றுக் கொண்டு வந்து அதை உன் கையில் கொடுத்து கொஞ்ச விடுவேன் என்றா என்னை நினைத்தாய்? என் மேல் கடலளவு காதலை வைத்திருக்கும் நீ... ஏண்டி கடுகளவு நம்பிக்கையை வைக்காமல் போனாய். என் விரல் நகம் கூட உன்னை விட்டு வேறு ஒருத்தியின் மேல் படாதேடி. இது ஏன் உனக்குத் தெரியாமல் போனது?'

அவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள் தன் பார்வையைத் தழைத்துக் கொள்ள... பெருமூச்சுடன் அவன் நகரப் போனான். துர்கா அவசரமாக அவனை அழைத்தாள்.

''கைலாஷ்...''

வெகுகாலம் கழித்து அவனை பெயர் சொல்லி அழைக்கிறாள். கைலாஷின் முகம் கனிந்தது.

"சொல்லு..."

"குழந்தையை இரவில் பார்த்துக்கொள்ள ஆயாவெல்லாம் வேண்டாம். நான் பார்த்துக் கொள்வேன்..."

"எதுவரை?"

கைலாஷ் அழுத்தமாக கேள்வி கேட்டான். துர்கா விழித்தாள்.

"புரியவில்லை..."

"எதுவரை நீ பார்த்துக் கொள்வாய்?"

"கடைசிவரை..."

"உனக்குக் கல்யாணமாகிப் போய்விட்டால்?"

துர்கா பதறி நிமிர்ந்தாள். அவள் பார்வையில் தெரிந்த குற்றச்சாட்டை கைலாஷ் புறக்கணித்தான்.

"நடக்காத ஒன்றைப் பேச வேண்டாம்..."

"ஒருவேளை நடந்துவிட்டால்? அதனால் குழந்தைக்கு தேவையில்லாமல் தாய்ப் பாசத்தைக் காட்டி ஏமாற்றாதே. தள்ளி நில்... என் குழந்தையைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்."

"கைலாஷ்..."

அவள் அதிர்ந்து நிற்பதைக் கண்டுகொள்ளாமல் அவன் போய்விட்டான். அன்று மாலை மீண்டும் மொட்டை மாடியைத் தஞ்சமடைந்தாள் துர்கா.

"என்னடா ரமணா. திரும்பவும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது..."

"அக்கா... மொட்டை மாடியில் ஏறிவிட்டாளா?"

"ஆமாம்டா. ஆமாம்."

"சரி... நான் போய்ப் பார்க்கிறேன்..."

"என்னடா செய்யப் போகிற?"



"வேப்பிலை அடித்து மலையிறக்க முடியுமான்னு பார்க்கிறேன்ம்மா..."

ரமணன் வேப்பிலையை அடிப்பதற்குப் பதில் புளியைக் கரைத்து துர்காவின் வயிற்றில் ஊற்றினான். அவளுக்கு அடி வயிறு கலங்கியது.

"ஏன்க்கா... காலையில் நீ குழந்தையை கைலாஷின் கையில் கொடுக்கும்போதே அதற்குக் காய்ச்சல் இருந்ததா?"

"என்னடா சொல்கிறாய்? குழந்தைக்கு என்ன ஆச்சு?"

"காய்ச்சலோடு இப்ப ஜன்னியும் வந்துவிட்டதாம் அக்கா."

"என்னடா ரமணா சொல்கிறாய்? இது உனக்கு எப்படித் தெரியும்?"

"ஹாஸ்பிடல் வாசலில் கைக்குழந்தையோடு அநாதை போல கைலாஷ் நின்றுகொண்டிருந்தார் அக்கா..."

துர்கா எழுந்து ஓடப் போனாள். கைலாஷ் அவள் கைபிடித்து நிறுத்தினான்.

"எங்கே போகிறாய்?"

"குழந்தையைப் பார்க்க..."

"குழந்தையை கைலாஷ் வீட்டிற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்..."

"அவர் வீடு எனக்குத் தெரியும்..."

"தெரிந்தால் இந்த நைட் நேரத்தில் போவாயா? விடியும் வரை காத்திரு..."

விடியும்வரை காத்திருந்த துர்கா... விடிந்தவுடன் படுவேகமாய் தன் கைனடிக் ஹோண்டாவை விரட்டி கைலாஷின் அபார்ட்மெண்டை அடைந்தாள்.

குழந்தையுடன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த கைலாஷ், அழைப்புமணியின் ஒலியில் தூக்கம் கலைந்து எழுந்தான். கதவுகளைத் திறந்தான்.

## 25

தூக்கம் கலையாத கண்களுடன் வந்திருப்பது யாரென்று பார்த்த கைலாஷ்... துர்காவைக் கண்டதும் தான் காண்பது கனவா, இல்லை நனவா என்ற சந்தேகத்துடன் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான்.

"துர்கா... என்ன விஷயம்?"

"குழந்தை எங்கே?"

"பெட் ரூமில்..."

"என்ன செய்கிறான்?"

"தூங்கிக் கொண்டிருக்கிறான்..."

"எப்போது தூங்கினான்?"

"பாதி ராத்திரி வரை தூங்கமாட்டேன் என்று போக்குக் காட்டிவிட்டு விடியும்போதுதான் தூங்கினான்."

துர்கா வேகமாக கைலாஷின் படுக்கையறையை நோக்கி ஓட... கதவை மூடிவிட்டு கைலாஷ் புருவங்களை உயர்த்தியபடி அவளைப் பின்தொடர்ந்தான்.

கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் அருகே கவலையே உருவாக அமர்ந்திருந்த துர்கா, குழந்தையின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். சூடு தெரிய வில்லை.

"நல்லவேளை... இப்போது காய்ச்சல் விட்டுவிட்டது..." என்று கைலாஷைப் பார்த்துக் கூறினாள். கைலாஷ் குழம்பிப் போனான்.

'காய்ச்சல் வந்தால்தானே விடுவதற்கு...'

"டாக்டர் என்ன சொன்னார்?"

'எந்த டாக்டர்... என்னத்தைச் சொன்னார்...'



"தனியாக குழந்தையை வைத்துக் கொண்டு கஷ்டப்பட வேண்டுமா? ஒரு போன் பண்ணியிருந்தால் நான் ஓடி வந்திருக்க மாட்டேனா?"

'ஏண்டி... ஒரு காலத்தில் உனக்கு எத்தனை போன்கள் பண்ணியிருப்பேன். கண்டுகொண்டாயாடி. இப்போது மட்டும் எப்படி இப்படி ஒரு கரிசன மழையைப் பொழிகிறாய்?'

"என்மேலிருக்கும் விரோதத்தை காண்பிக்க இது சமயமில்லை..."

'உன்மேல் எனக்கு விரோதமா... ஹ...'

"குழந்தைக்கு காய்ச்சல் கொளுத்தியிருக்கிறது. ஜன்னி வேறு வந்திருக்கிறது. அந்த நிலையிலும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையே. அந்த அளவுக்கு நான் உங்களுக்கு எதிரியாக ஆகிப் போனேனா?"

'இது என்ன புதுக்கதை...'

"ரமணன் சொல்லித்தான் எனக்கே விவரம் தெரிந்தது."

'ஓ... இது என் மச்சினன் கட்டிவிட்ட கதையா?' கைலாஷிற்கு சட்டென்று எல்லாம் விளங்கிவிட்டது. ரமணனின் வேலையை நினைத்து அவனுக்கு சிரிப்பு பொங்கி வர, அதை அடக்கிக் கொண்டு பால் பாக்கெட்டை எடுத்துக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்றான்.

"எங்கே போகிறீங்க?"

"கிச்சனுக்கு..."

"எதற்கு?"

"பாலைக் காய்ச்ச..."

"நான் போய் அதைச் செய்கிறேன். நீங்க குழந்தையைப் பார்த்துக்கங்க..."

"வேண்டாம்... இது என் வேலை..."

துர்கா கோபத்துடன் எழுந்து அவன் கையிலிருந்த பால் பாக்கெட்டை பிடுங்கிக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள். அடுப்பை பற்ற வைத்து பாத்திரத்தை எடுத்து வைத்து பாலை ஊற்றினாள். கைலாஷ் உள்ளே வந்து காபிப்பொடி டப்பாவையும் ஜீனி டப்பாவையும் எடுத்து சமையல் மேடையில் வைக்க... துர்கா அவனை முறைத்தாள்.

''உங்களை நான் என்ன செய்யச் சொன்னேன். நீங்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீங்க...''

''குழந்தை பாவம் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கிறான். பக்கத்தில் ஆள் இருக்க வேண்டிய தேவை இல்லை...''

''என் பக்கத்திலும் ஆள் இருக்க வேண்டிய தேவை இல்லை...''

''எனக்குக் காபி வேண்டும்...''

''கேட்டால் நான் கலந்து தர மாட்டேனா?''

''காபிப் பொடியும் ஜீனியும் எந்த டப்பாக்களில் இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா?''

''ஏன் தெரியாது? இங்கே நான் இதற்குமுன் வந்ததே இல்லையாக்கும். வந்து காபி போட்டுக் கொடுத்ததே இல்லையாக்கும்...''

தன்னையறியாமல் பேசிவிட்ட துர்கா, சட்டென்று மௌனமாகி விட்டாள். பழைய நினைவுகளின் கனத்தில் கண்களில் நீர் முத்துக்கள் உதிக்க, அடுப்பை அணைத்து விட்டு பாலை இறக்கிவைத்தாள்.

அவளது மனப்போராட்டத்தை உணர்ந்தவனாக கைலாஷ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீதான் எல்லாவற்றையும் மறந்துவிட்டாயே...'' என்று கூறியவாறு காபி கலந்து இரு கோப்பைகளில் ஊற்றினான்.

துர்கா துணுக்குற்று நிமிர்ந்தாள்.



'இவன் எதைச் சொல்கிறான்? நான் எதை மறந்தேன். காதலையா? காபி போடுவதையா?'

''என்ன அப்படிப் பார்க்கிறாய்?''

''ஒன்றுமில்லை...''

''உனக்கு எதுவுமே ஒன்றுமில்லைதான்...''

''ஏன் அப்படிச் சொல்கிறீங்க?''

''ஒன்றுமில்லை...''

''எல்லாவற்றையும் ஒன்றுமில்லாமல் ஆக்கியதே நீங்கள்தானே...''

இந்த மோதலை உருவாக்கத்தான் ரமணன் விரும்பினான். அதற்காகவே துர்காவிடம் கதை சொல்லி கைலாஷின் வீட்டிற்கு பறக்க விட்டான். அவன் நினைத்தது போலவே நேரடி மோதல் உருவாகிவிட்டது.

## 27

கைலாஷ் இமைக்காமல் துர்காவையே பார்த்தான். அவன் முகத்தில் கோபம் வந்திருந்தது.

''மனச்சாட்சியுடன் பேசு... மனச்சாட்சி இருக்கிறதா, இல்லை அதைக் கழற்றி வைத்துவிட்டாயா?''

''மனச்சாட்சியைப் பற்றிப் பேசும் தகுதி உங்களுக்கு இல்லை...''

''அதைச் சொல்லும் தகுதிதான் உனக்கு இல்லை...''

''இவ்வளவையும் செய்துவிட்டு இப்படிப் பேச உங்களுக்கு வாய் வருகிறதே. அதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்கிறது.''

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? பேச நான் எப்போதும் தயாராகத்தான் இருந்தேன். கேட்கத்தான் நீ தயாராக இல்லை. புறமுதுகு காட்டி ஓடிப் போனாய்?"

"உங்களைப் போல முதுகில் குத்தும் நயவஞ்சக துரோகியைக் காதலித்தால்... துரோகத்தை நேருக்கு நேர் நின்று சந்திக்க தெம்பு இல்லாமல் புறமுதுகு காட்டி ஓடத்தான் வேண்டும். இது என்ன நியாயமான யுத்த களமா? புறமுதுகு காட்டி நான் ஓடியதற்கு வருத்தப்படவேண்டிய அவசியமில்லை."

"காதலித்தாயா? யாரைக் காதலித்தாய்?"

கைலாஷின் முகம் ரத்தமாய் சிவந்திருந்தது.

"கைலாஷ்... வேண்டாம்..."

"நான் வேண்டாமென்று நினைத்து என்னைத் தூக்கிப் போட்டுவிட்டு ஓடியவள்தானே நீ. இப்போது ஏன் தேடி வந்தாய்?"

"உங்களைத் தேடி வரவில்லை..."

"குழந்தைக்கும் உனக்கும் எந்தவொரு சொந்தமும் இல்லை. இது என் வீடு. இங்கே வந்திருப்பது நீ..."

துர்கா விழிகளில் திரண்டு நின்ற கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்து கன்னத்தில் வழிய அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய உதடுகள் துடித்தன. இப்போது இமைக்காமல் கைலாஷின் முகத்தைப் பார்ப்பது அவளுடைய முறையானது.

'இல்லையா... எனக்கும் உன் குழந்தைக்கும் எந்தவொரு சொந்தமும் இல்லையா. இல்லை... எனக்கும் உனக்குமே எந்தவொரு சொந்தமும் இல்லையென்று சொல்கிறாயா? நிஜம்தானே... நீ இன்னொருத்தியின் கணவன்தானே...'

அடிபட்ட பார்வையுடன் நின்றுகொண்டிருந்தவளைக் கண்டு கைலாஷின் மனம் வலித்தது.

'ஏண்டி... என்னை இந்தப் பாடு படுத்துகிறாய்? உன்னைத் தவிர வேறு ஒருத்தியின் நிழலைக்கூட நான் பார்த்தது இல்லை கண்ணம்மா. நான் உன்னுடையவன். இது ஏன் உனக்குத் தெரிய மாட்டேன் என்கிறது.'



அவன் கோபம் மறைந்தவனாய் அவளிடம் ஒரு காபிக் கோப்பையை நீட்டினான்.

"காபி குடி..."

"எனக்கு வேண்டாம்..."

"நான் வேண்டாமா? இல்லை, இந்தக் காபி வேண்டாமா?"

மீண்டும் குத்தலாய் கைலாஷ் கேட்டு வைக்க, துர்கா தாங்க முடியாமல் விம்மினாள். கைலாஷ் தாங்க முடியாத மன வேதனையுடன் பேச்சை நிறுத்தினான்.

"ச்சு... அழுவாதே துர்கா... இப்போது எதற்காக அழுகிறாய்? வேண்டாம். விட்டு விடு..."

"எதை விடச் சொல்கிறீங்க?"

"என்னை விடச் சொல்லவில்லை..."

கைலாஷ் அவளையே பார்த்துக்கொண்டு இதைக் கூறவும்... துர்கா சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். "அழுகையை விட்டு விட்டு காபியைக் குடின்னு சொன்னேன். காபியை குடி துர்கா..."

கைலாஷ் கெஞ்சுதலாகப் பேச... துர்கா காபிக் கோப்பையை எடுத்துக் கொண்டாள். கைலாஷ் ஹாலுக்கு வந்து காபியை உறிஞ்சியபடி பேப்பர் படிக்க ஆரம்பித்தான். சமையலறைக்குள்ளிருந்து அவனைப் பார்த்துக் கொண்டே காபியைப் பருகிய துர்காவிற்கு அந்தச் சூழல் பிடித்துப் போய்விட்டது.

தன்னை கைலாஷின் மனைவியாக கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள் அவள். கைலாஷ் அவளுடைய கணவன். அது அவர்களின் வீடு. பெட்ருமில் தூங்கிக் கொண்டிருப்பது அவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தை.

அவளுடைய கணவன் காலை நேரத்தில் காபியைக் குடித்துக் கொண்டு பேப்பர் படிக்கிறான். அவளுடைய குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிறது. அவள் சமைய லறையில் வேலை செய்து கொண்டிருக்கிறாள்.

சற்று முன் கைலாஷுடன் சொற்போர் நடத்தியதால் மனதில் ஏற்பட்டிருந்த ரணம் மறைந்து போய்விட, மனதில் தானே உருவாக்கிக் கொண்ட தன் கற்பனைக் குடும்பத்தில் நிஜமாக நின்றாள் துர்கா.

'ம்ம். இப்போது என்ன செய்ய வேண்டும்? காலை டிபன் செய்ய வேண்டும்... டிபனுக்கு என்ன செய்யலாம்.'

பூரிக்கு மாவைப் பிசைந்தாள். உருளைக்கிழங்கை வேக வைத்து உரித்தாள். கைலாஷ் காபியையும் பேப்பர் படிப்பதையும் முடித்தபோது அவன் நாசி எண்ணெயின் மணத்தை உணர்ந்தது.

'என் வீட்டில் இப்படியொரு வாசனையா... இவள் என்ன செய்கிறாள்?'

அவன் பேப்பரை மடித்து டீப்பாயின் மேல் போட்டு விட்டு சமையலறைக்குச் சென்று பார்த்தான். அவனுக்கு முதுகு காட்டி... வாணலியில் காய்ந்து கொண்டிருந்த எண்ணெயில் பூரியைப் போட்டு எடுத்துக் கொண்டிருந்தாள் துர்கா.

## 28

"என்ன செய்கிறாய்...?"

"பார்த்தால் தெரியவில்லையா... பூரி செய்து கொண்டிருக் கிறேன்."

"உன்னை யார் இந்த வேலைகளையெல்லாம் செய்யச் சொன்னது?"



"யாரும் சொல்லித்தான் செய்ய வேண்டுமா... என்ன?"

"அதுதானே... சொல்லாமல் ஓடிப்போவதில் நீ தில்லாடியாச்சே."

துர்கா உதட்டைக் கடித்துக் கொண்டாள். கைலாஷ் குத்தலாகப் பேசுவதை நிறுத்தாமல் மேலும் பேச்சைத் தொடர்ந்தான்.

"என்ன பேச்சைக் காணோம். அதுசரி. பேச்சை நிறுத்திக் கொள்ள உனக்குச் சொல்லியா தர வேண்டும்?

'இவன் என்னவோ குற்றமில்லாதவன் போலவும் அவள் குற்றவாளி போலவுமே எப்போதுமே பேசுகிறானே. இவன் என்னதான் மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறான்?!'

நினைத்ததை வாய்விட்டுக் கேட்டாள் துர்கா... அதற்கு,

"உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் கொடுத்து அவளைத் திணற வைத்தான் கைலாஷ்.

துர்கா மனப்போராட்டத்தை அடக்கிக் கொள்ள முடியாமல் சூடான எண்ணெயில் பொரித்துக் கொண்டிருந்த பூரியை எடுத்து பாத்திரத்தில் போட்டாள்.

"இது தேவையில்லாத வேலை துர்கா..."

"உங்களுக்குச் சாப்பாடு தேவையில்லையா?"

"தேவைதான். ஆனால், இன்றைக்கு வீட்டு ருசிக்கு நாக்கு பழகிவிட்டால் தினமும் அதையே கேட்டு வைக்கும். தினமும் வீட்டுச் சாப்பாட்டுக்கு நான் எங்கே போவது?"

'தினமும் நான் வந்து சமைத்துக் கொடுக்கிறேன்...' என்று சொல்லத் துடித்தது துர்காவின் மனது.

அதை வெளியே சொல்ல சங்கோஜம் தடுத்தது.

"நாளைக்கு கதையை நாளைக்கு பார்த்துக் கொள்ளலாம். இப்போது குளித்துவிட்டு வாங்க, சாப்பிடலாம்..."

"பிடிவாதமா?"

''இல்லை. பசி...''

''பசியா?''

''ஆமாம். காலையில் எழுந்ததும் இங்கே ஓடிவந்து விட்டேன். காபிகூட குடிக்கவில்லை. ரொம்பப் பசிக்கிறது. அதனால்தான் அவசரமாய் பூரி போட்டேன்.''

இதற்கு கைலாஷினால் மறுப்பு சொல்ல முடியாது என்பதை துர்கா அறிவாள். அவன் பதில் பேசாமல் நகர முற்பட... துர்கா அவசரமாய் அவனை தடுத்து நிறுத்தினாள்.

''பவிக்குட்டி காலையில் என்ன சாப்பிடுவான்?''

''தூங்கி எழும்போதே அழுதுகொண்டேதான் எழுந்திருப்பான்.''

''அதுதான் எனக்குத் தெரியுமே...''

துர்காவின் முகம் பாசத்தில் கனிந்தது. அவளுடைய முகத்தில் தெரிந்த தாய்மையைக் கண்டு கைலாஷின் மனமும் கனிந்தது.

'இவளுக்குத்தான் என்மேல் எவ்வளவு காதல்? நான் துரோகியென்று முடிவே பண்ணி விட்டாள். ஆனாலும் பவித்ரனை என் குழந்தையென்று நினைத்துக் கொண்டு தாயன்பை காட்டுகிறாள். என் குழந்தைக்கு இவள் அம்மாவாக இருப்பாளாம்... எனக்கு மனைவியாக இருக்க மாட்டாளாம்...'

இந்த எண்ணம் மனதில் உதித்தபோதே இவளை மனைவியாக்கிக் கொண்டால்தான் என்ன என்ற தாபமும் கைலாஷுக்குள் உருவானது.

எப்படியும் இவளை விட்டு இன்னொருத்திக்கு அவன் தாலி கட்டப் போவதில்லை. அவனைத் துரோகியென்று நினைத்து அவள் விலகிப் போனாலும் அவனை விட்டு இன்னொருவனுக்கு இவள் கழுத்தை நீட்டப் போவதும் இல்லை.





இவளுக்கு கொடுக்க நினைக்கும் தண்டனையை திருமணம் பண்ணிக் கொண்டு கொடுத்தால் என்ன என்று கைலாஷுக்குத் தோன்றியது.

அவளை ஒரு மார்க்கமாய் பார்த்தவாறு அவன் குழந்தையைப் பற்றிய பேச்சைத் தொடர்ந்தான்.

''அவன் அழுகையை நிறுத்த உடனடியாய் பாலை ஆற்றிக் கொடுத்துவிட வேண்டும்.''

''அதுவும் எனக்குத் தெரியுமே...''

''ம்ம்... அப்படியா... அடுத்து அவனுக்கு காலை, மதியம் நைட்டுக்கு சாப்பிட என்ன கொடுக்க வேண்டும்னும் உனக்குத் தெரிந்திருக்குமே...''

''அதுதானே தெரியாது...''

''அப்போ... வாயை மூடிக் கொண்டு சொல்பேச்சைக் கேட்க வேண்டியதுதானே. பிடிவாதம் என்ன வேண்டியிருக்கு.''

''நான் பிடிவாதம் பிடித்தேனா?''

''பிடிவாதம் பிடிக்கவில்லையா?''

கைலாஷின் கூரிய விழிகள் துர்காவை துளைத்து விடுவது போல் பார்க்க, துர்காவின் உடல் சூடேறியது. அவனது கைகளுக்குள் புகுந்து காதல் சொல்லிய பழைய நாள்கள் தேவையில்லாமல் நினைவுக்கு வந்து இம்சைப்படுத்தின. அவள் தலை கவிழ்ந்து கொண்டாள்.

*'தலையைக் கவிழும் தாமரையே...*
*என்னை எதிர்பார்த்து...*
*நான் வந்தவுடன் வேர்த்து...*
*தலையைக் கவிழும் தாமரையே...'*

கைலாஷின் மனம் பாடியது. அவன் மானசீகமாக ரமணனுக்கு தன் நன்றியைச் சொல்லிக் கொண்டான்.

# 29

குழந்தையின் அழுகுரல் கேட்க... துர்கா பால் பாட்டிலை எடுத்துக் கொண்டு அவனிடம் விரைந்தாள். அவளைப் பரிவுடன் பார்த்துக் கொண்டே கைலாஷ் குளியலறைக்குள் நுழைந்தான். அவன் குளித்து முடித்து வரும்போது... துர்கா. சேலையை இழுத்துச் செறுகிக் கொண்டு பவித்ரனைக் குளிப்பாட்டி விடக் கிளம்ப... கைலாஷ் தடுத்தான்.

''இங்கே கொடு... நான் அவனை குளிக்க வைக்கிறேன்.''

''ஏன்... நான் அவனைக் குளிக்க வைத்தால் ஆகாதா?''

''நீ குளித்து டிரஸ் மாற்றி விட்டாய்...''

''நீங்களும்தான் குளித்து விட்டீர்கள்...''

''ஆனால், டிரஸ் சேன்ஜ் பண்ணிக் கொள்ள வில்லையே...''

அப்போதுதான் கைலியும் வெற்று மார்புமாய் இருந்த அவனை நன்கு கவனித்தாள் துர்கா... குளித்து முடித்த ஈரத்தலை படர்ந்து நெற்றியில் படிந்திருக்க... அவன் தலைமுடியில் சொட்டிய நீர்த் திவலைகள் அவன் முகத்தில் படிந்திருக்க, தன் முந்தனையால் அவன் முகம் துடைத்து தலை துவட்ட ஆவல் கொண்டாள் துர்கா.

அவனது பார்வையை உணர்ந்த கைலாஷின் மனதில் புயல் அடித்தது. அவளைப் பார்த்து கேள்வியுடன் புருவம் உயர்த்தினான் அவன்.

''என்ன... அப்படிப் பார்க்கிறாய்?''

'கண்டு கொண்டானே...'

வெட்கத்தில் துர்காவின் முகம் சிவந்தது.



''ஈரத்தலையுடன் நிற்கிறீங்களே...''

''நீ வேண்டுமானால் துவட்டி விடுகிறாயா?''

அவன் அருகில் வந்தான். அவள் அவசரமாய் பின்னே நகர்ந்தாள்.

''பயமா?'' அவன் குரலில் கேலி தெரிந்தது.

''பயமா? எனக்கா? உங்களிடம் எதற்காக நான் பயப்பட வேண்டும்?''

துர்காவின் வார்த்தைகளைக் கேட்டதும் கைலாஷின் மனதில் தென்றல் அடித்தது.

'என்னிடம் இவளுக்குப் பயமில்லையாமே... உரிமையிருக்கிறவனிடம் எந்தப் பெண்தான் பயப்படுவாள்?'

அவன் உரிமையுடன் அவளைப் பார்த்துக் கொண்டே பவித்ரனைத் தூக்கிக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தான்.

அவன் குழந்தையைக் குளிப்பாட்டிவிட்டு தூக்கிக் கொண்டு வந்தபோது துர்கா கையில் டவலுடன் தயாராகக் காத்திருந்தாள். பவித்ரன் அவள் பிடியில் அடங்காமல் திமிர, கைலாஷ் குழந்தையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான். துர்கா அவனது அருகில் நெருங்கும் உணர்வு தந்த மனக்கிளர்ச்சியுடன் குழந்தைக்கு துவட்டிவிட ஆரம்பித்தாள்.

பாதி உடல் கைலாஷின் மேல் படிந்து விலகுமாறு அவள் நெருங்கி நின்றது. கைலாஷை மிகவும் பாதித்தது.

'இவள் என்னை என்னவென்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்...' என்ற சினம் அவன் மனதில் உதித்தது.

விலகி நிற்கும்போதே அவளது நினைவுகள் தரும் வேதனையை அவனால் தாங்க முடியாது. இப்படி நெருங்கி நின்றால் அவளை அள்ளி அணைத்துக் கொண்டு ஆள வேண்டுமென்று ஒரு ஆண்மகனுக்கு துடிப்பு வராதா?

அதைக் கொஞ்சமாவது இவன் உணர்ந்து கொண்டிருக்கிறாளா?

துர்கா, குழந்தைக்கு துவட்டி முடித்து நகரப் போகையில் கைலாஷ்...

"நில்..." என்றான்.

துர்கா நின்றாள்.

"உனக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை துர்கா..." என்று அவன் கேட்டான்.

"ஓரவஞ்சனையா... எனக்கா?" அவள் திகைத்தாள்.

"பின்னே இல்லையா... பவித்ரனும் தாயில்லாப் பிள்ளை... நானும் தாயில்லாப் பிள்ளை. அவன் மேல் காட்டும் கருணையில் கடுகளவாவது என்னிடமும் நீ காட்டினால்தான் என்ன?"

துர்காவின் மனதை எது பாதிக்குமோ அதைப் பேசி வைத்தான் கைலாஷ்.

'தாயில்லாப் பிள்ளையாமே...'

துர்கா வேதனைப்பட்டாள். நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

"ம்ம். இப்போது உங்களிடம் நான் என்ன கருணை காட்ட வேண்டும்..."

"என் தலையில் ஈரம் சொட்ட நான் இப்படி நிற்பதைப் பற்றி உனக்குக் கொஞ்சமாவது கவலை இருக்கிறதா?"

"நான் கவலைப்பட்டு ஆகப் போவதென்ன? நீங்கள் என்ன பச்சைக் குழந்தையா? இந்தாங்க டவல். துடைத்துக் கொள்ளுங்க..."

"ஊஹூம். எனக்கு இது வேண்டாம்."

"ஏன்?"



"நீ துவட்டிவிடுவதானால் செய். இல்லாவிட்டால் இப்படியே ஈரத்தலையுடன் இருந்து கொள்கிறேன். ஜலதோஷம் வந்து காய்ச்சல் வரட்டும். அடுத்து ஜன்னியே வந்தாலும் சரி..."

துர்காவின் மனம் அதிர்ந்தது. அவள் விரல் நடுங்க அவனது தலையை துவட்ட ஆரம்பித்தாள். மிக அருகில் தெரிந்த ஈரம் படர்ந்த அவன் முகத்தைத் தொட்ட அவள் விரல்கள் படபடக்க... அவற்றைப் பிடித்து இதழருகில் இழுத்து மென்மையாக முத்தமிட்டான் கைலாஷ். அதைத் தாள முடியாத துர்கா... கைகளை இழுத்துக் கொள்ள முயல, விடாமல் அருகில் இழுத்து அணைத்தான்.

## 30

'இது விடுபட முடியாத உறவு...' என்று நிறைய முறை துர்கா நினைத்திருக்கிறாள். அதை மெய்ப்பிப்பது போல அவள் விடுபடமுடியாத வகையில் தன் கைகளுக்குள் சிறை வைத்தான் கைலாஷ்.

"கைலாஷ்... என்ன இது... என்னை விடுங்க..."

"விட முடியாது..."

கைலாஷின் கரங்கள் அவளைத் தன்னுடன் இறுக்கிக்கொண்டன. சூடான அவனுடைய முத்தத்தை தன் கன்னத்தில் உணர்ந்த துர்கா, மனம் தளர்ந்தாள். கண்மூடிக் கிளர்ந்து அவன் கைகளில் தொய்ந்தாள்.

அவளுடைய நிலையை உணர்ந்த கைலாஷின் பிடி மேலும் இறுகியது. அவன் அவள் முகத்தோடு தன் முகத்தைத் தேய்த்தான். அவள் லேசான முணுமுணுப்போடு இசைந்து கொடுக்க... அவள் இதழோடு இதழ் பதித்தான்.

எத்தனை நேரமாய் இருவரும் கட்டுண்டு நின்றார்கள் என்று அவர்களே அறியவில்லை. குழந்தையின் அழுகுரல் கேட்டு அவசரமாய் கைலாஷிடமிருந்து விலகி நின்றாள் துர்கா. கள்ளுண்ட வண்டாக கைலாஷ் மீண்டும் அவள் கரம் பற்றினான்.

''என்ன காரியம் செய்துவிட்டேன். இவன் என்னைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வான்? எவள்கூட வேண்டுமானாலும் நாம் குடும்பம் நடத்தலாம். இவள் அதை சட்டை பண்ணிக்கொள்ளாமல் நாம் இருந்த இருப்பிற்கு வருவாள் என்று நினைத்துக்கொள்ள மாட்டானா?''

அவள் சட்டென்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியேறி விட்டாள். கைலாஷின் முகத்தில் சினம் கொப்பளித்தது.

சற்று நேரத்தில் அறையிலிருந்து வெளிப்பட்ட கைலாஷ், கம்பெனிக்குப் போகத் தயாராக உடை உடுத்தியிருந்தான். அவனைக் கடைக்கண்ணில் பார்த்துக்கொண்ட துர்கா...

''பவித்ரனை வாங்கிக்கொண்டால் தேவலை...'' என்றாள்.

''ஏன்... எதற்கு இந்த அவசரம்?'' கைலாஷின் விழிகள் அவள் முகத்தில் மொய்த்தன.

''நான் வேலைக்குப் போக வேண்டும்...''

''சாப்பிட்டுவிட்டுப் போ...''

''எனக்கு டிபன் வேண்டாம். நேரமாகிவிட்டது...''

கைலாஷிற்கு கோபம் வந்து விட்டது. அவன் பல்லைக் கடித்தபடி அவளைப் பார்த்தான்.

''நீ செய்து வைத்திருக்கும் பூரிகிழங்கு அத்தனையும் தூக்கிக் குப்பைக் கூடையில் கொட்டிவிடுவேன். யாரிடம் விளையாடுகிறாய்? ஏண்டி, இப்போது முகத்தை தூக்கி வைத்துக்கொண்டு கிளம்புகிறாய்...''



துர்காவிற்கு அவனுடைய கோபத்தைக் கண்டு கண் கலங்கி விட்டது. அவன் அதைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து பொரிந்து கொண்டிருந்தான்.

''இங்கே என்ன நடந்துவிட்டது? உன் விருப்பமில்லாமல் உன்னைத் தொட்டேனா?''

''கைலாஷ்... ப்ளீஸ்...''

''இல்லை... வேறொருவனை நீ மணந்துகொள்ள இருக்கும் நிலையில் உன்னைத் தொட்டேனா? நீ என்னைத் தவிர வேறு ஒருவனுடன் வாழ்ந்து விடுவாயா?''

''தேவையில்லாமல் பேச வேண்டாம். இந்தப் பேச்சே எனக்குப் பிடிக்கவில்லை...''

''உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா. இல்லை... நான் பேசும் பேச்சைப் பிடிக்கவில்லையா?''

''இந்தக் குதர்க்கப் பேச்சுக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது...''

கைலாஷ் பேசாமல் பால்கனிக்குப் போய் உட்கார்ந்து விட, துர்கா அவனுக்குப் பின்னால் சென்று நின்றாள்.

''சரி, வாங்க. நான் சாப்பிட்டுவிட்டே கிளம்புகிறேன்...''

அவள் சமாதானமாகப் பேசவும் கைலாஷ் எழுந்து கொண்டான். இருவரும் சாப்பாட்டு அறைக்குச் சென்றார்கள். டைனிங் டேபிளின் மேல் பவித்ரனை உட்கார வைத்து விட்டு கைலாஷின் முன்னால் தட்டை எடுத்து வைத்தாள் துர்கா. முதன்முதலாக அவள் சமைத்து அவனுக்குப் பரிமாறப் போகிறாள் என்ற நினைவு தந்த சந்தோஷம்... அவனுடைய நெஞ்சை நிறைத்தது.

'இது என் வாழ்வில் நடக்குமா என்று நினைத்துத் தவித்துப் போயிருந்தேனே... திரும்பவும் என் கைலாஷிற்கு

என் கையால் சாப்பாடு போடும் சந்தோஷம் எனக்கு கிடைத்து விட்டதே... நன்றி இறைவனே...'

அவனுடைய தட்டில் பூரிகளை வைத்து கூட்டை எடுத்து வைத்தாள். அவன் சாப்பிடாமல் அவளைப் பார்த்தான்.

"இனியும் என்ன?"

"நீயும் தட்டைப் போட்டுக்கொண்டு உட்கார்..."

"நீங்கள் முதலில் சாப்பிடுங்கள்..."

"சேர்ந்து சாப்பிடலாம்..."

"யார் பரிமாறுவது?"

"தேவையானதை நாமே எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிடலாம்..."

"பவித்ரன்?"

"அவன் கையில் ஒரு பூரியைக் கொடு... அவன்பாட்டுக்கு பிய்த்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பான்..."

'இவன் எல்லாவற்றிற்கும் ஒரு வழி சொல்லுவான்...' துர்கா மனதிற்குள் மெச்சிக்கொண்டாள்...

இருவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். பேச்சுக்கள் தேவையற்ற மௌனம் அவர்களிடையே குடிகொண்டது. அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கைலாஷ் ரிமோட்டை எடுத்து தொலைக்காட்சியை உயிர்ப்பித்தான்.

## 31

**மௌ**னத்தைக் கலைக்க எதையாவது பேச வேண்டும். ஆனால், எதைப் பேசினாலும் அது ஒரு புள்ளியில் வந்து முடியும். எனவே, பேச்சையும் தவிர்த்து மௌனத்தைக் கலைக்க டி.வி-யை போட்டுவிட்டான் கைலாஷ்...



"அந்தி மழை பொழிகிறது...
ஒவ்வொரு துளியிலும்...
உன் முகம் தெரிகின்றது..."

டி.வி-யில் பாடல் ஒலிக்க... துர்கா சாப்பாட்டை மறந்து நிமிர்ந்தாள். அதே நேரம் கைலாஷும் நிமிர்ந்து அவளைப் பார்க்க... இருவரின் கண்களும் கலந்தன.

துர்காவின் மனதில் முதன்முதலாய் கைலாஷை அவள் சந்தித்த அந்த அந்தி மழை நேரம் நினைவிற்கு வந்தது.

"இந்திரன் தோட்டத்து முந்திரியே...
மன்மதன் நாட்டுக்கு மந்திரியே..."

துர்காவின் இதழ்கள் வளைய... கைலாஷின் பார்வை அதன் மேல் படிந்தது. அவள் சட்டென்று எழுந்து கை கழுவி விட்டு சமையலறைக்குள் சென்று விட்டாள்.

"தேனில் வண்டு மூழ்கும் போது...
பாவம் என்று வந்தாள் மாது..."

கைலாஷ் எழுந்து பவித்ரனைத் தூக்கி தரையில் விளையாட விட்டுவிட்டு சமையலறைக்குள் சென்றான். அவனது அழுத்தமான காலடியோசையைக் கேட்ட துர்காவின் உடலில் மின்சாரம் உற்பத்தியானது. அவள் மனம் எதிர்பாராமல் படபடத்தது. அவளுடைய எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. கைலாஷின் கைகள் பின்புறமிருந்து அவளுடைய தோளை இறுகப் பற்றிக்கொண்டன. அவன் குனிந்து அவளுடைய பின்னங்கழுத்தில் முத்தமிட்டான்...

"நெஞ்சுக்குள் தீயை இங்கே
யார் வைத்தது...
தண்ணீரில் நிற்கும் போதே
வேர்க்கின்றது..."

துர்கா வியர்த்துப் போனவளாக உடல் நடுங்க கைலாஷ் அவள் தோளை முரட்டுத்தனமாகப் பற்றி தன்பக்கம் திருப்பினான். அவளுடைய முகத்தை கைகளில் ஏந்திப் பார்த்தான். தாள முடியாத தவிப்பில் அவள் விழி மூடிக் கொண்டாள். மூடிய விழிகளின் மேல் கவிழ்ந்திருந்த இமைகள் படபடப்பதையும் அவளது இதழ்கள் நடுங்குவதையும் கவனித்த கைலாஷின் மனதில் மோகத்தீ பற்றி எரிந்தது. அண்ணாந்திருந்த அவள் முகத்தின் மேல் முகம் வைத்து நெற்றியில் இதழ் பதித்தான்.

*''நெஞ்சம் பொறு.... கொஞ்சம் இரு...*
*தாவணி விசிறிகள் வீசுகிறேன்...*
*மன்மதன் அம்புகள் தைத்த இடங்களில்...*
*சந்தன மாவிலை பூசுகிறேன்...*
*அந்தி மழை பொழிகிறது...*
*ஒவ்வொரு துளியிலும்...*
*உன் முகம் தெரிகின்றது...''*

ஹாலில் ஒலித்த பாடல் துர்காவின் மனதிலிருந்த கடந்த கால கசப்புகளைத் தூக்கியெறிய வைத்துவிட்டு... இனிப்பான மலரும் நினைவுகளை மட்டும் அவள் நெஞ்சத்தில் இருக்கச் செய்தது. அவள் கிளர்ந்து அவன் மார்பில் முகம் புதைத்துக்கொண்டாள். அவளுடைய கைகள் அவன் முதுகின் மேல் பரவி இறுகின.

*''சிப்பியில் தப்பிய நித்திலமே...*
*ரகசிய ராத்திரி புத்தகமே...''*

அவளுடைய இதழ்களும் பாடலுடன் இணைந்து முணுமுணுக்க, கைலாஷ் அவளுடைய இதழோடு இதழ் புதைத்தான். விடுபட விரும்பாமல் அவர்கள் தழுவிக் கொண்டார்கள். காற்றுப் புக இடைவெளி விடாமல் கட்டிக்கொண்டார்கள்...



*''தேகம் யாவும்... தீயின் தாகம்...*
*தாகம் தீர... நீதான் மேகம்...''*

கனல் பற்றிக்கொண்டவனாய் கைலாஷ்... துர்காவைக் கையில் ஏந்திக்கொண்டான். அவன் கைகளில் பூமாலையாய் கிடந்தவளோ தன் கைகளை அவன் கழுத்தில் மாலையாகப் போட்டு வளைத்துக்கொண்டாள். பொம்மையைத் தூக்கி தரையில் மோதி பவித்ரன் விளையாடிக் கொண்டிருக்க... கைலாஷ் படுக்கையறையின் கட்டிலில் துர்காவை கிடத்தி அவள் மேல் சரிந்தான்.

*''தனிமையிலே... வெறுமையிலே...*
*எத்தனை நாளடி பொன்மயிலே...*
*எத்தனை இரவுகள்... சுட்டன கனவுகள்...*
*இமைகளும் சுமையடி இளமையிலே...*
*அந்தி மழை பொழிகிறது...*
*ஒவ்வொரு துளியிலும்...*
*உன் முகம் தெரிகின்றது...*

பாடல் முடியும்போது கைலாஷ் துர்காவின் மீது படர்ந்து பரவியிருந்தான். அவள் விலக முயலாமல், விலக விரும்பாமல் இசைந்து படுத்திருந்தாள்.

அலையடித்த உணர்வுகள் கரையைத் தொட்ட நேரம்... கைலாஷ்... கரையைக் கடக்காமல் துர்காவை விட்டு விலகி அவள் நெற்றியில் முத்தம் பதித்துவிட்டு எழுந்து கொண்டான். அறையை விட்டு வெளியே சென்றான்.

துர்கா தலையணையில் முகம் புதைத்துக்கொண்டாள். 'என்னை எடுத்துக்கொள்' என்று அவள் தன்னை முழுமனதாய் ஒப்படைக்க முன்வந்தபோதும்... கண்ணியம் காத்து கடைசி நொடியில் விலகிச் சென்ற அவனின் நேர்மை அவளை பெருமை கொள்ளச் செய்தது.

'இவன் என்னுடையவன்...'

அந்த நினைவே மனதில் இனித்தது. அவளுக்கு எழுந்து கொள்ள மனமில்லை. சற்று முன் அவனுடைய கைகளில் அடங்கியிருந்த நிகழ்வை மீண்டும் மீண்டும் நினைத்து மனதிற்குள் அசை போட்டுக்கொண்டிருந்தாள்.

## 32

**மு**ன்னறையில் கைலாஷ் செல்போனில் பேசிக் கொண்டிருப்பது துர்காவின் செவிகளில் விழுந்தது.

''ஆமாம்... எனக்கும் துர்காவிற்கும் லீவ் வேண்டும். வீ ஹேவ் சம் அர்ஜெண்ட் வொர்க்...''

அவளுக்கும் சேர்த்து அவன் லீவ் சொல்லியதை புன்னகையுடன் கேட்டுக்கொண்டே கண்களை மூடிக் கொண்டாள் துர்கா. அவளுக்கும் அன்று வேலைக்குப் போகும் மனநிலை இல்லை. மனதில் இன்ப அயர்வு இருந்தது.

நீண்ட நாள்களாக பாலைவனத்தில் நடந்தவளுக்கு நிழல் கிடைத்துவிட்ட உணர்வு... கை நழுவிப்போய்விட்ட அவளது உயிர் திரும்பவும் உடலில் வந்து குடியேறிவிட்ட உயிர்ப்பு... தேடக் கிடைக்காத திரவியம் திரும்பவும் கிடைத்துவிட்ட நிம்மதி.

துர்கா கண்களை மூடி தன் நினைவில் ஆழ்ந்திருந்த போது அறைக்கதவைத் திறந்துகொண்டு கைலாஷ் உள்ளே வந்தான். அவன் கைகளில் குழந்தை இருந்தான்.

''கம்பெனிக்கு போன் போட்டு உனக்கும் எனக்கும் லீவ் சொல்லிவிட்டேன்...''



''நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்...''

''இவனைக் கொஞ்சம் பார்த்துக்கொள்...''

''எங்கே போகிறீங்க?''

''டிரஸ் சேன்ஜ் பண்ணிவிட்டு வந்து விடுகிறேன். இன்றைக்குத்தான் லீவ் போட்டாச்சே...''

துர்கா குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு கதை பேசிக்கொண்டிருக்கையில்... லுங்கியும் பனியனுமாய் கைலாஷ் திரும்பவும் வந்தான். துர்காவின் அருகில் கட்டிலில் கால்களை மடித்து உட்கார்ந்து மடியில் ஒரு தலையணையை எடுத்து வைத்துக்கொண்டான்.

உரிமையுடன் அவன் வீட்டுப் படுக்கையறையில் கட்டிலில் அமர்ந்து குழந்தையிடம் கதை பேசிக்கொண்டிருந்தவளைக் காதலுடன் பார்த்தான். சற்று முன் அவனுக்குள் அடங்கிக் கிடந்தவளின் சரணாகதி அவனுக்கு நினைவுக்கு வந்தது.

'இன்றைக்கு இவளை நான் ஆண்டிருந்தாலும் இவள் எதுவும் சொல்லாமல் முழுமனதாய் தன்னை எனக்குக் கொடுத்திருப்பாள்...'

இந்த நினைவு அவன் மனதில் தைத்திருந்த முள்ளை அகற்றிவிட, கைலாஷ் குளிர்ந்த மனத்துடன் துர்காவைப் பார்த்தான்.

''துர்கா...''

''ம்ம்ம்...''

''ஏண்டி... நான் இன்னொருத்தியுடன் குடும்பம் நடத்திக் குழந்தை பெற்றுக்கொண்டவனாச்சே... என்னிடம் போய் இன்னும் நீ இவ்வளவு காதலை வைத்திருக்கிறாயே...''

''என்ன செய்வது? என்னால் உங்களை மட்டும்தானே காதலிக்க முடிகிறது. வெறுக்க முடியவில்லையே...''

''என்னால் மட்டும் இன்னொருத்தியை காதலித்துவிட முடியுமா துர்கா. இதை ஏன் நீ நினைத்துப் பார்க்கவில்லை...''

அவன் ஆழ்ந்த குரலில் கேட்டான். துர்கா பேச்சிழந்தாள். அவன் குரலில் தெரிந்த குற்றச்சாட்டு... அவளைக் காயப்படுத்தியது. அவள் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

'ஏன் இப்படிச் சொல்கிறான்...' அவள் குழம்பும்போதே... அவளுடைய விரல் பிடித்துக் கடித்தான் குழந்தை.

துர்காவின் பார்வை குழந்தையின் மேல் படிந்தது.

'ஆனால், இந்தக் குழந்தை... இதைப் பெற்ற அம்மா அன்று பேசிய பேச்சு... இவையெல்லாம் பொய்யில்லையே.' அவள் கைலாஷைப் பார்க்காமல் குழந்தையைப் பார்த்தாள்.

கைலாஷிற்கு அவள் மனதில் ஓடிய நினைவோட்டம் புரிந்தது. அவன் நெற்றியில் முடிச்சு விழ... அவளைப் பார்த்தான்.

''உனக்கு என்மேல் இருப்பது உண்மையான காதல்தானே துர்கா?''

அவள் துடித்துப்போய் அவனைப் பார்த்தாள். அவளைப் பார்த்து என்ன வார்த்தை கேட்டு விட்டான்?

''இன்னுமா என் காதலை சந்தேகப்படுகிறீங்க?''

''நீ மட்டும் சந்தேகப்படலாம்... நான் சந்தேகப்படக் கூடாதா?''

''கைலாஷ்... எனக்கு நீங்கள் பேசுவது புரியவில்லை? எப்படி உங்களால் இப்படிப் பேச முடிகின்றது. உங்கள் கைகளில் குழந்தை இருக்கிறது கைலாஷ். அது உங்கள் குழந்தை...''

கைலாஷ் நிதானமாய் துர்காவைப் பார்த்தான். அவன் பார்வையில் இருந்த செய்தியை துர்காவினால் புரிந்து கொள்ள முடியவில்லை.



''என் கையில் இருந்தால்... அது என் குழந்தையாக ஆகிவிடுமா துர்கா...''

''கைலாஷ்...''

தன் காதுகளை நம்பமுடியாமல் துர்கா அதிர்ந்து நிமிர்ந்தாள். கைலாஷின் வார்த்தைகளில் பொதிந்திருந்த செய்தி அவளைத் தாக்கியது.

''நீங்கள் என்ன சொல்கிறீங்க கைலாஷ்...''

''பவித்ரன் என்னுடைய மகனில்லை துர்கா... என் உயிர் நண்பன் ஆதித்யனின் மகன்...''

துர்கா கண்கள் விரிய கைலாஷையே பார்த்தாள். அவள் முன்னால் இந்த உலகமே அற்புதமான அழகோடு மாறியது. அவள் மனம் கைலாஷ் சொல்லிய செய்தியைக் கேட்டுத் துள்ளியது.

## 33

''நீங்கள் என்ன சொல்கிறீங்க கைலாஷ்...''

''பவித்ரன் எனக்குப் பிறந்த குழந்தையில்லைன்னு சொல்கிறேன்...''

''அப்போ... அந்த ரோஜா...''

''எனக்குத் தங்கையைப் போன்றவள்...''

'தங்கை...' துர்காவின் மனம் குற்றஉணர்வில் வருந்தியது. எப்பேர்ப்பட்ட அயோக்கியனும் காதலியை, தன் மனைவியை 'தங்கை'யென்று சொல்ல மாட்டான்.

அப்படியிருக்கும்போது கட்டித்தங்கம் கைலாஷ் எப்படித் தங்கையென்று சொல்லுவான்.

''நான் தவறு செய்து விட்டேனா...?''

"இல்லை... நீ வந்தபோது நாங்கள் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளை வைத்து நீ எங்களைச் சந்தேகப்பட்டது இயல்பான விஷயம். அதுவும்கூட செய்யாமல் நீ எப்படி என் காதலியாக இருக்க முடியும்? ஆனால்... என்னிடம் சண்டை போடவாவது நின்றிருக்க வேண்டாமா? கூப்பிடக் கூப்பிட ஓடிவிட்டாயே..."

"நீங்களே யோசித்துப் பாருங்கள் கைலாஷ்... 'உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் பாதுகாப்பு' என்று ஒரு பெண்ணிடம் சொல்கிறீர்கள்... 'கடைசிவரை நான் உன்னைக் கைவிடமாட்டேன்'னு உறுதியளிக்கிறீர்கள்... போதாக் குறைக்கு 'யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளா விட்டாலும் உன்னையும் உன் குழந்தையையும் காப்பாற்றியே தீருவேன்'னு சபதம் போடுகிறீங்க. இந்தனையையும் கேட்ட பின் என்னால் எப்படி நின்று விளக்கம் கேட்டிருக்க முடியும்?"

"ஓடினவள் மறுநாளாவது என் போனை அட்டெண்ட் பண்ணியிருக்கலாமில்லை..."

"என்னால் எப்படி உங்களிடம் பேச முடியும்?"

"உன் பின்னால் தினமும் பாடிகார்டு போல தொடர்ந்து வந்தேனே. அப்போதாவது முகம் கொடுத்துப் பேசியிருக்கலா மில்லையா?"

"என்னால் எப்படி உங்களின் முகம் பார்க்க முடியும்..."

"வாயிலேயே அடித்து விடுவேண்டி... என்னால் எப்படி முடியும்... என்னால் எப்படி முடியும்னு கிளிப்பிள்ளை போல் பேசினதையே பேசுகிறாயே. கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னோடு கொஞ்சிக் குலாவினாயே... அது மட்டும் உன்னால் எப்படி முடிந்தது..."



கைலாஷ் கோபமாய் கேட்கவும்... துர்காவின் முகம் குங்குமமாய் சிவந்து விட்டது. அவள் வெட்கத்துடன் கைலாஷின் கையைப் பிடித்துக் கிள்ளினாள்...

"ஸ்... ஆ... வலிக்குதுடி... காதல் பிசாசே நீ கொஞ்சினாலும் டெரர்தான்... வெட்கப்பட்டாலும் டெரர்தான். கேட்டதுக்குப் பதில் சொல்லாமல் கிள்ளிப் பழிவாங்கு கிறாயா?"

"ச்சு... போங்க..."

"எங்கே போகச் சொல்கிறாய்?"

"கைலாஷ்..."

"ம்ம்ம்..."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் உங்களோடு கொஞ்சிக் குலாவாமல் என்னால் எப்படியிருக்க முடியும்?"

கைலாஷிற்கு அவளது பதிலைக் கேட்டு அவள்மேல் அளவு கடந்த பிரியம் ஏற்பட்டது.

"கள்ளி..." என்று அவளது பின்னலைப் பிடித்து இழுத்தான்.

"யார் பொருளை களவாடினேனாம்?"

"என் மனதை களவாடவில்லையா?"

"தோடா... கள்ளனே... என்னைப் பார்த்துக் 'கள்ளி' யென்று சொல்கிறார்?"

"நான் கள்ளனா?"

"பின்னே இல்லையா?"

"ஏய்ய்... உங்க அப்பா வீட்டுச் சொத்தையா நான் களவாடினேன்?"

"ஆமாம்..."

"அடிப்பாவி... உன்னைக் காதலித்த பாவத்திற்கு இன்னும் என்னவெல்லாம் எனக்கு பட்டம் கொடுக்கப்போகிறாய்?"

"நான் ஒன்றும் இல்லாததைச் சொல்லவில்லையே..."

"இருப்பதைத்தான் சொன்னாயா?"

"ஆமாம்... நான் என் அப்பாவின் பெண்தானே... நீங்கள் என் மனதைக் களவாடவில்லையா?"

கைலாஷ், துர்காவின் பேச்சை ரசித்துச் சிரித்தான்.

"பயங்கரமான ஆள்டி நீ..."

"அப்போ என்னை ராட்சசின்னு சொல்கிறீங்களா?"

"நீ ராட்சசிதானே... என்னை இரண்டு வருடமாய் எவ்வளவு குரூரமாய் தண்டித்தாய். நீ ராட்சசியில்லாமல் வேறு யார்?"

கைலாஷ் விளையாட்டாகத்தான் இதைச் சொன்னான். ஆனால்... துர்காவோ அழுது விட்டாள்.

## 34

"ஏய்ய்... துர்கா... ஏன் அழுகிறாய்?"

"நான் உங்களைத் தண்டித்தேனா?"

"அசடு... ஒரு பேச்சுக்குச் சொன்னேன்டி..."

"பேச்சுக்கு என்றாலும் உண்மையைச் சொன்னீங்க..."

"நீ என்னைத் தண்டித்தது நிஜம்தானே துர்கா..."

"நான்தான் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தேன்."

"எனக்கு அது தெரியாது என்றா நினைக்கிறாய்?"

"தெரிந்தும் என்னைக் குற்றம் சொல்கிறீங்களே..."



"நான்தானே சொன்னேன். வழியில் போகும் வழிப் போக்கனா வந்து சொன்னான்? விடுவாளா... சும்மா ராமாயணத்தை இழுத்துக்கிட்டு இருப்பா... இரண்டு வருடம் உன் முகத்தைப் பார்க்க முடியாமல், பேச முடியாமல் தவித்துப் போய் கிடந்தேண்டி. ஆத்திரத்தில் இரண்டு வார்த்தை கூடக்குறைய பேசிவிட்டால் நீ கேட்டுக்கொள்ள மாட்டாயா?"

கைலாஷ் அதட்டலாய் பேசினான். துர்கா உடனே தணிந்து பேசினாள்.

"ஏன் கேட்டுக்கொள்ளமாட்டேன்? அதெல்லாம் கேட்டுக் கொள்வேன்..."

அவள் குழைவாகப் பேசவும், கைலாஷ் கோபம் தணிந்து சிரித்தான்.

"சில நேரங்களில் நீ பயங்கர சமர்த்துடி... இது அப்படிப் பட்ட நேரம்..."

"வேறு எது... இப்படிப்பட்ட நேரம்?"

"ம்ம்... சொல்லவா?"

"சொல்லுங்கள்..."

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் என்னோடு கொஞ்சிக் குலாவினாயே... அது அப்படிப்பட்ட நேரம்..."

"போதுமே..."

துர்கா மீண்டும் கைலாஷை கிள்ளினாள். இப்போது துர்காவின் மடியில் விளையாடிக்கொண்டிருந்த பவித்ரன் சரிந்து தூங்க ஆரம்பிக்க... அவனைச் சரியாக படுக்க வைத்தாள் துர்கா. கைலாஷ் நகர்ந்து அவளை அருகே இழுத்துக்கொண்டான்.

இன்னொரு பெண்ணின் கணவனாக இருந்தவன் என்ற கோபம் இருந்தபோதே அவனுடன் ஒன்றிப்போனவள் துர்கா.

இப்போதோ அவனுடைய உடலும் மனமும் அவளுக்கு மட்டுமே சொந்தம் என்று அறிந்த பின்னால் விலகி நிற்பாளா என்ன?

அவள் கைலாஷின் முடி கோதி தன் மடி தாங்கிக் கொண்டாள். அவளுடைய கைவளையல்களை நிரடியவாறு அவன் கதை பேச... அவள் அவன் தலைமுடியைக் கோதியபடி 'ஊம்...' போட்டுக் கேட்டாள்.

"அவன் என் உயிர் நண்பன் துர்கா... இந்தப் படிப்பும் வாழ்க்கையும் அவன் கொடுத்தது..."

கைலாஷ் கடந்த காலத் துயரங்களில் கரைந்தான். அவனைப் பேசவிட்ட துர்கா... அவன் கொட்டிய துயரங்களின் அளவை அள்ள முடியாமல் திகைத்துப் போனாள்.

'எப்போதும் சிரித்த முகமாய் இருக்கும் கைலாஷின் வாழ்க்கையில் இவ்வளவு துயரமும் சோகமும் இருந்தனவா?' நினைக்கும்போதே அவளது நெஞ்சம் துடித்தது.

"நீயே சொல்... எனக்கு அடைக்கலம் கொடுத்தவன், காதலித்தவளை கையில் பிடித்துக்கொண்டு என்னிடம் அடைக்கலம் கேட்டு வந்து நின்றான். என்னால் அடைக் கலம் கொடுக்காமல் எப்படி இருக்க முடியும் துர்கா..."

"நீங்கள் அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்காமல் இருந்திருந்தால்தான் அது தவறு. அடைக்கலம் கொடுத்ததில் தவறே இல்லை. ஆனால்... இதை என்னிடம் சொல்லாமல் என்னை மூன்றாம் மனுஷி போல விலக்கி வைத்தீங்க பாருங்க... அதுதான் மிகப் பெரிய தவறு..."

"ஏய்ய்... என் சம்பந்தமான எதையும் உன்னிடமிருந்து மறைக்கும் எண்ணமே எனக்கு இல்லையடி.... என் கடந்த காலத்தைப் பற்றி நீ கேட்டதேயில்லை. அதனால் நான் சொல்லவில்லை..."



"ஆதித்யனைப் பற்றியும் ரோஜாவைப் பற்றியும் சொல்லியிருக்க வேண்டாமா?"

"நண்பனை விட்டுக் கொடுக்க மனமில்லை..."

"உண்மையைச் சொன்னால் நீங்கள் உங்கள் நண்பரை விட்டுக் கொடுத்ததாக ஆகிவிடுமா?"

"அது அவனுடைய பர்ஸனல் மேட்டர் இல்லையா துர்கா..."

"அடுத்து அவர் இறந்தபோதாவது என்னிடம் சொல்லி யிருக்க வேண்டாமா?"

"அந்த துக்கத்தை எப்படி நான் என் வாயால் சொல்ல?" எல்லாக் கேள்விகளுக்கும் கைலாஷிடம் பதில் இருந்தது.

## 35

"ரோஜா தனியாய் நிற்கிறாள். அதிலும் வயிற்றில் குழந்தையோடு நிற்கிறாள். அப்போது அவளுக்கு ஒரு பெண் துணை அவசியமில்லையா? அது நானாக இருக்கக் கூடும் என்று ஏன் உங்களுக்குத் தோன்றவில்லை?"

"எனக்கு எதுதான் தோன்றியது? ஆதித்யன் போய் விட்டான்னு தெரிந்ததும் நான் ஆடிப்போய்விட்டேன் துர்கா... உனக்குத் தெரியுமா? வீட்டில் அழுதால் ரோஜாவுக்குத் தெரிந்துவிடுமேன்னு கடற்கரையில் ஆளில்லாத நேரத்தில் தனிமையில் நின்று கதறி அழுதேன்..."

"கைலாஷ்..."

"எனக்குத் தாயும் தகப்பனுமாய் அவன் இருந்தாண்டி அவன் பெற்ற பிள்ளையை அநாதையாய் விட என்னால் முடியுமா?"

''யார் பவித்ரனை அநாதையாக விடச் சொன்னது? அவன் நம் குழந்தை...''

''நம்முடைய மூத்த குழந்தையென்று சொல்லு...'' கண்ணீருடன் துர்காவின் கைவிரல்களைப் பற்றி முத்த மிட்டான் கைலாஷ்.

''ரோஜா, ஆதித்யனின் முடிவைப் பற்றித் தெரிந்து கொண்டதும் சாகப் போகிறேன்னு கிளம்பி விட்டாள்... அவளை வயிற்றில் இருக்கும் ஆதித்யனின் குழந்தையைக் காரணம் காட்டி தடுத்து நிறுத்தினேன்...''

''நான் ஒரு மடச்சி... அதைப் போய் தவறாக நினைத்து விட்டேன்... ஐ ஆம் ஸாரி கைலாஷ்...''

''ம்ம்... இப்போது வந்து ஸாரி கேட்டு என்ன பிரயோஜனம்? என் துக்கத்தில் சாய்ந்து கொள்ள உன் தோளும் கிடைக்கவில்லை என் சோகத்தை இறக்கிவைக்க தாய் மடியாய் உன் மடியும் கிடைக்கவில்லை. நான் தனியாய் என் சோகத்தைச் சுமந்தேன்...''

''நான் பாவி கைலாஷ்...''

துர்காவின் கண்களில் இருந்து வழிந்த நீர் கைலாஷின் மேல் விழுந்து தெறித்தது. அவன் அவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''ச்ச்... அழுவாதே துர்கா... நாம் அழுததெல்லாம் போதும்...''

''நீங்கள் தனியாக கஷ்டப்பட்டீர்களே...''

''நீ மட்டும் சுகப்பட்டாயா?''

''இருந்தும் ரோஜாவின் இறப்பிற்கு பின்னால் கைக் குழந்தையை வளர்க்க நீங்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப் பீர்கள்?''



''சிரமப்பட்டேன்தான். ரோஜா பிடிவாதமாக தன் முடிவைத் தேடிக்கொண்டாள். அவளைக் காப்பாற்ற என்னால் ஆன மட்டும் போராடிப் பார்த்தேன். அவள் கேட்கவில்லை. தன் உயிரைத் தானே குறைத்துக்கொண்டாள். கடைசி வினாடியில் 'என் பிள்ளையைக் காப்பாற்றுங்கள்...' என்று கூட என்னிடம் சொல்லவில்லை. என் மேல் அவ்வளவு நம்பிக்கை. அமைதியாக ஒரு பார்வை பார்த்தாள்... கண் மூடிவிட்டாள்...''

''பாவம்...''

''ஜோடிப் புறா இல்லாத புறா உயிர் வாழாதாம். அந்த மாடப் புறா போல் ரோஜா, ஆதித்யனை தேடிப் போய்விட்டாள்...''

''அழ வேண்டாம் கைலாஷ்...''

''இனி அழுது ஆகப் போவதென்ன... எல்லாம்தான் முடிந்துவிட்டதே...''

''கைலாஷ்... நான் ஒன்று கேட்பேன்... நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது...''

''கேள்...''

''என்னைத் தவறாகவும் நினைத்துக்கொள்ளக் கூடாது...''

''என்னடி பீடிகை போடுகிறாய்?''

''அதற்கு அவசியம் இருக்கிறது கைலாஷ்...''

''உன்னைப் போய் நான் தவறாக நினைத்துக் கொள்வேனா? சும்மா கேளு...''

''பவித்ரனைப் பற்றி ஆதித்யனின் குடும்பத்திற்கு நீங்கள் சொல்லவில்லையா?''

கைலாஷின் முகம் மாறி கல் போல் கடினமானது...

''இதைக் கேட்கத்தான் இப்படி சுற்றி வளைத்துப் பீடிகை போட்டாயா?''

''பார்த்தீங்களா... கோபித்துக்கொள்ளக்கூடாதுன்னு நான் சொன்னேனா... இல்லையா?''

''அவங்ககிட்ட ஏண்டி என் ஆதித்யனின் மகனைப் பற்றி நான் சொல்லனும்?''

''ஆயிரம்தான் இருந்தாலும் இவன் அந்தக் குடும்பத்தின் வாரிசு இல்லையா?''

''என் ஆதித்யனும் அந்தக் குடும்பத்தின் வாரிசுதான். அவனையே அழித்த குடும்பம்டி அது. என் பவித்ரனின் மேல் அவர்களின் மூச்சுக்காற்று படக்கூட நான் விடமாட்டேன்...''

தூங்கிக்கொண்டிருந்த குழந்தையின் முடி கோதினான் கைலாஷ்.

## 36

''துர்கா... உன் மனதில் இருப்பதை ஒளிவு மறைவில்லாமல் என்னிடம் சொல்லிவிடு...''

கைலாஷ் அழுத்தமான குரலில் வினவவும்... துர்கா திகைத்தாள்.

''என் மனதில் என்ன ஒளிவு மறைவு இருக்கிறது?''

''பவித்ரன் என் குழந்தையென்று நீ நினைத்தபோது... அவனை உன் மகனாக நினைத்தாய். இப்போது ஆதித்யனின் மகன் என்று தெரிந்ததும் அவனுடைய குடும்பத்தில் அவனைச் சேர்க்கச் சொல்கிறாய்...''

''இதன் மூலம் நீங்கள் சொல்ல வருவதுதான் என்ன?''

''இவன் எனக்கு ரத்தசம்பந்தமில்லாதவன்னு தெரிந்ததும் இவனைக் கழட்டிவிடப் பார்க்கிறாயா?''



துர்காவிற்கு கோபமும் அழுகையும் போட்டி போட்டுக் கொண்டு சேர்ந்து வந்தன. அவள் கட்டிலை விட்டு இறங்க முற்பட்டாள். கைலாஷ் அவள் கையைப் பிடித்து தடுத்தான்.

''ஏய்ய்... நில்லுடி... ஆன்னா ஊன்னா... இதை ஒன்றைச் செய்து விடு. போன பிறவியில் பி.டி.உஷாவாக பிறந்திருப்பாயோ. இப்படி ஓடுவதிலேயே குறியாக இருக்கிறாயே...''

''இப்படி என்னை தரக்குறைவாக நினைத்துப் பேச வேண்டாம்...''

''சரி... பேசவில்லை... உட்கார்...''

துர்கா மனத்தாங்கலுடன் கட்டிலில் அமர்ந்தாள். அவளுடைய மனம் சிணுங்கிக்கொண்டிருப்பதை முகச் சிணுக்கம் காட்டிக் கொடுத்தது.

''நீயும் அப்படிப் பேசலாமா?''

''புரியாமல் பேசாதீங்க கைலாஷ்... ஆதித்யனின் குடும்பம்.... பரம்பரையாய் பணம் கொழிக்கும் கோடீஸ்வரக் குடும்பம்னு நீங்கதானே சொன்னீங்க...''

''ஆமாம்...''

''நம் குழந்தையாய் பவித்ரன் வளர்ந்தால் கிடைக்கும் சொத்தைவிட.... அவனுக்குச் சேர வேண்டிய உரிமையுள்ள சொத்து அதிகம்தானே...''

''அ... ஆமாம்...''

''அதைத்தான் நான் சொன்னேன். இன்றைக்கு இதை மறைத்து பவிக்குட்டியை நம் குழந்தையாக நாம் வளர்த்தாலும் நாளைக்கு விவரம் தெரிந்த பின்னால் ஏதாவது ஒரு வழியில் அவனுக்கு உண்மை தெரியவரும்போது அவ்வளவு சொத்தையும் இழந்துவிட்டோமேன்னு அவன் நினைத்துவிட்டால் என்ன செய்வது?''

''என்னடி நீ... என்னென்னவோ சொல்கிறாய்?''

''நடப்பைச் சொன்னேன்... அப்புறம் உங்கள் இஷ்டம்... யார் ஆதித்யனை மறந்திருந்தாலும் ஆதித்யனின் அம்மா அவரை மறந்திருக்க மாட்டாங்கதானே...''

''அது என்னவோ உண்மைதான்...''

''ஆதித்யனின் மகன் இருக்கும் செய்தி அறிந்தால் அந்தத் தாயின் மனம் எவ்வளவு சந்தோஷப்படும்?''

''ஆனால், துர்கா...''

''என்னங்க?''

''இவன் பிறந்தவுடன் ரோஜா போய் விட்டாள். இவன் பிறப்பதற்கு முன்னாலேயே ஆதித்யன் போய் விட்டான். இவனைப் பிறந்தவுடன் தூக்கிக்கொண்டவன் நான் ஒன்றரை வருடமாய் இவன்தான் உலகம்னு வளர்த்துவிட்டு இப்போது போய் இவனை விட்டு நான் பிரிவதா?''

கைலாஷின் குரலில் பிரிவுத்துயர் வெளிப்பட்டது. துர்காவினால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் பதறிப் போனாள்.

''வேண்டாம் கைலாஷ்... நீங்கள் வருத்தப்படாதீங்க. பவித்ரனைப் பற்றி நாம் ஆதித்யனின் குடும்பத்தில் ஒன்றும் சொல்ல வேண்டாம்...''

''தேங்க்யூ துர்கா...''

''அவன் நம் குழந்தை...''

''நம் மூத்த குழந்தைன்னு சொல்லு...''

''நீங்க அதிலேயே நில்லுங்க...''

''பின்னே... என் குழந்தைக்கு அம்மாவாக ஆசைப்படும் உன்னை அம்மாவாக்காவிட்டால் என் பெருமை என்ன ஆவது?''

அவன் விட்டதை மீண்டும் தொடர்ந்தான். துர்கா அவன் மார்பில் முகம் புதைத்து ஒன்றினாள்.



## 37

அன்று மாலை துர்கா கிளம்பும்போது கைலாஷ் தானும் கூட வருவதாகச் சொன்னான். துர்கா மறுத்து விட்டாள்.

''வேண்டாம் கைலாஷ்...''

''ஏன் துர்கா... நான் வந்து உன் பேரண்ட்ஸிடம் பேசுகிறேனே...''

''இல்லை... அது சரிவராது. நான் முதலில் வீட்டில் உங்களைப் பற்றிப் பேசுகிறேன். அதுதான் முறை. அதற்குப் பின்னால் நான் வரச்சொல்லும்போது நீங்கள் வந்து என்னைப் பெண் கேளுங்க...''

துர்கா வாசல் கதவை அணுகியபோது கைலாஷ் அவள் தோள் தொட்டு நிறுத்தினான்.

''என்ன கைலாஷ்...''

''நான் தாய் தகப்பனில்லாதவன் துர்கா...''

''இதையே எத்தனை தடவை சொல்வீங்க...''

''சொந்த பந்தமென்று யாரும் எனக்கு கிடையாது.''

''அதனால் என்ன?''

''இதனால் எல்லாம் உன் அப்பா உன்னை எனக்குத் தரமாட்டேன்னு சொல்லிவிடமாட்டாரே...''

'எப்பேர்ப்பட்ட வீரனும் காதல் என்று வந்துவிட்டால் குழந்தையாக மாறிவிடுவான் போல...' என்று நினைத்துக் கொண்ட துர்கா... கைலாஷிற்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் சிரித்தாள்.

''இதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்...''

''துர்கா...''

''சொல்லுங்க கைலாஷ்...''

''எனக்கு நீ வேண்டும்...''

அவள்... அவன் முகத்தையே பார்த்தாள். அதில் தெரிந்த தவிப்பைப் பார்த்தாள். இரு கரங்களாலும் அவன் முகத்தை ஏந்தி அதில் ஆசை தீர முத்தமிட்டாள். கைலாஷ் அவளை மீண்டும் தழுவிக்கொள்ள... அவன் தோள் வளைவில் முகம் புதைத்து அவன் காதோரம் பேசினாள்.

''நான் உங்களுடையவள் கைலாஷ்... இதில் மாற்ற மில்லை. இது உங்களுக்கும் தெரியும்தானே...''

''ம்ம்...''

''அப்போ... நான் போய்வர வழி விடுங்க...''

ஒருவழியாக கைலாஷ் அவளை அனுப்பி வைத்தான். துர்கா... கோயிலுக்குப் போய் கடவுள் சந்நிதியில் நன்றி சொல்லி கண்மூடி வேண்டிவிட்டு நவக்கிரகங்களையும் வலம் வந்து வணங்கிவிட்டு கோயில் பிராகாரத்தில் அமர்ந்தாள். அவள் மனம் நிறைந்திருந்தது.

''நன்றி இறைவனே... என் காதலை எனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டாய். என் கைலாஷ் எனக்கு மட்டும் சொந்தமானவளாக இருக்கிறான். இது தெரியாமல் நான் பட்ட மனத்துயரங்களில் இருந்து எனக்கு விடுதலை கொடுத்து விட்டாய். நன்றி...''

அமைதியுடன் எழுந்து வீட்டிற்கு சென்றவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள் கோமளவள்ளி.

அவளுடைய மகளா... இப்படிப் பூவும், புன்னகையுமாய் வந்து நிற்பது...''

''அப்பா வந்துவிட்டாரா அம்மா...''

''ம்ம்... அப்போதே வந்துவிட்டார்... என் லேட்?''

''கோயிலுக்குப் போய்விட்டு வந்தேன்...''



''வீட்டுக்கு வந்து என்னிடம் சொல்லியிருந்தால் நாம் சேர்ந்தே போயிருக்கலாமே...''

''என்னவோ... எனக்குத் தோன்றியது. அதனால்தான் கோயிலுக்குப் போய்விட்டு வந்தேன்...''

''சரி... உள்ளே வந்து முகம் அலம்பிவிட்டு வா... காபி டிபன் தருகிறேன்...''

துர்கா முகம் கழுவி நைட்டிக்கு மாறி ஹாலுக்கு வந்தாள். சுப்ரமணி, டி.வி-யில் நியூஸ் பார்த்துக் கொண்டிருக்க... அருகில் அமர்ந்திருந்த ரமணன்... செல்போனில் அவனுடைய நண்பனுடன் பேசிக்கொண்டிருந்தான். கோமளவள்ளி கொண்டுவந்து கொடுத்த காபியை பருகியபடி துர்கா தம்பியைப் பார்த்தாள். அவன் செல்போனில் பேச்சை முடித்துக்கொண்டு...

''ஹாய் அக்கா...'' என்றான்.

''ஏண்டா பொய் சொன்னாய்?'' துர்கா பெற்றவர்களுக்குக் கேட்காமல் சன்னக் குரலில் சீறினாள்.

''நீ பேச்சுவார்த்தை நடத்த அப்பாவைத் தேட வேண்டாமா... அதற்காகத்தான்...''

''ரமணா...''

''இது எப்படி எனக்குத் தெரியும்னு பார்க்கிறாயா? ஆல்ரெடி ஐயா கைலாஷிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர் வில்லனில்லை ஹீரோன்னு கண்டுபிடித்து விட்டேன். உனக்கும் அது தெரிய வேண்டாமா?''

## 38

**மொ**ட்டை மாடியில் வீசிய சில்லென்ற காற்று உணர்த்திய இதத்தைவிட... மகள் வந்து தன்னிடம்

தனிமையில் பேச விரும்பி மொட்டை மாடிக்கு அழைத்ததை அதிக இதமாக உணர்ந்தார் சுப்ரமணி.

தென்னங்கீற்றை வருடியபடி... மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரின் மேல் அமர்ந்திருந்தவளின் முகம் பார்த்து...

''சொல்லும்மா...'' என்று வினவினார்.

''அப்பா... அவர் பெயர் கைலாஷ்...'' என்று ஆரம்பித்த துர்கா... அனைத்தையும் சொல்லி முடிக்கும்வரை பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்தார் சுப்ரமணி.

துர்கா சொல்லி முடித்துவிட்டு தகப்பனாரின் முகம் பார்த்தார். அவர் யோசனையுடன் நடைபயின்று கொண்டிருந்தார். பக்கத்து வீட்டுக் காம்பவுண்டு சுவரில் படர்ந்திருந்த முல்லை மலரின் வாசம் காற்றோடு மிதந்து வந்து அவர்கள் நாசியில் நுழைந்தது.

துர்காவின் மனம் சிறகைவிட லேசாக இருந்தது. அனைத்தையும் தகப்பனாரிடம் சொல்லிவிட்ட திருப்தியுடன் அவள் அந்த மொட்டை மாடி தந்த இனிய சூழலை ரசித்துக் கொண்டிருந்தாள்.

சுப்ரமணி நடப்பதை நிறுத்தினார். அவர் கேள்வி கேட்கப் போகிறார் என்பதை உணர்ந்து கொண்ட துர்கா... அவருடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாரானாள்.

''ஆக... நீ சொல்லும் கைலாஷிற்கு அப்பா... அம்மா... இல்லை...''

''ஆமாம்ப்பா... இனி நீங்களும் அம்மாவும்தான் அவருக்கு அப்பாவும் அம்மாவும்...''

மகளின் புத்திசாலித்தனத்தை நினைத்து லேசாகப் புன்னகை செய்து கொண்டார் சுப்ரமணி.

''அவருக்காக பெண் கேட்டு வர... அவர் சார்பாக ஒரு சொந்த பந்தம்கூட இல்லை...''



''பவிக்குட்டி இருக்கிறானேப்பா... அவன் அவருக்காக உங்களிடம் பெண் கேட்டுவருவான்...''

அந்தக் குழந்தையின் மேல் அன்பு வைத்திருக்கும் தகப்பனாரைக் கவிழ்க்க மகள் எடுத்துக்கொண்ட முயற்சி தகப்பனுக்கு நன்றாகப் புரிந்தது.

''பவிக்குட்டி... அவனைப் பற்றியும் நாம் யோசித்தாக வேண்டும்...''

''அவனுக்கென்னப்பா... ஸ்மார்ட் குட்டி... அவன்தான் நம் வீட்டில் எல்லோருக்கும் செல்லம் ஆகிவிட்டானே...''

''துர்கா... இது விளையாட்டில்லை... உன் வாழ்க்கை...''

''எனக்கும் அது தெரியும் அப்பா... ஆனால், என் வாழ்க்கையை நான்தானே வாழ வேண்டும். நீங்கள் கைலாஷிடம் குறையாக நினைக்கும் எதுவுமே எனக்கு குறையாகத் தோன்றவில்லையே அப்பா...''

''ஆனால்... ஊர் உலகம் அப்படி நினைக்காதேம்மா...''

''நம் வாழ்க்கையை நாம் வாழ்கிறோம். இதில் தலையிட இந்த ஊருக்கும் உலகுக்கும் என்ன உரிமையிருக்கிறது?''

''அந்த ஊர் உலகத்தின் மத்தியில்தான் நாம் வாழ்ந்தாக வேண்டியிருக்கிறது. தனிக்காட்டில் போய் நாம் வாழ முடியாது...''

''இப்போது நீங்கள் என்னதான் சொல்ல வருகிறீர்கள் அப்பா...''

''கைலாஷிற்கு என்று யாருமேயில்லை... அவர் அநாதை என்றே வைத்துக்கொள்வோம்...''

''நீங்கள் வைத்துக்கொள்வது என்ன? அதுதானே உண்மை...''

''அதைக்கூட நான் சமாளித்து விடலாம்...''

''வேறு எதைச் சமாளிக்க முடியாது?''

''கையில் குழந்தையோடு கைலாஷ் இருப்பதைச் சமாளிக்க முடியாது...''

''ஏன் முடியாது?''

''உன்னை இரண்டாம் தாரமாய் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறோமென்று இந்த ஊர் உலகம் சொல்லும்மா...''

''சொன்னால் சொல்லட்டும். அப்பா, என் வாழ்க்கை கைலாஷோடுதான். அவர் பவிக்குட்டியின் மேல் உயிரையே வைத்திருக்கிறார். அந்தக் குழந்தையை அவரை விட்டு நான் பிரிக்க மாட்டேன். சொல்லி விட்டேன்...''

துர்கா... விர்ரென்று மாடிப்படிகளில் இறங்கும்போது எதிரே கோமளவள்ளி படியேறி வந்தாள். தாயின் கண்களும் மகளின் கண்களும் சந்தித்துக்கொண்டன.

## 39

**து**ர்காவிற்குத் தெரியும்... மகளுடன் கணவர் என்ன பேசினார் என்பதை அறிந்துகொள்வதற்காக கோமளவள்ளி படியேறி வந்து கொண்டிருக்கிறாள் என்பது.

''ஏன்... துர்கா கோபமாக போகிறாள்?'' அவள் கணவரிடம் விசாரித்தாள்.

''வெளியுலகம் இன்னும் அவளுக்குத் தெரியவில்லை கோமளா... எடுத்துச் சொன்னால் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாள்...''

''நீங்க சொல்லத் தெரியாமல் சொல்லியிருப்பீங்க...''

''முதலில் நீ விவரத்தைக் கேளு. அப்புறம் சொல்கிற விதமாய் அவளிடம் சொல்லு...''



சுப்ரமணி விவரித்ததை முழுவதும் கேட்டு முடித்த கோமளவள்ளி...

''இதில் கவலைப்பட என்ன இருக்கு?'' என்று கணவரிடம் வினவினாள்.

''என்னடி கோமளா இப்படிச் சொல்லிட்ட... நான்தான் இதிலிருக்கும் ஆயிரம் சிக்கல்களை உன்னிடம் பிட்டுப் பிட்டு வைத்தேனே...''

''சிக்கலைப் பிரிக்க வழி தெரியாமல் பேசுகிறவர்கள் பேசும் பேச்சை நீங்களும் பேசாதீங்க...''

''நீ விவரமானவள்தானே. நீயே இதற்கு ஒரு வழியைச் சொல்லு...''

''அந்தக் கைலாஷிற்கு என்ன குறைச்சல்? எம்.ஏ., எம்.பி.ஏ. படித்திருக்கிறார். நம் பெண்ணுக்கே சுப்பீரியர் ஆபீஸராக வேலை செய்கிறார். நம் பெண்ணைவிட மூன்று மடங்கு அதிகமாக சம்பாதிக்கிறார். சொந்த அபார்ட்மெண்ட் இருக்கிறது. கார் இருக்கிறது. ஊரையெல்லாம் சல்லடை போட்டுத் தேடினாலும் இப்படி ஒரு மாப்பிள்ளை நமக்குக் கிடைப்பாரா?''

கோமளவள்ளியின் கூற்றில் இருந்த நியாயம் சுப்ரமணியின் புத்திக்கு உறைத்தது.

''அது சரிடி கோமளம்... மாப்பிள்ளை அநாதையாமே...''

''மாமனார்... மாமியார் தொந்தரவு இல்லை. நாத்தனார் நங்கை பிடுங்கல் இல்லை. கொழுந்தனை ஆளாக்க வேண்டிய பொறுப்பு இல்லை. மொத்தத்தில் பிக்கல் பிடுங்கல் இல்லை. நம் பெண் யாருடைய தொந்தரவும் இல்லாமல் ராணியைப் போல வாழ்வாள்!''

'இப்படி ஒரு பாயிண்ட் இருப்பது எப்படி நமக்குத் தெரியாமல் போய் விட்டது' என்று பலமாக யோசித்தார் சுப்ரமணி.

அதுதான் பெண்கள் என்று அவருக்குப் புரியவில்லை. மலையை மடுவாக்கும் சாமர்த்தியமும், மடுவை மலையாக்கும் கெட்டிக்காரத்தனமும் பெண்களுக்கு கை வந்த கலைகள்.

துர்கா தனித்தே நின்றுவிடுவாளோ என்ற பயத்தில் இருந்த கோமளவள்ளிக்கு கைலாஷிடம் இருந்த அத்தனை அம்சங்களும் சாதகமானதாகவே தோன்றின. அவள் அதை சொல்லும் விதமாய் கணவனுக்குச் சொல்லி உருவேற்றினாள்.

"இப்படிப்பட்ட மாப்பிள்ளை கிடைக்க நாம் ஏழேழு ஜென்மத்திலும் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும்..." என்று கோமளவள்ளி செக் வைத்து விட்டாள்.

சுப்ரமணிக்கு மறுத்துப் பேச வாய் வரவில்லை. இருந்தாலும் அவருடைய மனம் பவித்ரனைப் பற்றிய சிந்தனையில் உழன்றது.

"அந்தக் குழந்தை... அதை நினைத்தால்தான் யோசனையாக இருக்கிறது கோமளா..."

கோமளவள்ளியும் அதைப் பற்றி யோசிக்கத்தான் செய்தாள். அவள் மனதில் ஒரு யோசனை பளிச்சிட்டது. அவள் உற்சாகத்துடன் நிமிர்ந்தாள்...

"இப்படிச் செய்தால் என்ன?"

"எப்படிச் செய்யச் சொல்கிறாய்?"

"மாப்பிள்ளைக்கும் துர்காவிற்கும் தெரியாமல் அந்த ஆதித்யனின் அம்மாவிடம் பவித்ரனைப் பற்றி நாம் சொல்லி விட்டால் என்ன?"

"ஏண்டி... ஆதித்யனையே அழித்த குடும்பமாச்சேடி அது. அந்தக் குழந்தையை நான் ஒரு பிரச்னையாக நினைக்கிறேன் தான். அதற்காக அதன் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் காரியத்தை நான் செய்ய மாட்டேன்..."



கணவரின் பயத்தில் இருந்த நியாயத்தை உணர்ந்து கொண்ட கோமளவள்ளி... அதற்கும் ஒரு வழி சொன்னாள்.

## 40

ரமணன்... பஸ்ஸில் ஏறி ஜன்னலோரமாக அமர்ந்தான். பச்சைப்பசேலென்ற வயல்வெளியைப் பார்த்தவனின் மனதில் உற்சாகம் கொப்புளித்தது. எங்கு பார்த்தாலும் இயந்திரமயமாய் இருந்த சென்னை மாநகரத்தை விட்டு அவன் தேனிக்குப் பயணப்பட்டுக்கொண்டிருந்தான்.

"டேய் ரமணா... உன் அக்காவின் வாழ்க்கையின் நிம்மதி உன் கையில்தான்டா இருக்கிறது..."

கோமளவள்ளி உருக்கமாய் கூறியபோது... ரமணன் கைகளை விரித்துக் காண்பித்து சிரித்தான்.

"என் கை... வெறுங்கையாய்தானேம்மா இருக்கு... ஒன்றும் இல்லையே..."

"அடிவாங்கப் போகிறாய்... படவா... உன் அக்காவின் நிம்மதி மட்டுமில்லை... அந்தக் குட்டிப்பையன் பவித்ரனின் உயிரும் உன் கையில்தான் இருக்கு..."

இப்போது ரமணன் அரண்டே போய் விட்டான்.

"ஏன்ம்மா... ஏதோ... நாயர் கடை சமோசா நன்றாக இருக்கிறது என்பதற்காக நான் தினமும் அதை வாங்கி வாயில் போட்டதற்காக நீங்க பழிவாங்கப் பார்க்கறீங்களா... என்னிடம் போய் ஹிட்ச்சாக் பட ரேன்ஜிற்கு வசனம் பேசுகிறீங்களே..."

"பொறுமையாய் கேளுடா..."

"உங்களைப் பொறுமைசாலின்னுதான் இத்தனை நாள் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்போது பார்த்தால்..."

ஜான்ஸி ராணி போல எனக்கு வீரத்திலகம் வைத்து, தேனிக்குப் போ என்கிறீர்களே..."

"அடேய்... நான் பெற்ற மகனே..."

"அந்த நினைவு உங்கள் மனதிலிருந்தால் வெட்டரி வாளும் வேல்கம்பும் கொஞ்சி விளையாடும் மண்ணிற்கு என்னைத் தூது செல்ல அனுப்பி வைப்பீங்களா?"

"நீ ஆண்பிள்ளை சிங்கம்டா..."

"நான் ஆண்பிள்ளை.... ஒப்புக்கொள்கிறேன். சிங்கம் ரேன்ஜெல்லாம் எனக்கு அதிகம்..."

"ரமணா... நானும் உன் அப்பாவும் போனால் விஷயம் வெளியே தெரிந்துவிடும்டா..."

"நான் போனால் மட்டும் தெரியாதா?"

"தெரியாது. அந்த ஊரில் நமக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் இருக்கிறார்..."

"அவரிடம் சொல்லி ஆதித்யனின் அம்மாவிடம் பேசச் சொல்ல வேண்டியதுதான்..."

"கேட்டுப் பார்த்தேனே... அவர் முடியாதுன்னு சொல்லி விட்டார். கிராமத்துக்காரங்க பெரிய வீட்டுப் பொம்பளை களை நேரில் பார்த்துப் பேசமுடியாதாம்..."

"என்னால் மட்டும் முடியுமா?"

"நீ அவர் வீட்டுக்கு விருந்தாளியாய் போகிறாய் உன் கம்ப்யூட்டர் இன்ஜினீயர் படிப்பை... கட்டட இன்ஜினீயர் படிப்பாய் மாற்றிச் சொல்லப் போகிறாய். பழமையான கிராமத்துக் கட்டடங்களைப் போட்டோ பிடிக்க நீ ஆதித்யனின் வீட்டில் நுழையப் போகிறாய்..."

"அம்மா... அது எப்படிம்மா இவ்வளவு அறிவையும் இத்தனை நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தீங்க..."



"அடுப்படியில், கடுகு டப்பாவில் ஒளித்து வைத்திருந்தேன். இப்போ அதுவாடா முக்கியம்?"

ரமணன் தேனிக்கு அருகிலிருந்த ஆண்டிப்பட்டிக்குள் வெற்றிகரமாய் நுழைந்து விட்டான். கோமளவள்ளி கூறிய 'வேண்டப்பட்டவர்...' தன் வீட்டில் விருந்தாளியாய் அவனை தங்க வைத்துக்கொண்டார்.

"எங்க தூரத்துச் சொந்தம்... மெட்ராஸில் இருந்து கிராமப் பக்கத்தில் இருக்கும் அரண்மனை போல வீடுகளை படம் பிடிச்சுட்டுப் போக வந்திருக்குது. நம்ம வீட்டில் படம் பிடிக்க அனுமதி தரணும்..."

ரமணன்... ஆதித்யனின் வீட்டில் புகைப்படம் எடுத்துக்கொள்ள அனுமதி கிடைத்துவிட்டது.

கையில் காமிராவுடனும் மனதில் உதறலுடனும் ரமணன்... ஆதித்யனின் வீட்டில் புகுந்து விட்டான். பெயருக்கு போட்டோக்களை எடுத்துக்கொண்டிருந்தவனுக்கு நாவறளவும் அருகே வந்த பெண்ணைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் தண்ணீர் கேட்டான்.

"இந்தாங்க..." என்று ஒரு வளைக்கரம் அவனுக்கு தண்ணீர் தந்தது.

அவளது முகத்தைப் பார்த்தவனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் ஓர் அதிர்வு உண்டானது.

வானத்து நிலவைப் பிடித்து தரையில் விட்டதைப்போல அவள் அவ்வளவு அழகாக இருந்தாள். பாவாடை தாவணியில் வசீகரமாய் தெரிந்தாள்.

ரமணன் அவசரமாய் பார்வையை விலக்கிக்கொண்டதை அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள். மடக்மடக்கென்று தண்ணீரைக் காலி பண்ணிய ரமணன், காலி செம்பை அவளிடம் நீட்டினான்.

# 41

"ஏன் இப்படி மந்திரிச்சுவிட்ட கோழி போல ஒரு மார்க்கமாய் விழிக்கிறீங்க..." என்று கேட்டாள், அந்த தாவணிப்பெண்.

முதன்முறையாக ஒரு அழகான பெண் அருகில் வந்து பேசியும் அவளிடம் பதிலுக்கு வார்த்தையாட முடியாமல் போன தன் விதியைப் நொந்துகொண்டே ரமணன் முகம் திருப்பிக் கொண்டு பதில் சொன்னான்.

"ப்ளீஸ்... என்னிடம் பேசாதீங்க..."

"ஏன்... நீங்க என்ன எனக்கு எதிரிக்காரங்களா?"

"இதுவரை அப்படியில்லைம்மா... இனி அப்படி ஆகிவிடக்கூடாதுன்னுதான் பயமாக இருக்கிறது..."

"நீங்க பேசறது எனக்குச் சுத்தமாக புரியவில்லை... மெட்ராஸ்காரங்க எல்லோருமே இப்படித்தான் பேசுவீங்களா?"

"அம்மா... தாயே... பரதேவதை... நீபாட்டுக்கு என்னுடன் பேசி வைக்க... நான்பாட்டுக்கு உன்னிடம் பதில் சொல்லி வைக்க, உன் ஊர் ஆள்கள் என்னை வெட்டரிவாளையும் வேல்கம்பையும் தூக்கிக்கொண்டு துரத்தி வந்தால் என்ன செய்வது? நான் பிழைத்துப்போக கருணைகாட்டி என்னை விட்டு விலகிப் போம்மா..."

அந்தப் பெண் ரமணனை விசித்திரமாக பார்த்துவிட்டு...

"நீங்க நிறைய சினிமாப் படம் பார்ப்பீங்களா..." என்று கேட்டுவிட்டு உள்ளே சென்றது.

நிம்மதிப்பெருமூச்சுடன் காமிராவை வியூ பார்த்த ரமணனின் கேமிரா வியூவில் சுவரில் மாலை போட்டு மாட்டி



வைக்கப்பட்டிருந்த ஒரு வாலிபனின் புகைப்படம் தெரிய, அவன் திரும்பிப் பார்க்காமலேயே...

"அது யார்..." என்று வினவினான்.

"என் அம்மாவின் தம்பி..." என்றது அந்த அழகுப் பைங்கிளி.

""ஏம்மா... நீ இன்னும் போகவில்லையா?"

"நான் போய்விட்டால்... நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு யார் பதில் சொல்வாங்க?"

"நான் கேள்வியே கேட்கவில்லை..."

"இப்போது கேட்டீங்களே..."

"என்ன கேட்டேன்?"

"என் ஆதித்யன் மாமாவைப் பார்த்து யாருன்னு கேட்டீங்களே..."

'இவன்தான் ஆதித்யனா?' ரமணன் பரிதாபத்துடன் அந்த புகைப்படத்தைப் பார்த்தான்.

"பாவம்... இறந்துவிட்டாரா?"

"ஆமாம்... அதற்கு நீங்க ஏன் வருத்தப்படுகிறீங்க?"

"ஆக்சுவலாய் நீதான் வருத்தப்படணும். எங்கே... நீதான் ஆதித்யன் இறந்துபோய் விட்டாருன்னு சொல்வதை அவர் டூருக்குப் போயிருக்கிறார் என்பது போலச் சொல்கிறாயே. அதுதான் உனக்குப் பதில் நான் வருத்தப்படுகிறேன்..."

"நல்லா சொன்னே தம்பி..." என்று ரமணனின் முதுகிற்குப் பின்னால் ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

அறுபது வயது மதிக்கத்தக்க இருந்த அந்தப் பெண்மணி கண்களில் சோகத்தோடு அவனருகே வந்தாள்.

''இவள் மட்டுமில்லை. இந்த வீட்டில் யாருக்குமே அவனின் நினைவு வருவதில்லை...''

''நீங்க...''

''அவனைப் பெற்ற தாய்...''

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டதை எண்ணி மகிழ்ந்துபோன ரமணன்... அவளிடம் பேச வாய் திறந்தபோது... அவனுடைய வாயைப் பார்த்துக் கொண்டு நிற்கும் அந்தப் பெண்ணின் நினைவு வந்துவிட... அவன் யோசனையுடன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவள் வெட்கப்பட்டாள்.

'இதைப் பார்ரா... இவள் என்னை சைட் அடிக்கிறாள் போல...' ரமணன் விளக்கெண்ணெய் குடித்தவன் போல ஆகிப்போனான்.

மனதிற்குள் ஐடியா ஒரு நொடியில் உதயமாக... அந்தப் பெண்ணைக் காதலுடன் பார்த்து...

''குடிக்க ஒரு வாய் காபி கிடைக்குமா?'' என்று கேட்டான்.

''காபித் தண்ணிதானே... நானே போட்டுக் கொண்டு வருகிறேன்.'' அவள் சிட்டாக உள்ளே பறந்தாள்.

'நீ எந்தத் தண்ணியைப் போட்டுக்கொண்டு வந்தால் எனக்கு என்ன ஆச்சு... இடத்தை காலி பண்ணினால் சரி...' என்ற நிம்மதியுடன் ஆதித்யனின் தாய் சாவித்திரியைப் பார்த்தான் ரமணன்.

''அம்மா... நான் சென்னையிலிருந்து உங்களைப் பார்க்கத் தான் வந்தேன்...'' என்று ஆரம்பித்து ஆதித்யனைப் பற்றிய அனைத்து விவரங்களையும் சொல்லி முடித்து விட்டான்.

சாவித்திரி திக்பிரமை பிடித்து நின்று விட்டாள்.

''என் மகன் லாரியடித்து சாகலையா?''

''இல்லைன்னுதான் கைலாஷ் சொல்கிறாரு...''



''என் ஆதித்யனுக்கு மகன் இருக்கிறானா?''

''ஆமாம்... கைலாஷிடம் பத்திரமாய் வளர்கிறான்...''

''உன் விலாசம் என்ன தம்பி...''

ரமணன் சொல்லிக்கொண்டிருக்கும்போது கையில் 'காபித் தண்ணி' தம்ளருடன் அந்தச் சிட்டு வந்து விட்டாள்.

''தேங்க்ஸ்...'' கிளம்பப் போகும் தைரியத்தில் அவன் அந்தப் பெண்ணை நன்றாகப் பார்த்தான்.

''என் பெயர் மீனாட்சி...'' என்றாள் அவள் வெட்கத்துடன்.

''அது டி.வி. சீரியலாச்சே... முடிந்துவிட்டதே...'' என்றான் அவன்.

''ஊஹூம்... மீனாட்சிங்கிறதுதான் என் பெயர்...'' அவள் மாற்றிச் சொன்னாள்.

''ஓஹோ... குட்பை மீனு...'' அவன் கையாட்டிக் கொண்டே வாசலுக்கு பாய்ந்து விட்டான்.

## 42

பவித்ரனுக்கு உடைமாற்றிவிட்டுக் கொண்டிருந்த கைலாஷ், அழைப்புமணியின் ஒலியைக் கேட்டுக் கதவைத் திறந்தான். வெளியே நின்றுகொண்டிருந்தவர்களைப் பார்த்ததும் ஒரு எட்டு பின்னுக்கு நகர்ந்து விட்டான். அவன் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது.

''கைலாஷ்...'' என்றபடி சேலை முந்தானையை வாயில் சுருட்டி வைத்து அழுதபடி நின்றிருந்தாள் சாவித்திரி. அருகே ஆதித்யனின் அப்பா ராஜதுரை நின்று கொண்டிருந்தார்.

''நீங்களா...'' கைலாஷ் பதறிப்போனவனாக கேட்டுக் கொண்டிருக்கும்போதே...

''என்னைப் பெத்த ராசா... கட்டித்தங்கம்... ஆதித்யா... என் செல்வமே...'' என்றபடி பாய்ந்து பவித்ரனை அள்ளி எடுத்து அணைத்துக்கொண்டு கதற ஆரம்பித்துவிட்டாள் சாவித்திரி.

அவசரமாய் வாசல் கதவை மூடினான் கைலாசம். ஆதித்யனின் அப்பாவும் மனைவிக்கு குறையாத கண்ணீருடனும் அழுகையோடும் பேரனைக் கட்டிக் கொண்டார்.

அந்த வயோதிக தம்பதிகளின் துயரம் வார்த்தைகளில் வடிக்க இயலாததாக இருந்தது. சாவித்திரி... தன் வயதையும் பொருளாதார அந்தஸ்தில் தான் இருந்த மிக உயர்ந்த நிலைமையையும் மறந்து கைலாஷின் கால்களில் விழுந்து வணங்கி விட்டாள்.

அவ்வளவு பெரிய கோடீஸ்வரி தன் காலில் விழுந்ததைக் கண்டதும் கைலாஷ் திகைத்துவிட்டான். அவனுக்குப் பேச நா எழவில்லை.

''அம்மா... என்ன இது... நீங்கள் போய் என் காலில் விழலாமா?''

''விழுந்தால் தம்பில்லைடா மகனே... உன் வயது சின்னதாக இருக்கலாம். நீ செய்திருக்கும் காரியம் மிகப் பெரியது. என் மகனின் ரத்தத்தைக் காப்பாற்றி உன் மகன் போல் வளர்த்திருக்கிறாயே. உனக்கு கோயில் கட்டினாலும் தகும்டா ராசா...''

''பெரிய வார்த்தைகளையெல்லாம் பேசாதீங்கம்மா. ஆதித்யன் எனக்குப் பெற்ற தாய் தகப்பனுக்கு சமமானவன்...''

''அதனால்... அவன் பெற்ற பிள்ளைக்கு நீ தாயும் தகப்பனுமாய் இருக்கணுமுன்னு நினச்சயா. ஐயோ... ஆதித்யா, நான் பெற்ற மகனே... இப்படிப்பட்ட நண்பன் இருக்கும்போது... இந்த அம்மா வேண்டாமுன்னு உன்



பிள்ளையை அவன் கையில் கொடுத்துவிட்டுப் போயிட்டயா? நான் என்னடா பாவம் செய்தேன். நீ பெற்ற பிள்ளையின் முகத்தில் உன் முகத்தைப் பார்த்து... மிச்ச மிருக்கும் வாழ்நாளை ஓட்டி விடமாட்டேனா?''

கைலாஷ் எவ்வளவோ மறுத்துப் பார்த்தான். ஆதித்யனின் மரணத்திற்கு அவன் குடும்பம்தான் காரணம் என்று எதிர்த்துப் பார்த்தான்.

''இல்லை கைலாஷ்... எனக்கு இது தெரியாது. இப்படி யொன்று நடந்திருக்கலாமுன்னு நீ சந்தேகப்படுவதை அன்றைக்கே என்னிடம் நீ சொல்லியிருந்தால் அந்த வையா புரியை உயிரோடு புதைத்திருப்பேன். இப்போதும் ஒன்றும் நான் சும்மா இருந்து விடவில்லை. இந்த ராஜதுரையின் மகனின் மேல் கை வைப்பதற்கு ஒருவனுக்கு தைரியமே வரக்கூடாது. இவன் உயிரையே எடுத்திருக்கிறான். நான் சும்மா விட்டு விடுவேனா...'' ராஜதுரையின் பெரியமீசை மறைத்த முகத்தில் கோபம் கொந்தளித்தது.

அப்ப ஏதோ நடந்திருக்கிறது என்பதை கைலாஷ் யூகித்து விட்டான். அவன் யூகம் பொய்யாகவில்லை.

''அவனை வெட்டிச் சாய்த்துவிட்டுத்தான் கிளம்பி வந்திருக்கிறேன். எந்த மண்ணில் என் மகனின் ரத்தம் பாய்ந்ததோ அதே மண்ணில் அவன் ரத்தமும் பாய்ந்து விட்டது. இதே சென்னையில் என் மகன் செத்துக்கிடந்த ரோட்டில் அவனும் அநாதைப் பிணமாய் கிடக்கிறான். என் மகனுக்கு நடந்தது போலவே அவனுக்கும் ஆக்ஸிடெண்ட் நடந்துவிட்டதாக கேஸ் பதிவாகிவிட்டது. பகை முடித்து விட்டுத்தான் என் மகன் பெற்ற மகனைப் பார்க்க நான் வந்திருக்கிறேன்...''

இதுதான் கைலாஷ் பிறந்த ஊரின் துடிப்பு. பதிலுக்குப் பதில் ரத்தத்திற்கு ரத்தம் என்று பகை முடிப்பவர்கள்

அவர்கள். நண்பனின் கொலைக்கு நியாயம் கிடைத்துவிட்ட நிம்மதியில் கைலாஷ் கண் மூடி அமர்ந்து விட்டான்.

"செத்துட்டானாப்பா... அந்தக் கொலைகாரன் செத்து விட்டானா..." அவன் வாய் திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"என் பிள்ளையின் முகத்தை என் பேரனின் முகத்தில் பார்க்கிறேன். இவனை இங்கே விட்டுவிட்டு அங்கே நான் நிம்மதியாக இருக்க முடியுமா? உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன் ராசா... சாமியிடம் வரம் கேட்டது போல உன்னிடம் வரம் கேட்கிறேன். என் பேரனை எனக்குக் கொடுத்துவிடப்பா..."

கையெடுத்துக் கும்பிட்டு சாவித்திரி கேட்கும்போது கைலாஷினால் மறுத்துப்பேசமுடியவில்லை. அதே சமயம் பவித்ரனைப் பிரியவும் அவனுக்கு மனமில்லை. அவன் கண்கலங்கினான்.

"பெற்ற மகனைப்போல நான் இவனை வளர்த்து விட்டேனேம்மா..."

"நான் பெற்ற மகனுக்குப் பதில் இவன் முகத்தை பார்த்துக் கொண்டே என் கண்ணுக்குள் வைத்து வளர்ப்பேண்டா... என் பேரனை என்னிடம் கொடுத்து விடு..."

வேறுவழியில்லாமல் கைலாஷ்... பவித்ரனை சாவித்திரியிடம் ஒப்படைத்தான். அவன் தேம்பி அழ... சாவித்திரி அவனைச் சமாதானப்படுத்தினாள்.

"நீயும் வேலைக்குப் போகிறவன். நீ கட்டிக்கொள்ளப் போகும் பெண்ணும் வேலைக்குப் போகிறவள். பிள்ளையை யார் கவனிப்பா. ஏதோ ஒரு காப்பகத்தில் பிள்ளையை விடுவதற்குப் பதில் என்கிட்ட விடுடா. நீ எப்போது வேண்டுமானாலும் இவனைப் பார்க்க வாடா... உன் ஆதித்யன் இவன்தான்னு நினைச்சுக்க. அவனும் எங்கள் வீட்டில்தானே இருந்தான்?"



கைலாஷை சமாதானப்படுத்திய சாவித்திரியும் ராஜதுரையும் அவனுக்கு தாய் தந்தையாக நின்று அவனுக்குப் பெண் கேட்டு துர்காவின் வீட்டிற்குப் போனார்கள்.

"இவன் எங்களுக்கு வளர்ப்புமகன். உங்கள் பெண்ணைக் கொடுங்க. கண்கலங்காமல் கடைசிவரைக்கும் ராணி போல் வைத்துக் காப்பாற்றுவான்..."

"ரொம்ப சந்தோஷம்.. கல்யாண முகூர்த்தத்தை நீங்க சொல்லுங்க. மேடையில் வந்து பெண்ணைக் கைபிடித்து உங்கள் மகனுக்கு தாரை வார்த்துக் கொடுக்கிறோம்..."

துர்காவின் பெற்றோர் கலகலப்பாக சம்மதித்தனர். திருமணத்தின்போது ஆண்டிப்பட்டி கிராமமே மணமகனின் சொந்தமாய் திருமண மண்டபத்தை நிறைந்திருக்க... மீனாட்சி ரமணனைச் சுற்றிச் சுற்றி வந்தாள். தன் ஊரில் இருப்பதால் தைரியம் வரப்பெற்ற ரமணன்... மீனாட்சியிடம் பேச ஆரம்பித்து விட்டான்.

"என்ன தம்பி... பேச்சுவார்த்தையெல்லாம் பலமா இருக்கு..." என்று அவன் தோளில் கை வைத்தார் மீசைக்கார பயில்வான் ஒருவன்.

"நீங்க யாருங்க..."

"மீனாட்சிக்கு அப்பா...

"அப்ப... நீங்கதான் என் பெரியப்பா..."

"அது... அந்த பயம் இருக்கட்டும்... யாருகிட்ட.... ம்ம்?" மீசையை முறுக்கியபடி பயில்வான் சென்றுவிட, ரமணன்... மீனாட்சியின் பக்கம் பார்க்கக்கூட இல்லை...

தேனிலவிற்கு கோவா சென்ற கைலாஷும் துர்காவும் கடற்கரை ஓரமாய் நடந்து கொண்டிருந்தனர். கைலாஷின் முகம் வாடியிருப்பதைக் கண்ட துர்கா... அவன் மனம்

ஆதித்யனையும் பவித்ரனையும் நினைத்துக்கொண்டிருக்கிறது என்பதை புரிந்துகொண்டாள். அந்த மாலை நேரத்தில் மழை வந்து சாரல் அவர்களை நனைக்க... அவள் மெல்ல கண்சிமிட்டிப் பாடினாள்.

'அந்தி மழை பொழிகிறது...'

அவன் கண்கள் மின்ன ஆசையுடன் அவளை அணைத்துக்கொண்டான். சோகத்திலிருந்து அவனை மீளவைத்த அந்தி மழைக்கு மனதிற்குள் நன்றி சொல்லிக் கொண்டாள் துர்கா.

**முற்றும்**